இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 111 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 04 வெள்ளிக்கிழமை 17.03.2017

## யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்படவிருந்த ஒரு கோடி ரூபா பெறுமதியான கஞ்சா

கண்டியில் நேற்றுச் சிக்கியது

கொழும்பு, மார்ச் 17
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படவிருந்த சுமார் ஒரு கோடி ரூபா >> 04

## பன்னாட்டு நீதிப் பொறிமுறை கோரி வடக்கு-கிழக்கில் நேற்று கவனவீர்ப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 17
பன்னாட்டு நீதிப் பொறிமுறையை வலியுறுத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு-கிழக்கில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றன. அதன் இறுதியில் ஐ.நாவுக்கு அனுப்பி வைக்கவென மனுக்களும் கையளிக்கப்பட்டன. வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. >> 24

## மைத்திரி ஆட்சியில் ஆறு சித்திரவதைகள்

கொழும்பு, மார்ச் 17.
ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர் 6 சித்திரவதைச் சம்பவங்கள் நடை >> 04

## இராணுவ முகாம் முன் போராட அனுமதி

பொலிஸாரின் கோரிக்கையை நேற்று நிராகரித்தது நீதிமன்றம்

முல்லைத்தீவு, மார்ச் 17
கேப்பாப்பிலவு இராணுவத் தலைமையகத்துக்கு முன்பாகப் பொதுமக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ள அறவழிப் போராட்டத்தை இடம்மாற்றுவதற்கு உத்தரவிடுமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை முல்லைத்தீவு நீதிவான் மன்றம் நேற்று நிராகரித்தது.
குழப்பமில்லாது போராட்டத்தைத் தொடருமாறு கேப்பாபிலவு மக்களுக்கு அனுமதி வழங்கினார் நீதிவான்.
தமது பூர்வீகக் காணிகளில் அமைந்துள்ள முல்லைத்தீவு இராணுவத் >> 04

# கலப்பு நீதிமன்று அமைக்க சட்டத்தில் இடமேயில்லை



இப்படிச் சொல்கிறார் அயலுறவு அமைச்சர் மங்கள

கொழும்பு, மார்ச் 17
பன்னாட்டு விசாரணைப்பிடிக்குள் இருந்து இலங்கையை மீட்டெடுத் தது கூட்டு அரசு அடைந்த மிகப்பெரிய வெற்றியாகும். போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு அரசமைப்பில் இடமில்லை. உரிய வழியில் உள்ளக விசாரணையை முன்னெடுப் பதற்கு உலக நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வழங்கியுள்ளன.
இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையைப் பரிந்துரைத்த தீர்மான வரைவு அடுத்த வாரம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படுகிறது. இந்தத் தீர்மான வரைவுக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையிலேயே, அவர் நேற்றுக் கொழும்பில் வைத்து மேற்கண்டவாறு கூறினார்.
அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 24

## ஜோசப் முகாம் சித்திரவதை; ஜகத் ஜயசூரியவை விசாரிக்கவேண்டும்

பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 17
வவுனியா ஜோசப் முகாமில் பலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமைக்குத் தெளிவான உறுதியான ஆதாரங்கள் போதியளவு >> 04

## ஆட்சி மாற்றத்தால் அபாயம் நீங்கியது

மகிந்தவும் தப்பினார்

கொழும்பு, மார்ச் 17
போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணையை நடத்தவே ஐ.நா. தீர்மானித்திருந்தது. முன்னைய அரசு இதை எதிர்த்திருந்தாலும் ஐ.நா. அதனை முன்னெடுத்திருக்கும். >> 04

## தாஜுதீன் கொலை; திட்டமிட்டு கிழிக்கப்பட்ட பதிவுப் புத்தகம்

கொழும்பு, மார்ச் 17
ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவு பதிவுப் புத்தகத்தின் பல பக்கங்கள் திட்டமிட்டுக் கிழிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர். >> 04





அப்ப அவரைவிட இவருக்குத்தான் செலவு அதிகமோ...

## கனடாவுக்கு ஏற்றுமதியாகும் பனம் கைப்பணி பொருள்கள்

நீர்வேலி அருங்கலைகள் மன்றம் நடவடிக்கை

அச்சுவேலி, மார்ச் 17
நீர்வேலியில் பனை ஓலையில் இருந்து தயாரிக்கப்பட்ட பாவனைப் பொருள்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருள்கள் கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து பனை ஓலை மற்றும் பனை ஓலை ஈர்க்கு ஆகியவற்றில் >> 04



முகப்பு வரைபடம்

## சங்கானைச் சந்தைத் தொகுதிக்கு ரூபா 80 மில்லியன் நிதி ஒதுக்கீடு

சரவணபவன் எம்.பியின் நடவடிக்கையால்

யாழ்ப்பாணம், மார்ச் 17
சங்கானை நவீன சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற >> 24

## சட்டத்தில் இடமிருக்கிறது என்கிறார் சுமந்திரன் எம்.பி

கலப்பு நீதிமன்றம் அமைக்க



யாழ்ப்பாணம், மார்ச் 17
பன்னாட்டு நீதிபதிகள் விடயத்தில் கூட்டமைப்பு விட்டுக் கொடுப்புக்குத் தயாரில்லை. பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைகளைச் செய்வதற்கு அரசமைப்பில் எந்தத் தடையும் இல்லை. அப்படி ஏதாவது தடை இருக்கின்றது என்றால் அந்தத் தடையை நீக்கிவிட்டு அதனைச் செயற்படுத்துங்கள். >> 04

## பலிப் பூசைக்குப் பின் மிருகங்கள் வீடுகளுக்கே திரும்பவேண்டும்

கூட்டாகப் பலியிடல் எங்கும் நடக்கக்கூடாது என்று மேல் நீதிமன்றம் தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச்17
சமய நம்பிக்கைப்படி மிருகங்களைப் பலியிட விரும்புவோர் அவற்றைக் ஆலயத்தில் நேர்த்திப் பூசைக்கு உட்படுத்திவிட்டு வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட >> 24

## அரச தலைவர்கள் யாழ். வந்த செலவு மட்டும் ரூ. 95 லட்சம்

மைத்திரியின் 4 பயணங்களுக்கு 67 இலட்சம்
மகிந்தவின் 3 பயணங்களுக்கு 28 இலட்சம் >> 24

## மைத்திரிக்காக சிறப்பு இடிதாங்கி

அதற்கும் செலவானது 2 இலட்சத்து 45 ஆயிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்வில் >> 22

வர்தன ரன்வரம அடகுச் சேவை மூலம்
குறைந்த வட்டி வீதமும், அதிக முற்பணமும்

காரட் 24
ரூ. 37,000/-

24 மணி நேர அழைப்பு நிலையம் (011) 2350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# நியாயமான தீர்வு மூலம் பழைய தலைவர்களுக்கு புதிய பாடம் புகட்டுக

## நல்லாட்சி அரசிடம் கோருகிறார் மனித உரிமைச் செயற்பாட்டாளர்

கொழும்பு, மார்ச் 17

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கி அதனூடாக முன்பிருந்த தலைவர்களுக்கு மறக்கமுடியாத பாடத்தை புகட்டவேண்டும் என்று மனித உரிமை செயற்பாட்டாளரான பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.



2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நல்லாட்சி அரசை வெற்றிபெறச் செய்த சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புதிய அரசமைப்புக்காக ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளிலான மாநாடு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுந்தரப்பினரின் எதிர்ப்புக்கள் மத்தியிலும் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு, வழங்கிய வாக்குறுதியின்படி புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்று நல்லாட்சி அரசை ஆட்சிபீடத்திற்கு ஏறச்செய்த சிவில் அமைப்புக்கள் கூட்டாக இணைந்து வலியுறுத்தியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சில மூத்த உறுப்பினர்கள் புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெடுப்புக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுவரும் நிலையிலேயே சிவில் அமைப்புக்கள் இதனை வலியுறுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ச தினமும் மாலைவேளையில் விகாரைதோறும் சென்று புதிய அரசமைப்புக்கு எதிராக சிறப்பாக இன ஐக்கியம், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வுக்கு எதிராகச் சிங்களவர்களே விழித்தெழுங்கள் என்று குரல் கொடுக்கின்றார். இதனைக் கூறுவதைத்தவிர அவருக்கு வேறு வழியில்லை. தான் செய்த களவுகள், அநாவசிய விடயங்கள், படுகொலைகள், காணாமல்போகச் செய்தவை என்பவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர் தினமும் தெற்கில் சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடுவதன் ஊடாகவே சிறைக்கூடத்திற்குச் செல்வதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

மைத்திரி - ரணில் தலைமையிலான அரசு அதிகாரப் பகிர்வுக்கு முன்நின்று, தெற்கில் தம்து நிலைப்பாட்டை அறிவித்து, தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை வழங்கவேண்டும். மாறாக மகிந்த ராஜபக்சவின் பாத்திரத்தை அவர்களும் அணிந்து நாடகத்தை அரங்கேற்ற முடியாது.

ஆளுந்தரப்பினர் புதிய அரசமைப்பு மற்றும் நல்லிணக்கச் செயன்முறை குறித்து தெற்கில் பேசுவதில்லை. எனினும் நாங்கள் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகக் குரல் கொடுத்தது போன்று இன்று அனைவரும் ஒன்றிணைந்து இதுபற்றி பேசவேண்டும். புதிய அரசமைப்பை வெற்றிகொண்டு, முன்பிருந்த இந்த நாட்டுத் தலைவர்களுக்குப் பாடம் புகட்டும் வகையில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியநியாயமான அதிகாரப் பகிர்வை வழங்க தெற்கில் முன்நின்று செயற்படவேண்டும் - என்றார். (த-10)

## வாக்காளர்பதிவுக்கான சிறப்புச் சட்டவரைவை வெளியிடத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 17

இடம்பெயர்ந்த மக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் சிறப்புச் சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதனை நாடாளுமன்றுக்குக் கொண்டுவருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போர், இயற்கை இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுள் சிலர் நிரந்தர முகவரிகளின்றி இடம்பெயர்ந்தவர்களாகவும், அகதிகளாகவும் தொடர்ந்தும் வசித்து வரும் அவல நிலமை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இவர்களின் வாக்குரிமையையும் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கிலேயே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதற்கிணங்க, இடம்பெயர்ந்தோர் தொடர்பில் சிறப்பு உறுப்புரைகளை உள்ளடக்கிச் சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்ட வாக்காளர்களைப் பதிவு செய்யும் சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

குறித்த சட்டவரைவை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைப்பதற்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவினால் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-10)

## இலங்கையிலிருந்து லண்டன் பயணித்தவர் நேற்றுக் கைது

கொழும்பு, மார்ச் 17

இலங்கையிலிருந்து லண்டன் சென்றவர் ஹீத்ரூ வானூர்தி நிலையத்தில் வைத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். கொழும்பு கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தித் தளத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட பிரிட்டனுக்கான எயர்லங்கா வானூர்தியில் பயணித்த ஒருவரே இவ்வாறு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

லண்டனின் ஹீத்ரூ வானூர்தி நிலையத்தில் பிற்பகல் 2 மணியளவில் தரையிறங்கியபோது பயணிகளை இருக்கைகளில் அமருமாறு அறிவித்த பணியாளர்கள் மெட்ரோபொலிற்றன் பொலிஸாரின் பரிசோதனையின் பின்பே பயணிகள் இறங்குவதற்கு அனுமதிக்கப்படுவர் என்று குறிப்பிட்டனர்.

இதனையடுத்து இலங்கையிலிருந்து பயணித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டமைக்கான காரணங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை. (த-5)

சோமாலியக் கடற்கொள்ளையர்களால்

## கடத்தப்பட்ட இலங்கையர் 8 பேரின் விவரம் வெளியீடு

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட எண்ணெய்க்கப்பலில் பணிபுரிந்துகொண்டிருந்த 8 இலங்கையர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன என்று இலங்கை அயலுறவு அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தத் தகவல்களின்படி இந்த 8 இலங்கையர்களின் பதவிகளும் இருப்பிடங்களும் வருமாறு:

கப்பல் கப்டன் நிகலஸ் என்டனி (மட்டக்குளி), பிரதம அதிகாரி ருவன் சம்பத் (மத்துகம), பிரதான பொறியியலாளர் ஜயந்த களுபோவில (ஹொரணை), இரண்டாம் அதிகாரி திலீப ரணவீர (காலி), இரண்டாம் பொறியியலாளர் ஜனக சமேந்திர (தெவிநுவர), மூன்றாம் நிலை அதிகாரி லஹிரு இந்துநில் (அக்குரஸ்ஸ), இரண்டாம் அதிகாரி சுனில் பெரேரா (கந்தானை), சமையற்காரர் ஏ.சண்முகம் (நீர்கொழும்பு).

இப்போது கிடைத்துள்ள தகவல்களின்படி இந்த 8 இலங்கையர்களும் எந்தவிதமான துன்பங்களும் இல்லாமல் நலமாக இருக்கின்றனர் என்று தெரியவந்திருக்கிறது என்று கடற்படைப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் சமிந்த வலாக்குலுகே தெரிவித்தார். (த-4)

## அலுவலகத்துக்கு வருவதை தவிர்க்கும் பிரதேச செயலர்

*மாகாண அரசியல்வாதியுடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமா?*

அம்பாறை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா கடந்த சில வாரங்களாகப் பிரதேச செயலகத்துக்கு வருகை தருவதைத் தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சில வாரங்களுக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வு பிரதேச அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டால் தடுக்கப்பட்டமையை அடுத்தே பிரதேச செயலாளர் இவ்வாறு பிரதேச செயலகத்துக்கு வருகை தருவதிலிருந்தும் தவிர்ந்து வருகின்றார் எனக் கூறப்படுகிறது.

சமூக அக்கறையும், நேர்த்தியான நிர்வாக சேவை அனுபவத்தையும் கொண்ட பிரதேச செயலாளர் ஹனீபாவின் இந்த இடைக்கால சேவை இழப்பு தொடர்பில் அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் புதிய கட்டட மொன்று சில வாரங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்படவிருந்தது. அந்த நிகழ்வுக்கான அழைப்பிதழில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நசீருடைய பெயர் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து, அமைச்சரின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனையடுத்து குறித்த திறப்பு விழா நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய-49)

## நீர் சுத்திகரிப்புக்கு உதவ சவூதி தயார்

கொழும்பு, மார்ச் 17

இலங்கை அரசு மேற்கொண்டுவரும்நீர் சுத்திகரிப்புத்திட்டங்களுக்கு சவூதி உதவத் தயார் என அந்த நாட்டின் சுற்றுச்சூழல், நீர் மற்றும் விவசாய அமைச்சர் அப்துர் ரஹ்மான் அப்துல் முஹ்சின் தெரிவித்தார்.



சவூதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை அண்மையில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் போது சவூதி அமைச்சர் அப்துர் ரஹ்மானுடன் பேச்சுக்கள் நடத்தினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் நீர் சுத்திகரிப்புத் திட்டங்களுக்கு உலகின் மாபெரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கொண்டுள்ள சவூதியின் தொழில்நுட்பங்களை இலங்கையிலும் பயன்படுத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

பேச்சுக்களின்போது, குறித்த துறையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் பொருட்டுச் சவூதியின் ஜுபைல் நகரில் அமைந்துள்ள மாபெரும் கடல் நீர் சுத்திரிப்பு நிலையத்தைப் பார்வையிட வருமாறு இலங்கைத் தொழில்நுட்பக் குழுவுக்கு சவூதி அமைச்சர் அழைப்பு விடுத்தார். (த-10)

## இன்றிலிருந்து மழை குறையும்

நாடுமுழுவதும் ஆங்காங்கே தற்போது நிலவும் மழையுடனான காலநிலை படிப்படியாக மாறி மழை குறைவடையும் சாத்தியம் தென்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

பருவக்காற்று காரணமாகக் கடந்த சில தினங்களில் நாட்டின் பல பகுதிகளில் மாலைவேளையில் பெய்து வந்த பலத்த மழை படிப்படியாகக் குறைவடையும். இறுதியாக நேற்று காலி மாவட்டத்தில் பலத்த மழை பெய்துள்ளது.

இன்று முதல் மழை குறைவடையும் அறிகுறிகள் தென்பட்டபோதிலும் நாட்டின் ஒரு சில பகுதிகளில் பி.ப. 2 மணிக்குப் பின் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். மழை பெய்யும்போது ஏற்படக்கூடிய மின்னல் தாக்கத்திலிருந்து தப்பிக்கப் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டியது அவசியம் என்று நிலையம் மேலும் தெரிவித்தது. (த-4)

## டெங்கிலிருந்து மக்களை மீட்க கிண்ணியாவில் 700 படையினர்

கொழும்பு, மார்ச் 17

கிண்ணியா பிரதேசத்தில் கோரத் தாண்டவம் புரிந்துகொண்டிருக்கும் டெங்கிலிருந்து பிரதேச மக்களைக் காக்கவென 700 இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அங்கு இதுவரை 2 ஆயிரத்து 100 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். சிலர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்த நிலையால், கிண்ணியாவிலுள்ள 66 பாடசாலைகள் கடந்த மூன்று நாள்களாக மூடப்பட்டிருப்பதாகக் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

திருகோணமலை மாவட்டம் டெங்கு அபாய வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நிலமை மேலும் விபரீதமாகாமல் தடுப்பதற்கான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் ஆலோசகர் மருத்துவர் எஸ். அருள்குமார் தெரிவித்தார்.

நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக கொழும்பிலிருந்து வைத்திய நிபுணர்களின் குழுவொன்று கிண்ணியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-4)

இலங்கையின் நற்பெயரைக் காத்தமைக்காக

# நாட்டு மக்களிடம் எங்கள் கூட்டு அரசு கோராது மன்னிப்பு

## மகிந்தவுக்கு மங்கள பதிலடி

கொழும்பு, மார்ச் 17
நாட்டில் அனைத்துச் சமூகத்தினரையும் ஒன்றிணைக்கும் புனிதமான நடவடிக்கைக்காகவும், பன்னாட்டு அரங்கில் நாட்டின் நற்பெயரை நிலை நிறுத்தியதற்காகவும் ஒருபோதும் கூட்டு அரசு மன்னிப்பைக் கோராது.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கடந்த 13 ஆம் திகதி பத்திரிகை அறிக்கை வெளியிட்டிருந்தார். புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், ஜெனிவாவில் இணை அனுசரணை வழங்கியமை தொடர்பில் இலங்கை அரசு நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் வழங்கும் பத்திரிகை அறிக்கையை அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் 15 ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டின் முன்னாள் அரச தலைவர் பிழையான தகவல்களை வழங்கி மக்களைப் பிழையாக வழி நடத்த முயல்கின்றார். இப்படிச் செய்யும் போது அதற்குப் பதிலளிக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகின்றேன்.

இலங்கையில் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி விட்டுப் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருவது தேசத் துரோகமல்ல.

இலங்கையின் அனைத்துச் சமூகத்தினரையும் ஐக்கியப்படுத்தும் புனிதமான நடவடிக்கைக்கான கூட்டு அரசு ஒருபோதும் மன்னிப்பு கோராது. பன்னாட்டு அரங்கில் நாட்டின் நற்பெயரை மீண்டும் உறுதி செய்ததற்காக நாங்கள் ஒருபோதும் மன்னிப்புக் கோரமாட்டோம்

நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும். அவை ஒரு சமூகத்துக்கு மாத்திரம் நன்மையளிப்பதாகக் காணப்படாது. பாதுகாப்புப் படையினரை மாத்திரம் தனித்து இலக்கு வைப்பதாகக் காணப்படாது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தனது பொறுப்புக்களை மறைப்பதற்காக, மக்கள் படையினர் மேல் வைத்துள்ள மதிப்பை பயன்படுத்த முயல்கின்றார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த தனது பிடிவாதம் மற்றும் குடிமக்கள் குறித்த தனது கடப்பாட்டை அலட்சியம் செய்ததன் காரணமாக நாட்டை அதன் முதலாவது பன்னாட்டு விசாரணையை நோக்கி இட்டுச் சென்றார். முன்னாள் அரச தலைவர் இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, ஜெனிவா தீர்மானத்தை மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி நாட்டைப் பிளவுபடுத்தும் விதத்தில் திரிவுபடுத்துகின்றார்.

குறிப்பிட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குமாறு எங்களுக்கு அழுத்தங்கள் எதுவும் விடுக்கப்படவில்லை.

வலிகள் நிறைந்த கடந்த காலங்களை மறைக்காமல் ஆராய்வோம் என்று கருதியதனாலேயே தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினோம்.

பெருமைக்குரிய ஐக்கியமான நாடு, ஐக்கியப்பட்ட மக்கள் என்ற எங்கள் முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ள மீண்டும் மீண்டும் உருவாகும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் கருதினோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது மோதல்கள் இடம்பெற்ற காலத்தைச் சேர்ந்தது.

தற்போதைய காலத்துக்குப் பொருந்தாத சட்டம். சிலர் குறுகிய அரசியல் இலாபத்தைப் பெறுவதற்காக துர்நடத்தை கள் மேற்கொள்வதற்காக அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினர். அந்தச் சட்டத்துக்குப் பதில் புதிய சட்டத்தைக் கொண்டுவருவது தேசத்துரோகம் என்று தெரிவிப்பது ஆதாரமற்றது என்றுள்ளது. (த-5)

## கூட்டு அரசுக்கு எதிராக கிழக்கில் சுவரொட்டிகள்



மட்டக்களப்பு, மார்ச் 17
எதிர்ப்பு வாரம் எனக் குறிப்பிட்டு மட்டக்களப்பு மாவட்டம் உட்பட கிழக்கு மாகாணத்தின் பல நகரங்களில் சம உரிமை இயக்கத்தினால் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மார்ச் 17 தொடக்கம் மார்ச் 23 வரை எதிர்ப்பு வாரம் கொழும்பில், எனக் குறிப்பிடப்பட்டுள்ள அந்தச் சுவரொட்டியில் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை வழங்கு, சகல காணாமலாக்கல்களையும் உடன் வெளிப்படுத்து, சகல அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய் என்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. (தய-46)

## மகிந்தானந்தவுக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல்

கொழும்பு, மார்ச் 17
முறைகேடான முறையில் பணம் மற்றும் சொத்துக்களைச் சம்பாதித்த குற்றச்சாட்டுகளில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகச் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

பணச் சலவைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு-7 கிங்சி வீதியில் உள்ள வீடொன்றை மகிந்தானந்த 27 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்துள்ளார். இந்த வீட்டை கொள்வனவு செய்யப் பணத்தைச் சம்பாதித்த விதத்தை வெளியிட அவர் தவறியுள்ளார் என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமான நிதியம் சம்பந்தமாகவும் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## பயிர் செய்யாத காணிகளை பயன்படுத்தப் புதிய திட்டம்

அரச தலைவர் மைத்திரி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
நாட்டில் பயிர் செய்யப்படாத அனைத்துக் காணிகளையும் மீண்டும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முறையானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை புதிய மாநாட்டு மண்டபத்தில் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என அரச தலைவர் ஊடக பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டிலுள்ள காணிகளை உற்பத்தி நடவடிக்கைகளுக்காகச் சரியாகப் பயன்படுத்துவது அவசியமானதாகும். நாட்டில் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கு அது மிகவும் முக்கியமான காரணியாகும். மனித உரிமையான காணி உரிமையைப் பெற்றுக்கொடுப்பதில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாரபட்சமாக நடந்துகொள்ளவேண்டாம். ஒவ்வொருவரது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அல்லாமல் நாட்டுக்குப் பொதுவான அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக இன்று நாட்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வரப்படுகின்றன. எத்தகைய தடைகள், சவால்கள் வந்தபோதும் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இன்று கூட்டு அரசு முழு உலகுக்கும் முன்மாதிரியாக இருந்து வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இதன் முக்கியத்துவம் இன்றைவிட நாளை அனைவரும் பேசுகின்ற ஒன்றாக இருக்கும். காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மற்றும் மத்தியதர விவசாய சமூகத்துக்குக் குடியிருப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காகக் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட மற்றும் மிக நீண்ட காலமாக அனுமதியின்றி பயன்படுத்தப்பட்ட காணிகளின் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக்கொடுத்து 10 ஆயிரம் காணி உறுதிகள் இந்த வருடம் வழங்கப்பட உள்ளனஎன்றார். (த-10)

## சோமாலியக் கடற்படையினர் கடற்கொள்ளையருடன் மோதல்

இலங்கைக் கப்பல் கடத்தலை அடுத்து

கொழும்பு, மார்ச் 17
சோமாலியக் கடற்கொள்ளையர்கள் சோமாலியக் கடற்படையினர் இடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளதாக ஆங்கில செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எட்டு இலங்கையருடன் பயணித்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலைக் கடத்திச் சென்ற சோமாலியக் கடற்கொள்ளையர்கள், கப்பலை ஆலுலா பகுதியில் நிறுத்தி வைத்துள்ளனர். அதில் கடத்திச் செல்லப்பட்ட இலங்கை மாலுமிகள் எண்மரும் வேறொரு இடத்தில் மறித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கடற்கொள்ளையர்களுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்காக வந்த கப்பல் ஒன்றைக் கைப்பற்ற முயற்சித்தபோதே இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.

எனினும், கடற்கொள்ளையர்களின் படகு தப்பிச் சென்றுவிட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கடற்கொள்ளையர்கள் தரப்பில், தமது தாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், சோமாலிய அரசு தரப்பில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மாலுமிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரியவருகிறது. (த-4)

## பொலிஸாரின் கடமையை தடுத்த மூவருக்குப் பிணை

தென்மராட்சி, மார்ச் 17
சாலைப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டுக் கடமை செய்யவிடாமல் தடுத்த மூவரில் ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் அவர்களை ஒரு வருட காலத்தினுள் 120 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டார்.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சாலையில் பயணித்த மூவரை வழிமறித்த பொலிஸார், அவர்கள் மீது தலைக்கவசம் அணியாமல் வாகனம் செலுத்தினார்களென வழக்குப் பதிவு செய்ய முற்பட்டவேளை பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டு கடமையைச் செய்யவிடாமல் தடுத்துள்ளனர் .

இவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற பொலிஸார், கடமையைச் செய்யவிடாமல் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார் நீதிவான். அத்துடன் மூவரும் ஒரு வருட காலத்தில் 120 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்தச் சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-9)

# காணாமற்போனவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மங்கள

"காணாமற்போனவர்கள் அல்லது கடத்தப்பட்டவர்கள் அன்றைய தினமே கொல்லப்பட்டிருக்கலாம். காணாமற்போனவர்களாக கருதப்படுபவர்களில் சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றிருக்கலாம்"

இவ்வாறு அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அயலுறவு அமைச்சில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், காணாமற்போனோரின் பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"காணாமற்போனவர்களை கண்டுபிடிப்பதற்கான முழு முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. அதற்கான குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு தமிழ் மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்" என்று அமைச்சர் மங்கள மேலும் தெரிவித்தார். (வ-5)

### திட்டமிட்டு...

இது தொடர்பில் கேணல், மேஜர் தர அதிகாரிகள் உள்ளிட்ட 10 இராணுவத்தினரை விசாரணை வலயத்தில் வைத்து விசாரித்து வருவதாகப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கிக்கு அறிவித்துள்ளனர்.

வசீம் தாஜுதீன் படுகொலை வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே சிறப்பு மேலதிக அறிக்கை ஊடாக புலனாய்வுப் பிரிவினர் இதனை அறிவித்தனர்.

இதுதவிர, வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவராகக் குற்றஞ்சாட்டப்படும் இரண்டாவது சந்தேக நபரான அனுர சேனாநாயக்கவை எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி நேற்று உத்தரவிட்டார். (த-4)

### யாழ்ப்பாணத்துக்கு...

பெறுமதியான கஞ்சா போதைப்பொருளை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் வர்த்தகர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர் செல்வந்த வர்த்தகர் ஒருவரே. கண்டியில் நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே இந்தப் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

குறித்த போதைப் பொருள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட இருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது. சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்வதாகத் தெரிவித்துப் போதைப் பொருள் வர்த்தகத்தில் குறித்த வர்த்தகர் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-4)

### ஜகத்...

உள்ளன. இந்த முகாமின் பொறுப்பாளராகப் பணியாற்றிய இப்போதைய பிரேசில் தூதுவர் ஜகத் ஜயசூரியவை விசாரணை செய்ய வேண்டும்.

இவ்வாறு பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைமைப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போரின் இறுதிக் கட்டங்களில் மிக மோசமான சித்திரவதைக் கூடமாக வவுனியா ஜோசப் முகாம் இருந்தது. இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டு மிகக் கொடூரமான சித்திரவதைகளை அனுபவித்து தப்பித்தவர்களிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. 46 பேர் இவ்வாறு வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர். இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் பாலியல் ரீதியாகக் கொடுமைகள் வன்முறைகளை அனுபவித்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த முகாமில் படையினருடன் இணைந்து ஒட்டுக்குழுவாக துணை ஆயுதப் படையினராகப் பணியாற்றிய தமிழர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜோசப் முகாமில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களின் பெயர் விவரங்கள் ஒளிப்படங்கள் எமது அமைப்பு பெற்றுக் கொண்டுள்ளது. இவர்களைப் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காண்பித்துள்ளனர். பாலியல் வன்முறையில் ஈடுபட்டவர்களில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் மேஜராகப் பணியாற்றியவர் ஒருவரும் உள்ளடங்குகின்றார். ஜோசப் முகாமுக்கு ஆள்களைக் கடத்தி வரும் நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவை வழிநடத்திய மூத்த அதிகாரியொருவர் பின்னர் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையில் பணியாற்றியுள்ளார்.

இந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்த, முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய பிரேசில் தூதுவருமான ஜகத் ஜயசூரியவை இராஜதந்திரப் பதவியிலிருந்து திருப்பி அழைக்கவேண்டும். அவர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜஸ்மின் சூக்காவின் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (த-5)

### ஆட்சி...

இதனால் பொருளாதாரத் தடை ஆபத்தை நாடு எதிர்கொண்டிருந்தது. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டமையினாலேயே அந்த அபாயத்திலிருந்து இலங்கை தப்பித்துக் கொண்டது. மகிந்தவும் இன்று சுதந்திரமாகச் சென்று வர முடிகின்றது. இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணையை நடத்துவதற்கு ஐ.நா. தீர்மானித்திருந்தது. அப்போதைய அரசு இதை எதிர்த்திருந்தாலும் அதை முன்னெடுத்தே ஆகவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐ.நா. சபை இருந்தது. 2014 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைக்கு சார்பாக 12 நாடுகளே பேசியிருந்தன.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் இலங்கை மீது பன்னாட்டுத் தடைகள் விதிக்கப்பட்டிருக்கும். பொருளாதாரத் தடை நடைமுறைக்கு வந்து நாடு பேரழிவை சந்தித்திருக்கும். இந்த அபாயத்திலிருந்து நாட்டைப் பாதுகாத்துள்ளோம். எமது செயற்பாட்டால் தான் இன்று மகிந்தவுக்குக்கூடச் சுதந்திரமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முடிகின்றது. இல்லையேல் பயணத் தடை விதிக்கப்பட்டிருக்கும்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், உள்ளகத் திட்டத்துடன் ஜெனிவா சென்று உலக நாடுகளுடன் பேச்சு நடத்தப்பட்டது. அப்போது எமது யோசனைக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வந்தன. இங்கு பரப்புரை முன்னெடுக்கப்படுவதுபோல் இலங்கை இணை அனுசரணை வழங்கவில்லை. எமது யோசனைக்கே ஆதரவு வழங்கப்பட்டது.

இவ்வாறு ஆதரவு வழங்கிய நாடுகள் சில பரிந்துரைகளையும் முன்வைத்தன. அவை பரிந்துரைகள் மாத்திரமே. இதில்தான் பன்னாட்டு நீதிபதி விடயமும் இருந்தது. பன்னாட்டு நீதிபதிகள் என்ற விடயம் வருவதற்கு மகிந்த அரசே முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும். அவரது ஆட்சிக்காலத்தில் நீதித்துறை சீரழிக்கப்பட்டதாலேயே இப்படியொரு கோரிக்கை வந்தது.

நீதித்துறையின் சுயாதீனம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சகல தரப்பும் ஏற்கும் வகையில் உரிய தீர்மானம் எடுக்கப்படும். இந்த முடிவுக்கு எந்தவொரு தரப்பும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இலங்கையின் எதிர்காலத்தை இறைமைமிக்க நாடு என்ற அடிப்படையில் இலங்கைதான் தீர்மானிக்க வேண்டும் என்று கொழும்புப் பயணத்தின் போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரே கூறிவிட்டார். இன்று பன்னாட்டு விசாரணை என்ற விடயம் இல்லாமல் போயுள்ளது. இதுதான் இலங்கை அடைந்த வெற்றி - என்றார். (த-5)

### சட்டத்தில்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு அரசமைப்பில் இடமில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் உள்ளகப் பொறிமுறையின் ஊடாகவே விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வினவியபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு கலப்புப் பொறிமுறை ஐ.நா. தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டது. இதற்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, இலங்கை அரசமைப்பில் பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு விசாரிக்க இடமில்லை என்று குறிப்பிட்டார். அவ்வாறு விசாரணை செய்யலாம் என்று நான் குறிப்பிட்டேன். அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, நான் சட்டத்தரணி அல்ல. விஜயதாஸ ஒரு வழி சொல்கின்றார். சுமந்திரன் ஒரு வழி சொல்கின்றார். எனக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார். அமெரிக்காவின் இரண்டு நிபுணர்கள் உடனடியாக ஜெனிவாவுக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் இலங்கை அரசமைப்பில், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைகளை மேற்கொள்ள முடியுமா என்பதை ஆராய்ந்தனர். இறுதியில், இப்போதைய இலங்கை அரசமைப்பிலேயே அதனைச் செய்ய முடியும் என்று குறிப்பிட்டனர். இதனை அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏற்றுக் கொண்டார். ஏன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூட, இவ்வாறான விசாரணைகள் ஏற்கனவே நடைபெற்றமைக்கான முன்உதாரணங்கள் உள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

தலைமை நீதியரசருக்கு எதிரான கடந்த கால விசாரணையின்போது பொதுநலவாய நீதிபதிகளை உள்ளடக்க எல்லோரும் இணங்கியிருந்தனர்.

பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறையை இப்போதைய அரசமைப்பின் ஊடாகச் செய்வதில் எந்தத் தடையும் இல்லை. அப்படியே தடை இருக்குமாக இருந்தால் அதனை நீக்குங்கள். அரசமைப்பில் மாற்றத்தைச் செய்யுங்கள். இலங்கை அரசு பொறுப்புக் கூறலில் தான் ஏற்றுக் கொண்ட விடயத்தை செய்தே ஆக வேண்டும். இதில் எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் தயாரில்லை - என்றார். (த-5)

### இராணுவ...

தலைமை அலுவலகத்தை அகற்றிவிட்டுத் தமது காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாபிலவு மக்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

"இராணுவ முகாமுக்கு முன்னால் பொதுமக்கள் முன்னெடுத்து வரும் அறவழிப் போராட்டத்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய அபாய நிலை உள்ளது.

அவர்கள் முகாமுக்கு முன்பாகப் போராட்டம் செய்வதை நிறுத்த வேண்டும். இராணுவ முகாமிலிருந்து 200 மீற்றர் தூரம் விலகிச் சென்று மக்கள் தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்" என்று உத்தரவிடுமாறு முல்லைத்தீவு நீதிவான் மன்றிடம் பொலிஸார் கோரினர். இது தொடர்பாக வழக்கு ஒன்றையும் கடந்த செவ்வாய்க்கிழமை அவர்கள் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. வழக்கை ஆராய்ந்த நீதிமன்று இராணுவத்தினருக்கு அழைப்பு அனுப்பியது. அழைப்பின்படி, முகாமுக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி மன்றில் முற்பட்டார். தமது தரப்புச் சாட்சியத்தை அவர் மன்றில் பதிவிட்டார். அதனையடுத்துப் பொதுமக்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

இந்த வழக்கு மன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுமக்கள் சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரனுடன் முல்லைத்தீவு சட்டத்தரணிகளும் மன்றில் முன்னிலையாகி பொதுமக்கள் தரப்பு வாதங்களை முன்வைத்தனர். "ஆர்ப்பாட்டங்கள் அறவழிப் போராட்டங்களை நடத்துவதற்கும், தங்களுடைய எதிர்ப்புக்களை அமைதிப் போராட்டங்கள் ஊடாக முன்னெடுத்துச் செல்வதற்கும் மக்களுக்கு அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது மக்களின் அடிப்படை உரிமை. தொடர் அறவழிப்போராட்டம் நடத்தும் மக்கள் சாலையின் போக்குவரத்துக்கு இடையூறாகவோ, இராணுவப் போக்குவரத்துக்கு இடையூறாகவோ, இராணுவ வாசலுக்கோ சென்று தங்கள் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை" என்று பொதுமக்கள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிமன்று, போராட்டம் நடத்தலாம். ஆனால் போக்குவரத்தைத் தடை செய்யக்கூடாது. பொதுமக்கள் அமைதியான முறையில் தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்று கட்டளையிட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்துவரும் அறவழிப் போராட்டம் 16 ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. (வ-4, 7)

### கனடாவுக்கு...

தயாரிக்கப்பட்ட பொருள்களை அனுப்பி வைக்குமாறு பல கோரிக்கைகள் விடுக்கப் படுகின்றன என்று நீர்வேலி அருங்கலைகள் மன்றத்தின் தலைவி திருமதி புவனேஸ்வரி செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர்வேலி அருங்கலை மன்றமும், நீர்வேலி புவனம் கைப்பணி உற்பத்தி விற்பனை நிலையமும் பனை ஓலைச் சார்வு மற்றும் அதன் ஈர்க்கு முதலியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கும் பனை ஓலைப்பெட்டி, சுளகு, மூடல்பெட்டி தையல் பெட்டி, வட்டப்பெட்டி (பாம்புப் பெட்டி) உள்ளிட்ட வீட்டுப்பாவனைப் பொருள்களும் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் பூ, பூச்சாடி உள்ளிட்ட அலங்காரப் பொருள்களும் கனடா ரொரன்றோவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்லகிராக்கி உள்ளது. பனை ஓலைத் தயாரிப்புக்களைத் தங்களுக்கும் அனுப்பிவைக்குமாறு வெளிநாடுகளில் இருந்து பல கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களின் தேவை நிறைவு செய்வதற்கு ஏற்றவகையில் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. பனை ஓலைத் தயாரிப்புக்களைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு நல்லவருமானம் ஈட்டலாம். பெண்கள் மற்றும் யுவதிகள் இணைந்து கொள்வதன் மூலம் ஒருதொழில் முயற்சியை கற்றுக் கொள்வதோடு கணிசமான அளவு வருமானம் பெறமுடியும் - என்றார். (த-11)

### மைத்திரி...

பெற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளன. இவ்வாறு பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைமைப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இலங்கையில் ஆட்சி மாற்றம் நடைபெற்றது. புதிய அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னரும் சித்திரவதை இலங்கையில் தொடர்கின்றது.

கொடூரமான சித்திரவதைச் சம்பவங்கள் 6 ஆட்சி மாற்றத்தின் பின்னர் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆகப் பிந்தியதாக 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஒரு சம்பவம் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# டெங்கு நோய்த் தொற்று வடமராட்சியில் அதிகம்

## சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு நோய்த் தொற்று யாழ். மாநகர் மற்றும் உடுவில் ஆகிய பகுதிகளில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் வடமராட்சியில் அதன் தொற்று அதிகமாகவே உள்ளது என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

"யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டில் அதிகரித்துள்ள டெங்கு மற்றும் பன்றிக் காய்சல் நோய்த் தொற்றுக்கள் இதுவரை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. எனினும் வடமராட்சிப் பகுதிகளான கரவெட்டி , பருத்தித்துறை பிரதேசங்களில் டெங்கு நோய்த் தொற்று அதிகமாகவுள்ளது.

இந்த மாதத்தின் முதல் 15 நாள்களிலும் டெங்கு நோய்த் தொற்றால் 244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முழுவதும் இதுவரையில் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளான ஆயிரத்து 324 பேர் பரிசோதனைகள் ஊடாக இனங்காணப்பட்டுள்ளனர்.

பன்றிக் காய்ச்சல் எனப்படும் இன்புளுவன்சாவின் எச்1என் 1 வைரஸ் தொற்று தற்போதும் தொடந்த வண்ணமே உள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகளும் இடம்பெறுகின்றன" என்று யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

(வ-101)



**கிளிநொச்சி**
**கரைச்சி புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய**
**பங்குனி உத்தரப் பொங்கல் விழா**
**சம்பந்தமான**
**மீளாய்வுக் கூட்டம்**



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 09.04.2017 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 20.03.2017 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றிலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையில் கௌரவ பாரளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், போக்கு வரத்துத் துறையினர் மற்றும் ஒழுங்கமைப்புப் பணியில் ஈடுபடும் தொண்டர்கள், தொடர்புடைய நிறுவனங்கள், பரிபாலன சபையினர் ஆகியோரை கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**வீ.இராமநாதன்**
**தலைவர்.**

**தி.பிரபாகரன்**
**செயலாளர்.**

ஆலய பரிபாலனசபை,
நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.




# மக்ஸ் தயாரிப்புக்கள்

**வட பகுதியில் 15 வருடங்களாக**
**முன்னிலைப்படுத்தியதற்கான**
**வெற்றியைக் கொண்டாடுவதோடு**

நுகர்வோருக்கும் - விற்பனையாளர்களுக்கும் -
விநியோகஸ்தர்களுக்கும்
**மக்ஸ்** தயாரிப்பாளர்கள் தமது மனமார்ந்த
நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மேலும் தொடர்ந்தும் எமது தயாரிப்புக்களை வாங்கிப் பயனடையுமாறு கேட்டுகொள்கிறோம். கடந்த பதினைந்து வருடங்களாக எமது தயாரிப்புக்களின் தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.



## மக்ஸ் கல்சியம் நீக்கி

கூடுதலாக் கல்சியம் படியக்கூடிய இடமான தண்ணீர் தாங்கி மற்றும் கொமட்டில் இருக்கும் நீர் தாங்கி ( Water flust Lanks) போன்றவற்றில் உள்ள வெள்ளை நிற படிவையும் மிகக் கடினமான கல்சியத்தையும் அகற்றி பக்ரீரியாக்களையும் கொல்லும் தற்பொழுது கல்சியம் நீக்கி ஸ்பிறேயுடனும் மக்ஸ் தயாரிப்பாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

**தொலைபேசி இலக்கம்: 071 426 0027 - கொழும்பு**
**077 607 9355 - யாழ்ப்பாணம்**

### பாவிக்கும் முறை

குளியலறை மற்றும் கண்ணாடி டைல் இடங்களில் சோப் கறைகள், மண் மற்றும் கறைகளை நீக்க ஒரு பங்கு டைல் துப்புரவாக்கும் திரவத்துடன் 20 பங்கு நீர் கலக்கவும். அதிகமான கறையுள்ள இடங்களுக்கு டைல் துப்புரவாக்கும் திரவத்தை நேரடியாகவும் அல்லது ஒரு பங்கு திரவத்தை நேரடியாகவும் அல்லது ஒரு பங்கு திரவத்திற்கு ஒரு பங்கு நீர் கலந்து நன்றாக மொப் பிரஸ்ஸால் கழுவவும். அது துப்புரவான புதுத் தோற்றத்தை அளிக்கும்.

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

# IELTS

- *Latest training materials.* ( **Book 11** )
- *Skills development in all four categories.*
- *Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.*

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் **UK** செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் **UK** அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

**British Council'S**
**IELTS Registration Centre**

## Spoken English

Fluency Diploma

www.itdmi.com/english Hotline 0777 17 35 17

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 3470 | சாவகச்சேரி Tel.: 021-227 0775 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5655

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்

**நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2016 / 2017**
**தகுதிகாண் (செய்முறை) பரீட்சை**

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதி காண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை | 20.03.2017 - 01.04.2017 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக் கழகம், மருதனார்மடம், சுன்னாகம் | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| நடனம் | 20.03.2017 - 31.03.2017 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம் | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் செய்முறை | 28.03.2017 - 31.03.2017 | சித்திரமும் வடிவமைப்பும் அலகு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் எழுத்துப்பரீட்சை | 01.04.2017 | 1. E- Hall (வெளிவாரி பரீட்சை மண்டபம்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கம்பஸ் வீதி, திருநெல்வேலி. 2. வர்த்தக மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கம்பஸ் வீதி, திருநெல்வேலி | பி.ப. 2.00 |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு உதவிப்பதிவாளர்/அனுமதிகள் கிளையுடன் 021222 6714 என்ற தொலைபேசி எண் வழியாகத் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** **16.03.2017**

# சிறைப் பேருந்து மீது சூடு; எவருமே கைதாகவில்லை

கொழும்பு, மார்ச் 17
களுத்துறைச் சிறைச்சாலைப் பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கடுவலை நீதிமன்றத்துக்குச் சென்று கொண்டிருந்த சிறைச்சாலை பேருந்து மீது கடந்த 27 ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தியதில், சமயங் எனப்படும் அருண உதயசங்க உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்திருந்தனர்.
இது தொடர்பில் பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன் னெடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-5)

## மரண அறிவித்தல்

**ஜோசப் இம்மானுவேல்** (ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் அதிகாரி)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் இம்மானுவேல் (ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் அதிகாரி) 15.03.2017 புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப்-மேரிமார்கிரட் தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், றோசம்மாவின் அன்புக் கணவரும், சாந்தி, வசந்தி, தோமஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஏபிரகாம், சேவியர், புஷ்பமாலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரெபான், எஸ்தர், டிலான் ஆகியோரின் பிரியமான பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.60, கோயில் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிப் பூசைப்பலி நாளை (18.03.2017) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சஞ்சுவான் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **றோசம்மா - 076 373 6000**

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையை 01.04.2017 - 31.03.2018 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்கு தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து. நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.
எனவே சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் நடாத்த விரும்புவோர் மேல் நீதிமன்றக் கணக்கீட்டு அலுவலகத்தில் மீளளிக்க முடியாத விண்ணப்பப் பணம் ரூபா 100 /= ஐச் செலுத்தி எதிர்வரும் 29.03.2017 புதன்கிழமை பி.ப 4.15 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 30.03.2017 ந.ப12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மா.இளஞ்செழியன்,**
**மேல் நீதிமன்ற நீதிபதி பெறுகைக்குழுத்தலைவர்,**
**மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்**
**மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்**

எளியமுறை உடற்பயிற்சிகள்
எளியமுறை தியானப்பயிற்சிகள்
எளியமுறை காயகல்பப் பயிற்சிகள்

அகத்தாய்வு-03
18.03.2017, 19.03.2017 (சனி, ஞாயிறு) தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

பிரம்ம ஞானம்
08.04.2017, 09.04.2017, 10.04.2017 ஆகிய தினங்களில் நடை பெறும்.

வழங்குபவர்
தமிழகத்தில் இருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்

இடம்- அறிவுத்திருக்கோவில்
காலம்- 18.03.2017, மாலை 05 மணி

பயிற்சி பெற விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்- 021 222 2772, 071 440 3268

**அறிவுத்திருக்கோவில்**
**மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும்

## பண்பாட்டுப்பெருவிழா-2017
## ஆய்வுக்கட்டுரைகளுக்கான அழைப்பு

"கிராமியப்பண்பாடும் மேம்பாடும்" எனும் ஆய்வுப் பொருளில் நடைபெறவுள்ள வடமாகாண ஆய்வரங்கிற்கு ஆய்வாளர்களிடமிருந்து பின்வரும் விடயத் தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

- கல்வி
- உணவு,உடை,உறையுள்
- மருத்துவம்
- கலைகள்
- குடும்பம்
- பொருளாதாரம்
- சமயம்(வழிபாடு)
- மொழி,இலக்கியம்
- விளையாட்டுக்கள்

ஆய்வுச்சுருக்கத்தை 300 சொற்களுக்குள் உள்ளடக்கி **உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், செம்மணி வீதி, நல்லூர்.** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் மூலம் அனுப்புவதாயின் **npc.culture@yahoo.com** , **depofculture.npc@gmail.com** எனும் முகவரிக்கு font style Baamini, font size 12 இல் அனுப்பி வைக்கமுடியும்.

ஆய்வுச்சுருக்கம் **28.04.2017** ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு **021 205 4105** எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும்.

**திருமதி.வனஜா செல்வரட்ணம்,**
**உதவிப் பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.** (AJA/1205) (22,18)

## தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுக்கு

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆ.சிறி கேட்டுள்ளார். (வ-23)



## மனித உரிமை சபையை மறுசீரமைக்காவிட்டால் அமெரிக்கா வெளியேறும்

*ராஜாங்கச் செயலர் எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 17
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கணிசமான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாவிட்டால், அமெரிக்கா அதில் தொடர்ந்து இணைந்திருக்காது. அதிலிருந்து வெளியேறிவிடும்.

>> 24

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்திற்கு சாரதி தேவை.

**076 355 0317**

## அனெக்ஸ் வாடகைக்கு

தனிவழியுடன் ஒரு அறை, சிறிய சமையலறை, இணைந்த குளியலறை, திறந்த விறாந்தையுடன் நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்குண்டு. முற்பணம்- 125000/=, வாடகை-7000/=

**076 660 4584**

## பெயர்மாற்றம்

ரமணங்குளம், புகழேந்திநகர் எனும் முகவரியில் வசிக்கும் **சிவகுரு சிவானந்தராசா** என்பவரது பெயர் பிறப்புச் சான்றிதழில் **சிவகுரு பாலசுப்ரமணியம்** என்பதாக உள்ள நிலைமையில் சகல ஆவணங்களிலும் **சிவகுரு சிவானந்தராசா** என்பதாகவே பயன்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக இப் பெயரையே தொடர்ந்து பயன்படுத்துகின்றேன் என அறியத்தருகின்றேன்

## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 31.01.2017க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 28.03.2017ம் திகதி காலை 10.30 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நியந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# வடக்கில் போராட்டங்கள் உக்கிரம்



யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், மார்ச்.17
கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும், அவர்களுடைய உண்மையை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தி, வடக்கு மாகாணத்தில் போராட்டங்கள் உக்கிரமடைந்து செல்கின்றன. கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், வவுனியா, முல்லைத்தீவு என்று விரிவடைந்து சென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணாமல்போனவர்களின் உறவினர்கள், உறுதியுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று 25 ஆவது நாளாகவும், வவுனியா மாவட்டத்தில் நேற்று 21 ஆவது நாளாகவும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 9ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 2 ஆவது நாளாகவும், போராட்டங்கள் தொடர்கின்றன. இந்தப்போராட்டங்களில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் அனைவரும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? இருந்தால் எங்கு உள்ளனர், இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது, இதை வெளிப்படுத்துங்கள் என்ற கோரிக்கையை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்த போதும், மக்கள் போராட்டத்தைக் கைவிட வில்லை. அவர்களால் அமைக்கப்பட்ட தகரக் கூடாரத்துக்குள் ஒதுங்கி இருந்து, அலைந்தது போதும் இனியாவது எங்களுக்கு நல்ல தீர்வு தாருங்கள், எங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்காது இங்கிருந்து நாங்கள் செல்லமாட்டோம். என்ற உறுதியுடன் தமது அறவழிப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். நேற்றையதினம் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை இவ்வாறு தொடர் போராட்டத்தில் ஈடுப்படப் போவதாகவும், சில வேளைகளில் தங்களின் போராட்டத்தின் வடிவத்தை மாற்றி எதிர்வரும் நாள்களில் போராட வேண்டி வரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
அதே போல் வவுனியாவில், சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமாக இந்தப் போராட்டம் மாற்றம் கண்டு நேற்று 21 நாளாகவும் தொடர்ந்தது: இவர்களது போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று காலை போராட்ட இடத்துக்குச் சென்ற போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றிணைந்த குழுவினர், மக்களுடன் கலந் துரையாடி தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.
முல்லைத்தீவில் இடம்பெறும் கவனவீர்ப்புப் போராட்டமும் உறுதியுடன் இடம்பெற்று வருகின்றது. நேற்று முல்லைத் தீவு மக்களது போராட்டத்துக்கு முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட மக்களும் ஆதரவு தெரிவித்து, மக்களுடன் போராட்டத்தில் இணைந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செய லகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் போராட்டம் ஆரம் கிக்கப்பட்டது. மரநிழலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்று 2 ஆவது நாளாக கொட்டகை அமைத்துத் தொடர்கின்றது. எனினும் மருதங் கேணியைச் சேர்ந்த மக்க ளுக்கு இது வரை எவரும் ஆதரவுகளை தெரிவிக்க வில்லை என்ற அந்த மக்கள் கவலைஅடைந்தனர். (ஐ-21)

## கண்ணீர் அஞ்சலி



நீயூ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸின் முகாமையாளராகிய ஜீவன் அவர்களின் தந்தையாகிய

**கிருஷ்ணர்-தேவராசா**

அவர்கள் 2017.03.16 ஆம் திகதி வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். தகவல்:

**நீயூ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்-திருநெல்வேலி**
**N/S/B ரேடர்ஸ் - கொழும்பு**
**ஸ்ரீ பேப்பர் மாட்- யாழ்ப்பாணம்,**
**உரிமையாளர் ந. ஸ்ரீஸ்கந்தராஜா.**
**077 776 9231,**
**021 222 2865, 077 873 0114,**

**மறவன்புலோ மத்தி,**
**சாவகச்சேரி.**

### குற்றச்சாட்டை ஏற்பதில்

# நீதிமன்றில் முரண்பட்ட சந்தேகநபர்களை மறியல்சாலைக்கு அனுப்பினார் நீதிவான்

தென்மராட்சி, மார்ச் 17

சாவகச்சேரி நீதிமன்ற திறந்த மன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சந்தேகநபர்கள் இருவர் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி வாய்த்தர்க்கம் செய்தனர். அவர் கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், மூன்றாவது சந்தேக நபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

மட்டுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சாலைப் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். ஒரு மோட்டார் சைக்கிளில் தலைக் கவசமின்றி இருவர் உட்பட மூவர் வருவதை அவர்கள் அவதானித்தனர். மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை செய்து அவர்களை விசாரித்த போது, அவர்களின் உடைமையில் 2 கிராம் 200 மில்லி கிராம் கஞ்சா இருப்பதைக் கண்டனர்.

மூவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்று விசாரித்த பின்னர், ஒருவரை நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் மாலை முற்படுத்தினர். மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்த போதிலும் தன்னை மட்டும் நீதிமன்றில் முற்படுத்த கொண்டு வந்துள்ளனர் என அந்தச் சந்தேகநபர் நீவானிடம் கூறினார். வழக்கை நேற்று வரை ஒத்தி வைத்த நீதிவான் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது, மூவரும் கஞ்சாவை வீதியில் கண்டெடுத்தாகக் கூறி சுற்றவாளிகள் எனத் தெரிவித்தனர். நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மற்றவர் கஞ்சா கொண்டுவந்தார் எனத் தெரிவித்தீர் என்று சந்தேகநபரிடம் மன்று கேள்வியெழுப்பியது. அவர் நான் கொண்டு வரவில்லை, மற்றவர் தான் கொண்டு வந்தார் எனக் கூறினார். அவர் குறிப்பிட்ட நபரை நீதிவான் கேட்டபோது, நான் கொண்டு வரவில்லை.முதலாவது சந்தேகநபர்தான் கொண்டுவந்தார் என்க் கூறினார்.

இதனையடுத்து முதலாவது மூன்றாவது சந்தேக நபர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், இவர்களை தெல்லிப்பழை குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

"வழக்கின் இரண்டாவது சந்தேக நபர் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தார். அவரிடம் கஞ்சா காணப்படவில்லை" என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இரண்டாவது சந்தேகநபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறு அவருக்கு உத்தரவிட்டார் (வ-9)

# இரு தரப்புகளுக்கிடையே அளவெட்டியில் கைகலப்பு

### நேற்றிரவு சம்பவம்: 6 பேர் காயம்

அளவெட்டி, மார்ச் 17

அளவெட்டியில் நேற்று இரவு இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், அளவெட்டி கணேஸ்வரம் பகுதியில் நேற்று இரவு இரு குழுக்களிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை கைகலப்பில் முடிந்தது. அந்தப் பகுதியில் உள்ள ஆலயம் மற்றும் சனசமூக நிலையத்தின் தரப்புகளுக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலைமையே மோதலுக்குக் கொண்டு சென்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் பொலிஸார் செல்லும் வரையில் இரு குழுக்களும் ஆங்காங்கே மறைந்திருந்து மோதலில் ஈடுபட்டனர். இரவு 8 மணியளவில் ஆரம்பமான மோதல் நிலமை 10 மணியை நீடித்தது. இறுதியில் பொலிஸாரால் மோதல் நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

# கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவு கொம்மாந்துறை பழைய் படைமுகாம் அமைந்திருந்த இடத்தில் நேற்று கைக்குண்டொன்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-ய-46)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30.09.1937
மறைவு 19.02.2014



அமரர் பொன். அப்பையா
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞரும் சமாதான நீதிவானும்)
திதி: அபரபக்க பஞ்சமி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே அப்பா
குலப்பண்பு பேணி நாம் நலமாய் வாழ்ந்திட
ஓடி ஓடி உழைத்தீர். எங்கே சென்றுவிட்டீர்.
உங்கள் நிழலை இழந்து தவிக்கின்றோம்.
எங்கள் வாழ்வில் ஒளி தீபமாய் இருந்து
எம்மை காத்திடுவீர்.

உங்கள் ஆத்மா என்றும் சாந்தி வேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அம்பிகைவாசம்
புலோலி தென்மேற்கு,
புலோலி. 021 226 4280

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பேறாமக்கள்.

## மரண அறிவித்தல்

மலர்வு 28 . 10 . 1924



உதிர்வு 13 . 03 . 2017

### திருமதி திரேசம்மா கனகம்மா சிக்மறிங்கம்

இல.284, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்பொழுது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி திரேசம்மா கனகம்மா சிக்மறிங்கம் 13.03.2017 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் தம்புக்குட்டி மூப்பர் - மாகிறேற் தம்பிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற யோண் fபிடலிஸ் சிக்மறிங்கம் (முன்னாள் ஆசிரியர் - யாழ்.பரி.யோவான் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்கள்ன சாமுவேல் யோண் - அருளம்மா பொன்னாணி தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, கிறகரி பாக்கியமுத்துமூப்பர் ஆகியோரின் அன்பு சகோதரியும், திருமதி அல்வீனம்மா அகஸ்ரின், காலஞ்சென்ற இரஞ்சிதம் கிறிஸ்ரி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், யோவிற்றா யோகறதி (கனடா), அசம்ரா ஆனந்தறதி (ஓய்வுநிலை உப அதிபர் - யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), றேமன்ட் ரவீந்திரன் றாதா (பொறியியலாளர் - கனடா), அலோசியஸ் பாலேந்திரா (பாலா, பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), லெஸ்லி பிறேமா (கனடா), றெயினோல்ட் ஜீவா (கனடா), இசபெல்லா இன்பறதி (கனடா), ஜேனஸ் ஜேந்திரா (பாபு - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகஸ்ரின் (பொறியியலாளர் - கனடா), Dr.அலோசியஸ் (Lourdes Medical Centre, Jaffna),றான்சம் நிர்மலா (கனடா), ஈவான்ஜலின் மனோறாணி (ஆஸ்திரேலியா), ரமா (கனடா), பிறேமிலா (கனடா), சுரேஷ் ஏபிரகாம் ( கணக்காளர் - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லெமுவல், றொஷான், லக் ஷி, Dr. ரெக்ஸ் பிரதீபன், ஷோபனா, றமோனா, அஞ்சனா, Dr.றாகுலன் (ஆஸ்திரேலியா), டினேஸ், Dr.நித்தியா (கனடா), கௌதமன், பிரவீன், அகிலன், அஞ்சலி, யெவ்றி, சிந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாசமிகு பூட்டப்பிள்ளைகளின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி நாளை (18.03.2017) சனிக்கிழமை கனடா நேரப்படி மு.ப.9.30 மணியளவில் Toronto St.Jude's Church இல் ஒப்புக்கொடுக்கப்பட்டு Queen of Heaven Catholic Cemetery இல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: திருமதி அசம்ரா ஆனந்தறதி அலோசியஸ் (மகள்)

021 222 5887

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 31 . 07 . 1953



இறப்பு 17 . 03 . 2014

அமரர் திருமதி
### றேணுகாதேவி அருட்பிரகாசபிள்ளை

அன்பின் ஊற்று நீயே ஆற்றலின் பிறப்பிடம் நீயே
பாசத்தின் பெட்டகம் நீயே பண்பின் சிகரம் நீயே என்று
பார்த்திருந்தோம் நாமே எதிர்பாராமல் எமன் உன்னை
அழைத்துச் சென்றனனே மூன்றாண்டுகளென்ன மூவாயிரம்
ஆண்டாயினும் அகலுமோ உம் நினைவு எம்மை விட்டு

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### திருநாவுக்கரசு திலீபன்

தோற்றம் 24.06.1982
மறைவு 28.03.2016

திதி: 17.03.2017

எங்கள் இனிய குலவிளக்கே
நீ எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்,
ஆறாது எம் துயரம்
உன் நினைவுகள்
எம் நெஞ்சில்
என்றும் நிலைத்திருக்கும்
உன் ஆத்மசாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அறிவாலயம்
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.
தொ.பே: 077 788 1561

# டெங்கு நோய்த் தொற்றை தடுக்கத்துரிதநடவடிக்கை

## யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணிகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்த ஆண்டில் 96 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று யாழப்பாண பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

டெங்கு ஒழிப்புத் தொடர்பான மாதாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், யாழ். மாவட்ட பொலிஸ் நிலையச் சுற்று சுழல் பிரிவுப் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான நிலையில் காணிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்றுவரை 96 குடியிருப்பாளர் களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த வருடம் 390 வழக்குகள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. இந்த வருடம் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்தார்" என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதில் ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் 15 பொலிஸார், 15 சிறப்பு அதிரடிப்படையினர், 15 இராணுவத்தினர், கிராம அலுவலர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## தனியார் துறைக்கு மானிப்பாயில் இன்று கலந்துரையாடல்

மானிப்பாய், மார்ச் 17
மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து தனியார் நிறுவன உரிமையாளர்களுக்கான சிறப்பு கலந்துரையாடல் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3மணிக்கு இடம்பெறும் என்று மானிப்பாய் பிரதேச சபைச் செயலர் அறிவித்தார்.

தனியார் நிறுவனங்களின் சுகாதாரம் தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. சகல தனியார் நிறுவன உரிமையாளர்களும் கலந்துரையாடலில் பங்குபற்ற வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (வ-10)

## மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 17
கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் உலக மகளிர் தின விழா கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறும் என்று பொதுச்செயலர் ஆ.கந்தசாமி அறிவித்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷிராணி மில்ஸ் கலந்து கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார். (வ-10)

## மகளிர் இல்லத்தின் நிறைவு விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 17
தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 35ஆவது ஆண்டு நிறைவு விழா ஸ்ரீ துர்க்காபுர ஆலய அன்னபூரணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

துர்க்காபுர மகளிர் இல்லத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற நீதிவான் ஜீவராணி கருப்பையாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 17
யாழ்ப்பாணம் அச்செழு மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.குகதாசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் க.சின்னராசனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## மாணவி மீது துர்நடத்தை முயற்சி; இளைஞனுக்கு மறியல் நீடிப்பு

தென்மராட்சி, மார்ச் 17
பாடசாலை மாணவியைக் கடத்திச் சென்று அவர் மீது துர்நடத்தைக்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரின் விளக்கமறியலை நீடித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான், அவருக்கு உதவிய வாகனச் சாரதி மற்றும் அவரது நண்பர் ஆகியோரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

கடந்த மாதம் 16ஆம் திகதி தனியார் கல்வி நிலையத்துக்குச் சக மாணவியுடன் சென்ற பதின்ம வயது மாணவியை பலவந்தமாக வாகனத்தில் ஏற்றிச் சென்ற இளைஞன் மீசாலைப் பகுதியில் ஆள்கள் நடமாட்டம் குறைந்த வீடொன்றில் வைத்து மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

சக மாணவி பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோரிடன் சம்பவம் தொடர்பில் தெரிவித்தார். பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். சக மாணவியின் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸார் உடன் நடவடிக்கையை மேற்கொண்டதன் பயனாக மூன்று மணி நேரத்தில் கடத்தப்பட்ட மாணவி மீட்கப்பட்டார்.

கடத்திச் சென்ற இளைஞரையும் பொலிஸார் கைது செய்தனர். அவர் வழங்கிய தகவலையடுத்து வாகனச் சாரதியையும் நண்பரையும் கைது செய்தனர். மாணவியின் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸார் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மாணவியைக் கடத்தி அவர் மீது துர்நடத்தைக்கு முயன்ற இளைஞனை தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். வாகனச் சாரதி மற்றும் அவரது நண்பர் ஆகியோரை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (வ -9)

## யாழ்ப்பாண மாதர் சங்கங்களின் மாவட்ட இணையம் உருவாக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணக் குடாநாட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் மாவட்ட இணையம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஆரம்பக் கூட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் 15 பிரதேச செயலக பிரிவில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளும் மாகாணம், மாவட்ட மற்றும் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தலா ஒருவர் பிரதேச செயலக பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிலிருந்து மாவட்ட இணைய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இணையத்தின் தலைவராக மரிய சோபனா (தெல்லிப்பளை), உப தலைவராக திருமதி பொன். திருமலர் சிவானந்தம் (சங்கானை), செயலாளராக திருமதி சசிரேகா வரதராஜா (யாழ்ப்பாணம்), உதவிச் செயலாளராக திருமதி சீதாலட்சுமி திருநாவுக்கரசு (நல்லூர்), பொருளாளராக திருமதி மகேஸ்வரி அம்மா கீர்த்திநாதன் (தென்மராட்சி) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய பத்து பிரதேச பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர் என்று இணையச் செயலாளர் தெரிவித்தார். (வ -9)



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வடிகட்டி சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக கிளையின் ஏற்பாட்டில் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு பெற்றோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (வ-9)

## 50ஆவது ஆண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் யாழ். மாவட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் மர்ஹூம் யூ.எம். கொடை வள்ளல் ஐதுரூஸின் 50ஆவது ஆண்டு நினைவு தினமும், அஹதிய்யா மாணவர்களுக்கான பரிசளிப்பும், பிரமுகர்கள் கௌரவிப்பும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் கே.காதர் மஸ்தான், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஐய்யூப் அஸ்மின், இமானுவேல் ஆனோல்ட், வடக்கு மாகாண் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா, யாழ்.பிரதேச செயலாளர் பொ.தயானந்தன், யாழ்.வணிகர் கழகச் செயலாளர் லயன் ஜனக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## பாபுல் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 17
சட்ட விரோதமாக பாபுலை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். மானிப்பாய் - உடுவில் தெற்கைச் சேர்ந்த தவனேஸ்வரன் விஜித்தன் (வயது -23) என்பவரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், குளப்பிட்டிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் இருந்து நுகர்வுக்காக வைத்திருந்த 50 கிராம் 130 மில்லி கிராம் பாபுல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## சாலை விபத்தில் இருவர் படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 17
ஒழுங்கையிலிருந்து முதன்மைச் சாலைக்கு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சாலையில் சென்றகொண்டிருந்த சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. சைக்கிளில் பயணித்த முதியவர் சுயநினைவை இழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி பெரிய அரசடியில் இடம்பெற்றது.

சாவகச்சேரிக்கு வந்து விட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையில் ஒழுங்கையிலிருந்து முதன்மைச் சாலைக்கு ஏறிய மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டையிழந்து சைக்கிளில் பயணித்தவருடன் மோதியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த செல்லப்பா தங்கராசா ( வயது -70 ) என்ற முதியவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலோகநாதன் றொனோசன் ( வயது- 19 ) இளைஞனுமே விபத்தில் படுகாயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (வ-9)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய சாரதிக்கு தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 17
கிளிநொச்சி, பளைப் பொலிஸ் பிரிவில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றிய சாரதி ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று. கடந்த செவ்வாய்க்கிழமை சாரதி கைது செய்யப்பட்டார். மணல் ஏற்றிய உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் சாரதி முற்படுத்தப்பட்டார். விசாரணையில் தன்மீதான குற்றச்சாட்டை அவர் ஏற்றுக் கொண்டார். நீதிவான் தண்டம் விதித்தார். (ற-6)

## மகளிர் தின நிகழ்வுகள் யாழ். கிட்டு பூங்காவில்

முல்லைத்தீவு, மார்ச் 17
உலக மகளிர் தின நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை முத்திரைச் சந்தி, கிட்டுப் பூங்காவில் நடைபெற்றது. யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகள் 'பெண்களுக்கான பொருள் ஈட்டும் வாய்ப்பை மேம்படுத்திச் சமத்துவம் பேணுவோம்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டன.

பெண் முயற்சியாளர்களின் உற்பத்திகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டு பல்வேறு விதங்களில் சாதித்த 6 பெண்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸும், சிறப்பு விருந்தினராக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செவாலியர் திருமதி சிவயோகநாயகி இராமநாதனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக பெண்கள் அபிவிருத்தி தொடர்பான இணைப்பாளர் செல்வி உதயனி நவரட்ணமும் கலந்து கொண்டனர்.

(ற-102)






# போரால் பாதிக்கப்பட்ட முல்லை. மக்கள் ஐ.நாவுக்கு மனு

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வில் பங்குகொண்டுள்ள பேராளர்களுக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். அதில் இலங்கையில் நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்க முன்னெடுப்புகளின் நிலவரம் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இராணுவத்திடம் காணிகளைப் பறிகொடுத்த மக்கள், போரால் பாதிக்கப்பட்டவர்கள் நேற்றுக் காலை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு அருகில் ஒன்று கூடினர்.

அங்கிருந்து மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டம் மேற்கொள்ளப்படும் இடத்துக்குப் பேரணியாகச் சென்றனர். ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அனுப்பப்படும் மனு அங்கு வாசிக்கப்பட்டது. அங்கிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பேர் கிளிநொச்சியில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்குச் சென்று மனுவைக் கையளித்தனர்.

"இலங்கையின் நிலைமாறு கால நீதி முன்னெடுப்புகளில் இணைப் பங்காளியாவதற்கு ஐ.நா. இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்ய வேண்டும். பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். நிலைமாறுகால நீதி சட்டம் உருவாக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மற்றும் நிலைமாறு கால நீதிக்கான அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் பணிக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த ஆவனசெய்ய வேண்டும். அரசியல் கைதிகள் விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தி அமைத்தல் சார்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து பன்னாட்டு தராதரங்களுக்கு அமைய அவற்றை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான புலன்விசாரணை நிறுத்தப்பட வேண்டும். படையினர் வசமுள்ள மக்களின் காணிகளும் பொதுக்காணிகளும் மக்களிடம் மீள கையளிக்கப்படவேண்டும். இராணுவமயமாதல் நீக்கப்பட வேண்டும். தீர்மானம் 30/1 மற்றும் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை தாமதமின்றி நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பது பற்றிக்கூறும் சீடோவின் பொதுப் பரிந்துரை 19 இனையும், தீர்மானம் 1325 இனையும் உள்ளடக்கி சீடோ சட்டத்தை இலங்கை விரைவில் ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையில் நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுக்கப்படவும், நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு கோரிக்கைகளை நாங்கள் முன்வைக்கின்றோம்." என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ற-7)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் வினாக்கொத்து மூலம் விவரங்கள் சேகரிப்பு

### ஜனாதிபதி நடமாடும் சேவைக்காக

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்களின் தேவைகளை, பிணக்குகளை இனங்காணும் நோக்கில் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதி நடமாடும் சேவையை முன்னிட்டு கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

விண்ணப்பப் படிவங்களை இன்று பிற்பகலுக்குள் ஒப்படைக்க வேண்டும் என்று கிராம உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்கியவர்களுக்கான சேவைகள் மட்டுமே ஜனாதிபதி நடமாடும் சேவையில் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

படிவத்தில் காணாமற்போனோர் விவரம், இழப்பீட்டுக்கான நட்டஈடு தொடர்பான பிணக்கு, இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகள், வாழ்வாதாரம், பதிவாளர் நாயகம் தொடர்பானபிணக்குகள், வனப்பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான பிணக்குகள், அரச காணிப் பிணக்குகள் போன்ற பல முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் அனைத்துக் குடும்பத்தினரும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி வழங்கவேண்டும்என்று சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர். (ற-102)

## சிறார் நிகழ்வுகளுக்குச் செல்வது அரசியல் களைப்பை மாற்றவே

### மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், மார்ச் 17
"அரசியல் வாழ்க்கையின் களைப்பைப் போக்குவதற்காகவே சிறுவர்களுடைய நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றேன்" என்று கூறினார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான்.

மன்னார் லா சாலி ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்சகோதரர் கே.எஸ்.யோக்ணானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் வாழ்க்கை குழப்பம் நிறைந்ததும் மக்களின் தேவைகளால் வேலைப் பளு நிறைந்ததுமாகும். இவ்வாறான சிறுவர்களுடைய நிகழ்வுகளே அதன் களைப்பைப் போக்குகிறன. தற்போது உலகில் ஒரு தேர்ச்சி பெற்ற மொழியாகவும் பொதுவான மொழியாகவும் ஆங்கிலம் பேசப்படுகிறது. அதனைச் சிறுவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கற்பித்து அவர்களைச் சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக அனுப்பும் பணியை செய்யும் இந்த லா சாலி பாடசாலைக்கு நன்றியை தெரிவிக்கிறேன். இந்தப் பாடசாலை தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து மாணவர்களும் கற்கும் கல்விக்கூடமாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் என்னாலான அனைத்து உதவிகளையும் இந்தப் பாடசாலைக்கு வழங்குவேன்-என்றார். நிகழ்வில் மன்னார் மாவட்ட கொமர்சல் வங்கியின் முகாமையாளர் தி. திவாகரன் உட்பட அருட் சகோதரர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ற-21)

## சாந்தபுரம் கத்திக் குத்து; அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

கிளிநொச்சி, மார்ச் 17
கிளிநொச்சி, சாந்தபுரத்தில் பெண்ணொருவர் மீது நடத்தப்பட்ட கத்திக் குத்துச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை.

சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முடிவடையாத நிலையில் சந்தேகநபர் தொடர்பான அடையாள அணிவகுப்பு நடத்துவதில் உள்ள சிக்கல் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் நீதிமன்றில் தமது கருத்தை முன்வைத்தனர். அதையடுத்து நீதிவானின் அனுமதியுடன் அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டது.

**பின்னணி**

கடந்த 3 ஆம் திகதி கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் நன்னீர் மீன்பிடிக்கச் சென்ற பெண் ஒருவர் வீடு திரும்பினார். வழியில் இனந்தெரியாத ஒருவர் அந்தப் பெண் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தினார். பெண்ணின் சங்கிலியையும் அபகரிக்க முயன்றார்.

பெண் எதிர்ப்புக் காட்டியதால் அந்த நபர் தப்பியோடினார். தப்பியோடியவர் அங்குள்ள இராணுவ முகாம் பக்கமாக ஓடினார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு கடந்த 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

"குளத்திலிருந்து வந்துகொண்டிருந்த என்மீது காட்டுக்குள் இருந்துவந்த ஒருவர் தாக்குதல் நடத்தி என் சங்கிலியை அபகரிக்க முற்பட்டார். நான் கூச்சலிட்டு எதிர்ப்புக் காட்ட அவர் எனது கழுத்தில் கூரிய ஆயதத்தால் தாக்கிவிட்டு இராணுவமுகாம் பக்கமாகத் தப்பிச் சென்றார். அவர் இராணுவச் சீருடையில் இருக்கவில்லை. அவர் இராணுவத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். என்னால் அவரை அடையாளம் காட்டமுடியும்" என்று பாதிக்கப்பட்ட பெண் நீதிமன்றில் வாக்குமூலமளித்தார்.

பெண்ணின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த நீதிவான் எதிர்வரும் 15ஆம் திகதி (நேற்று முந்தினம்) இராணுவத்தினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த வேணடும் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

(ற-ய-21)

## புற்றுநோய் விழிப்புணர்வு 15

புற்றுநோய் தவிர்ப்போம்! மகிழ்வாக வாழ்வோம்!!

- மதுபானம் தவிர்ப்போம்.
- புகையிலை, வெற்றிலை, பாக்கு மெல்லுவதைத் தவிர்ப்போம்.
- புகைத்தலை முற்றாகவே கைவிடுவோம்.
- பாதுகாப்பற்ற உடலுறவைத் தவிர்ப்போம்.



# வடக்கில் வேலைவாய்ப்புக்கள் உருவாக்க புதிய கருத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
வடக்கு மக்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரமேம்பாட்டை மீள்நல்லிணக்கத்தின் ஊடாக ஏற்படுத்தல் என்ற புதிய கருத்திட்டம் நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் தொடக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

தொழில் முயற்சியில் வடக்கைத்தெற்குடன் இணைக்கும் மீள்நல்லிணக்கத்தின் ஊடாக வடமாகாணத்தில் வேலைவாய்ப்பையும் வாழ்வாதாரத்தையும் வழங்குதல் (Employment Generation and Livelyhoods through Reconsilation - EGLR) என்ற இந்தப் புதியகருத்திட்டம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட வுள்ளது.

பழச்செய்கை, மரக்கறிச் செய்கை மற்றும் மீன்பிடி சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதன் மூலம் வேலைவாய்ப்பையும் வாழ்வாதாரத்தையும் ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு நோர்வே 1.3 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்வாக வுனியா வடக்கு பழச்செய்கையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பழம் பொதியிடல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சந்நாசி பரந்தனில் அடிக்கல் நடப்பட்டது. வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக அடிக்கல் நட்டார். 4 மில்லிய்ன் ரூபா செலவில் அமைக்கப் படவுள்ள இந்தப் பொதியிடல் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் 4 மாதங்களில் முடிவடையும் எனத்தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் நட்நைபுளோற், வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், பன்னாட்டுத் தொழில்ளாளர் அமைப்பின் திட்ட இயக்குநர் நிகால் தேவகிரி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன், பிரதிவிவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் ஆகியோரும் பப்பாசிச் செய்கையாளர்களும் கலந்து கொண்டனர். (ற - 21)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்துக

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அமைச்சருக்குக் கடிதம் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.17
அண்மையில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பிலக்குடியிருப்பு , புதுக்குடியிருப்பு , பரவிப்பாஞ்சான் பகுதிகளில் மீள்குடியர்ந்த மக்களுகான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:
போரின் பாதிப்பிலிருந்து மீளாத எம் மக்கள், படையினர் வசமிருந்த தமது பூர்வீக நிலங்களைத் தங்களது போராட்டங்களினூடாக மீளப் பெற்றுள்ளனர். மீளளிக்கப்பட்ட காணிகளில் இருந்த மக்களின் வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட முடியாதவாறு சேதமடைந்துள்ளன. அங்குள்ள மக்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள், மீள்குடியமர்வதற்குப் போதிய வசதிகள் இன்றி அல்லலுறுகிறனர். இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் மக்கள் மீளக்குடியமர்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றுள்ளது. (ற-21)

# பழைய கற்பகபுரம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரைவில் நடவடிக்கை

வவுனியா, மார்ச் 17
"வவுனியா, பழைய கற்பகபுரம் கிராமத்தில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்".

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பழைய கற்பகபுரம் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:
இந்தக் கிராமத்தில் 138 குடும்பங்கள் நீண்டகாலமாக வாழ்கின்றன. அவர்களின் பல பிரச்சனைகளுக்கு இதுவரை தீர்வுகள் வழங்கப்படாதுள்ளன. இதுதொடர்பில் சம்மந்தப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகளிடம் வீட்டுத்திட்டம் வழங்கல், உள்ளக வீதிகள் சீரமைப்பு போன்ற பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

வீதிகளின் சீரமைப்புத் தொடர்பாக பிரதேச சபை செயலாளருடன் கலந்துரையாடப்பட்டது. பல வீதிகள் இந்த வருட நிதியில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், வீட்டுத்திட்டம் தொடர்பில் தேசிய வீடமைப்பு சபை மூலம் வீடுகள் உரியவர்களுக்கு இருவார காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முடிவெட்டப்பட்டது.



கலந்தரையாடலில் வவுனியா உதவிப் பிரதேச செயலாளர், வவுனியா தெற்கு பிரதேசசபைச் செயலாளர் , தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர், பம்பைமடுப் பிரிவு கிராம சேவை யாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் ,அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர் - என்றுள்ளது. (ற-21)

# இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

"தீயோர் சாகவேண்டும் என்பது என் விருப்பம் அல்ல; ஆனால் அந்தத் தீயோர் தம் வழிகளினின்று திரும்பி வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்." (எசே. 33:11) என்கிறார் ஆண்டவர். எம் எல்லோருக்கும் தவக்காலம் சிறப்புமிகு அழைப்பின் காலமாகும். அலகையினால் சோதிக்கப்படுமாறு பாலை நிலத்திற்குத் தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்ட இயேசு இறை வார்த்தையின் துணை கொண்டு சோதனைகளை வென்றார். இவ்வுலகின் மனிதர் அனைவரும் அறிந்தோ, அறியாமலோ அலகையின் சோதனைகளுக்கு உட்படுகின்றனர். இறைவனே சோதனைகளை மனிதர்களின் எதிர்கால நல்வாழ்வுக்காக அனுமதிப்பதோடு, அவைகளை வெல்லவும் தம் அருளைக் கொடுக்கின்றார். தூய பவுல் முதலில் இயேசுவை எதிர்த்தபோதும், பின்பு மனம் திரும்பி அவரைப்பற்றி அறிவிக்கும் போது தனது உடலில் உள்ள சோதனையை அகற்றுமாறு மன்றாடினார். அதற்கு 'என் அருள் ஒன்றே உனக்குப் போதும்' என்று இயேசு கூறினார். இவ்வாறு மனம் திருந்தி வாழ்ந்த பல புனிதர்களையே நாம் தூயவர்களாகப் பீடத்தில் வணங்குகின்றோம். இறையருளின் துணையே இவர்களைத் தூய்மைப்படுத்தியது.

எம் மத்தியிலும் உடல் இச்சைகளிலோ, உள்ளத்து உணர்வுகளிலோ அல்லது ஆன்மாவின் கொடையாகிய புத்தியறிவு, திடசித்தம் போன்றவைகளிலோ அலகையினால் சீண்டப்படா தவர்கள் எவருமில்லை. ஆயினும் இவற்றை எதிர்க்கும் ஆயுதங்களாக செபம், தவம், ஆன்மாவை நெறிப்படுத்தல் போன்றவற்றைக் கைக்கொள்ள வேண்டும். எம்மிடம் உள்ளவற்றை இல்லாதவர்களுடன் பகிர்தல், மனமுவந்து பிறருக்கு உதவுதல் நற்பண்புகளால் எம்மை நெறிப்படுத்தல் போன்றவற்றின் மூலம் அலகையை வெல்ல முடியும். தீயோரின் மனமாற்றத்துக்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்கும் இறைவன், நீடிய அன்புடனும், எல்லையற்ற பொறுமையுடனும், அளவு கடந்த இரக்கத்துடனும் காத்திருக்கின்றார்.



மனிதனுக்குத் தான் வழங்கிய அழகிய சுதந்திரம் என்னும் கொடையில் இறைவன் கைவைப்பதில்லை. ஆனால் இந்தக் கொடையின் பெறுமதியை உணராததன் காரணமாகவே பாவ நாட்டத்தில் மூழ்குகின்றான். எம்மிடையேபச்சைக் கதைகளும், நீலப் படங்களும், மஞ்சள் பத்தி ரிகைகளும், சிவப்பு விளக்குப் பகுதிகளும் முன்னெப்பொழு தும் இல்லாதவாறு அலகையினால் தாராளமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இறை இரக்கத்தை உதறித் தள்ளி இவற்றினுள் சிக்கும் அளவுக்கு இன்றைய சமூக மனிதன் பலவீனமாகிவிட்டான்.

எனவே இம்மீட்பின் காலத்தில் எம் பலவீனங்களை உணர்ந்து இறைவனின் நீடிய பொறுமையைச் சோதிக்காது, மனமாற்றம் பெற்று, அவரது அளவற்ற இரக்கத்தின் ஊற்றில் பருகும் தாகம் கொண்டவர்களாய், "ஆண்டவரே இரக்கமாயிரும்; ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்" என்று கண்ணீர் சிந்தி எம் வாழ்வை மாற்றிட தகுந்த காலமாகிய இந்தக் காலத்தைப் பயன்படுத்துவோம்.

அருட்பணி சி.ஜே.அன்ரனிபாலா

# அவசியமற்று வைத்தியசாலை செல்வதை தவிருங்கள்

முல்லைத்தீவு, மார்ச். 17
புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதால் அவசியமில்லாது வைத்தியசாலைக்கு நோயாளரைப் பார்வையிட வருவதை தவிர்க்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி நாள் ஒன்றுக்கு 400க்கும் மேற்பட்ட பொது மக்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். 100க்கும் மேற்பட்டவர்கள் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர். வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களும் நோய்த் தொற்றுக்கு உள்ளாகின்றனர். எனவே குழந்தைகள், முதியவர்கள், கர்பணிப் பெண்கள் வைத்தியசாலைக்கு அவசியமற்று வருவதை தவிர்த்துக்கொள்ளவும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)

# உற்பத்தியாகும் கள் வீணடிக்கப்படாது போத்தலில் இம்முறை அடைக்கப்படும்

## முல்லை. மாவட்ட பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச். 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்படும் கள் வீணாக்கப்படாது முழுமையாக போத்தலில் அடைக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் பி. ராஜீபலபரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கள் விற்பனை செய்யப்பட்டு எஞ்சியவை போத்தலில் அடைக்கப்பட்ட போதும் பல லீற்றர் கள் நிலத்தில் ஊற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது முல்லை கிழக்கு, முல்லை மேற்கு, புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம் துணுக்காய் ஆகிய நான்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளைப் போத்தலில் அடைக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. போத்தலில் அடைக்கும் வசதிகள் இல்லாத சங்கங்கள் மேலதிக கள்ளைப் போத்தலில் அடைக்கும் சங்கங்களிடம் கொடுத்து அவற்றைப் போத்தலில் அடைக்கின்றார்கள். இந்தப் பருவகாலத்தில் இதுவரைக்கும் கள் வீணாக்கப்படவில்லை - என்றார். (ற-7)

# விவசாயிகளுக்கு பழ மரக் கன்று

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு பயன் தரக்கூடிய பழமரக் கன்றுகள் இந்த வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்டன என்று யாழ். மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

அதிகளவான விளைச்சலைக் தரக்கூடிய வாழை மற்றும் ஏற்றுமதி செய்ய கூடிய மாம்பழத்தைத் தரக்கூடிய தொம் இயேசி இன மாமரக் கன்றுகள் விவசாயிகளுக்கு உரிய பண்ணைகள் மூலம் வழங்கப் பட்டுள்ளன - என்றார். (ற)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 17

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால், இலங்கைப் பொலிஸாருக்கு எதிராக நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கொழும்பில் அண்மையில் மாபெரும் எதிர்ப்புப் பேரணி நடத்தியிருந்தது.

இந்தப் பேரணியைக் கலைப்பதற்கு பொலிஸாரும், கலகத்தடுப்பு பிரிவினரும் இணைந்து நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பவற்றை நடத்தினர். இதன் காரணமாக இரு தரப்பினருக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். சிலர் மீது கலகத்தடுப்புப் பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் லஹிரு வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக விசாரணை நடத்தக்கோரியே நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ஐ-10)

# நானுஓயாவில் மினிசூறாவளி

## 120 வீடுகள் சேதம்


கண்டி, மார்ச் 17

கண்டி நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளரண்டன் தோட்ட மேற்பிரிவில் நேற்றுமுன்தினம் வீசிய மினிசூறாவளியால் 120 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதில் பாதிக்கப்பட்ட 112 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தோட்ட தேயிலைத் தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

1940 ஆண்டளவில் நிர்மாணிக்கப்பட்ட லயன் வீடுகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிப்புக்குள்ளானவர்களின் வீடுகளைத் திருத்தி யமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-ய)





# நாட்டை மாற்றியமைக்கும் திறன்களை உடையவர்கள் மகிந்த, கோத்தபாய மட்டுமே

## அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக்க கருத்து



கொழும்பு, மார்ச் 17

நாட்டின் எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றியமைக்க வேண்டுமாக இருந்தால் கோத்தபாய ராஜபக்சவை அரசதலைவராகவும், மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராகவும் நியமிக்க வேண்டும். -இவ்வாறு முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக்க தெரிவித்தார். நாட்டின் எதிர்காலம் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மகிந்த மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகிய இருவரால் மட்டுமே நாட்டுக்குச்சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் ஒரு போதும் அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றதும் கிடையாது.

ரணிலை விட கோத்தபாயவே சிறந்தவர்.

சிறி லங்கா சுதந்திர கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறையை ஒழிக்க ஒரு போதும் அனுமதிக்காது. 2019 இல் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்சபோட்டியிட முடியாது. கோத்தபாய ராஜபக்ச போட்டியிட்டு வெற்றியீட்ட முடியும் என்றார். (ஐ-10)

# கிழக்கு மாகாணத்தில் டெங்கு தொற்றால் 3605 பேர் பாதிப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்




திருமலை, மார்ச் 17

கிழக்கு மாகாணத்தில் ஜனவரிமுதல்இன்றுவரையான காலப்பகுதிக்குள் மூவா யிரத்து 605 பேர் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன்15பேர்உயிரிழந்தனர் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.முருகானந்தம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தலைமையில் மாகாண பணிப்பாளர், பிராந்தியப் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுடனான விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெங்கு நோய்த் தொற்றினால் திருகோணமலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 88 பேரும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரிவில் 911 பேரும் பாதிக்கப்பட்டதுடன், 9 பேர் உயிரிழந்தனர்.

குறிஞ்சாக்கேணியில்109 பேர் பாதிக்கப்பட்டதுடன், 3 பேர் உயிரிழந்தனர். குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் 5 பேர் பாதிக்கப்பட்டதுடன், ஒருவர் உயிரிழந்தார். மூதூரில் 418 பேரும், திருகோணமலையில் 379 பேரும், உப்புவெளியில் 266 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் பொதுமக்களின் அசண்டையீனத்தால், டெங்குத் தொற்று அதிகளவில் காணப்படுவதுடன், தங்களுடைய சுற்றுப்புறச்சூழலைச் சுத்தமாக வைப்பதிருப்பதால் டெங்குத் தொற்றுப் பரவாமல் தடுக்க முடியும். எனினும் மக்கள் சுகாதார திணைக்களமும், உள்ளுராட்சி மன்றங்களும் செயற்பட வேண்டும் என்று கருதுகின்றேன். என்றார். (ஐ-45)

# அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு சமுகமளிக்க மகிந்த ராஜபக்ச மறுப்பு



கொழும்பு, மார்ச் 17

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பெரிய ஊழல் மோசடிகளை விசாரணைசெய்யும்அரசதலைவர்ஆணைக்குழுவுக்கு சமுகமளிக்க மறுத்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு வருகைத்தர முடியாது எனவும், அவரது சட்டத்தரணியின் மூலமாக மகிந்த ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். இந்த நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி அரச தலைவர் ஆணைக்குழுவில் வாக்குமூலமளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசதலைவர் தேர்தலின் போது இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் விளம்பரங்கள் ஒளிபரப்பியதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் தொடர்பில்விசாரணைசெய்வதற்காகவேமகிந்த ராஜபக்சவுக்கு அரசதலைவர் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ-10)

# நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு தயார்

கொழும்பு, மார்ச் 17

பெரும் போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை அரசு முன்னெடுக்க வுள்ளது என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்வலு பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்தின் கீழ் 73 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்தக் கொள்வனவு 17 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இடம்பெறும். விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்வனவு செய்யப்படுவதுடன், மாவட்ட பிரதேச செயலகம் மற்றும் கிராம மட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இதற்குப் பெற்றுக்கொள்ளப்படும். கீரி சம்பா மற்றும் ஏனைய சம்பா நெல் வகைகள் கிலோ ஒன்று 41ரூபாவுக்கும், நாட்டரிசிநெல்கிலோ ஒன்று 38 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும்-என்றார். (ஐ-10)

# நவீன தொழில்நுட்பங்களை சமூகத்தின் நன்மைக்குப் பயன்படுத்துவதே சிறந்தது

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

நவீன தொழில்நுட்பத்துக்கு உட்பட்ட அந்த அபிவிருத்தி எமக்கு எளிதாக இருந்த போதிலும், அது பெரும்பாலும் ஒட்டுமொத்த சமூகத்தின் அழிவுக்கே பயன்படுத்தப்படுகிறது.

நவீன தொழில்நுட்பத்தை மானிட சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்துவது அறிவுள்ள பிரசைகளின் பொறுப்பாகும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பன்னாட்டு நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் 'டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோர் உரிமைகள்' எனும் தலைப்பில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டின் நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நவீன தொழில்நுட்பம் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பிலும் எதிர்காலத்தில் மிகப் பரந்தளவில் பயன்படுத்தப்பட வேண்டும். சட்டத்தின் மூலம் அரசு மேற்கொள்ளும் முகாமைத்துவத்தை விடவும், தமது மனிதாபிமானப் பொறுப்புக்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உணவு, பானங்கள் உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான ஏனைய நுகர்வுப் பண்டங்களை வழங்கும் அனைத்து நிறுவனங்களும் செயற்பட வேண்டும்.

உணவுப்பானங்கள் உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பண்டங்களின் தரம், நாட்டு அபிவிருத்தியின் முக்கிய அளவுகோலாக இருக்கின்றது. கொழும்பு தொடக்கம் நாடுமுழுவதுமுள்ள உணவக சமையலறைகளில் அந்தத் தரம் மற்றும் தூய்மையைக் காணமுடியாமல் உள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் கைத்தொழில், வர்த்தக விவகார அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஹரீன் பெர்ணான்டோ, இராஜாங்கஅமைச்சர் சம்பிகா பிரேமதாச, கைத்தொழில், வர்த்தக விவகார அமைச்சின் செயலாளர் சிந்திக எஸ். முத்துஹெட்டி, நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

## மிலேனியம் சவால் பணியகத்தை இலங்கையில் அமைக்க அனுமதி

கொழும்பு, மார்ச் 17

அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு திட்டப் பணியகத்தை இலங்கையில் அமைப்பதற்கு, அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிலேனியம் சவால் ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 700 டொலரை முதலீடு செய்வதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. அபிவிருத்திக்கு இடையூறான பகுதிகள் என்று மிலேனியம் சவால் ஒத்துழைப்பு திட்டத்தால் அடையாளம் காணப்படும் பகுதிகளில், கொள்கை உறுதிப்பாடு, தரைவழிப் போக்குவரத்துத் துறைகளில் இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதிகளைப் பெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு இலங்கை நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். ஊழல் எதிர்ப்பு, மற்றும் ஜனநாயக தரநியமங்கள் என்பனவற்றில் அரசு தோல்வியடையுமானால், மிலேனியம் சவால் நிதியத்தின் உதவிகளை இழக்க நேரிடும்.

இந்த மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்துக்கான பணியகத்தை உருவாக்கி அதற்கான அதிகாரிகளை நியமிப்பதற்கு இலங்கை அரசு 58 மில்லியன் ரூபாவை 2017ஆம் ஆண்டு செலவிட வேண்டும். அதுபோன்று 2018 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலும், அதேளவு தொகை ஒதுக்க வேண்டும் என்றும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஓரங்கமாகவே மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்தை அமெரிக்கா செயற்படுத்தி வருகிறது.

இலங்கைக்கு 2005ஆம் ஆண்டில் இருந்து இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்ட போதிலும், இதற்குத் தேவையான தரநியமங்களைப் பூர்த்தி செய்யாததால் அது நிறுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தை மீண்டும் வழங்க தற்போது அமெரிக்கா முன்வந்துள்ளது. (ஐ-10)

### ஐ.நாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு

## இணை அனுசரணை வழங்குமாறு உலக நாடுகளுக்கு அமெ. வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் நல்லிணக்கத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்காக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குமாறு, உலக நாடுகளுக்குஅமெரிக்காவேண்டுகோள் விடுத்துள்ளது.

-இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பதில் பேச்சாளர் மார்க் ரோனர் தெரிவித்தார்.

இலங்கை குறித்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவது தொடர்பாக வொசிங்டனில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க மைத்திரிபால சிறிசேன அரசு மேற்கொண்டுள்ள தொடர்ச்சியான முயற்சிகளை அமெரிக்க அரசு பாராட்டுகிறது. இலங்கையில் அனைத்து மக்களுக்கும் நீதி மற்றும் அமைதியை ஏற்படுத்தும், எங்களது நீடித்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில், இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகள், பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் தீர்மான வரைவு கடந்த திங்கட்கிழமை, ஏனைய நட்புநாடுகளுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது.

இந்தத் தீர்மான வரைவுக்காக, பிரிட்டன், மொன்ரனிக்ரோ, மசிடோனியா மற்றும் இலங்கையுடன் அமெரிக்கா நெருக்கமாக இணைந்து பணியாற்றியுள்ளது.

மோதல்கள் மீண்டும் நிகழாமை, ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்தல், மற்றும் எல்லா இலங்கையர்களுக்குமான சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கையில், நல்லிணக்கம் மற்றும் நீதியை ஏற்படுத்துவதற்கு உதவும், இந்த வரைவை நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம்.

தீர்மானத்துக்கு மீண்டும் ஒருமுறை இணை அனுசரணை வழங்க இலங்கை இணங்கியிருப்பது மகிழ்ச்சி. இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கு ஆதரவு அளிக்கும் எண்ணம் கொண்ட ஐ.நா. உறுப்பு நாடுகள் அதனை நிரூபிக்கும் வகையில், தமது பெயர்களை இணை அனுசரணையாளர்களின் பட்டியலில் இணைத்துக் கொள்ள அழைக்கிறோம்- என்றார். (ஐ-10)

## 50 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

கொழும்பு, மார்ச் 17

ஆசிரியர் சேவையில் நிலவும் 50 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 2 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் துறை பயிற்றுவிப்பாளர்களாக 3 ஆயிரத்து 850 பேரை பயிற்றுவித்து பணியில் இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடக் கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நாடு முழுவதும் 700 பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன- என்றார். (ஐ-4)



# இனவாத அரசியல்வாதிகள் மக்களைக் குழப்ப முயற்சி

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 17

சமாதானம் ஏற்பட்ட பின்னர் வடக்கில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது இடங்களில் அமைதியாக இன நல்லுறவுடன் வாழ ஆரம்பித்துள்ளனர். ஆனால் இனவாத சிந்தனையுள்ள அரசியல்வாதிகள் அவர்களைக் குழப்பி சுயலாபம் தேட முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

மன்னார், முசலியில் நேற்று விதாதா வள நிலையம் வைபவரீதியாகத் திறக்கப்பட்டது. நிலையத்தைத் திறந்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த இந்தப் பிரதேசம், இடம்பெயர்வின் பின்னர் காடாகியது. வீதிகள் அழிந்து இருந்த இடம் தெரியாது பற்றைகளும், புதர்களும் மண்டிக் கிடந்தன. முசலிப் பிரதேசத்தில் அப்போது இரு வீதிகளே பாவனையில் இருந்தன.

புலிகளின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது இந்தப் பிரதேசத்தில் கட்டடங்களையும், பாடசாலைகளையும் சவால்களுக்கு மத்தியில் கட்டியெழுப்ப இறைவன் உதவினான். தனியாக நின்று நாம் செய்த முயற்சிகளுக்கு எவரும் உதவவில்லை. இப்போது குறைகளை மட்டும் பெரிதுபடுத்தி எம்மை விமர்சிப்பதில் காலம் கடத்துகின்றனர்.



விதாதா வள நிலையத்தை இந்தப் பிரதேசத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்று கடந்த காலங்களில் நாம் கொடுத்த அழுத்தங்களும், கோரிக்கைகளும் இப்போது சாத்தியமாகியுள்ளது. இது போன்று முல்லைத்தீவிலும், வவுனியாவிலும் நிலையங்களை அமைத்து இளைஞர், யுவதிகளின் தொழில் முயற்சியாண்மையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன எமக்கு உதவினார். விதாதா வள நிலையங்கள் கடந்த காலங்களில் ஆற்றிய பங்களிப்புகள் ஏராளம். அதற்குப் பொறுப்பான அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்னவும் சேவை மனப்பாங்கு கொண்டவர்.

அதேவேளை, வில்பத்திலே முஸ்லிம்கள் காடழிக்கின்றனர் என்றும், அதற்கு நானே துணை செய்கின்றேன் என்றும் இன்னும் சமூக வலைத்தளங்கள் மூலம் மோசமான பரப்புரைகள் செய்கின்றன. இங்கு வரும் பெரும்பான்மையின அமைச்சர்கள் உண்மை நிலையை அறிந்து ஊடகங்களுக்கும் சிங்கள சமூகத்துக்கும் விளக்க வேண்டும். இந்த விடயத்தில் அமைச்சர்களான ராஜித, சம்பிக்க போன்றவர்கள் உண்மையான, நேர்மையான கருத்துக்களை தெரிவிப்பது எமக்கு மகிழ்ச்சி தருகின்றது.

கடந்த தேர்தலில் அரச தலைவர் மைத்திரியின் வெற்றிக்காக உழைத்த சிங்கள புத்திஜீவிகளும் சூழலியலாளர்கள் சிலரும் இங்கு வந்து நிலைமைகளை அறிந்து ஊடகங்களில் எங்களின் நிலைப்பாட்டை உரத்துப் பேசுகின்றனர். மக்கள் சேவகர்களாக இருக்கும் அரச ஊழியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், கிராமிய உத்தியோகத்தர்களுக்குப் பெரும் சமூகப் பொறுப்பு உண்டு என்பதை நான் இந்த இடத்தில் வலியுறுத்துகின்றேன். இவர்கள் அநியாயங்களுக்கு துணைபோகவும் கூடாது - அப்பாவி மக்களுக்கு அநியாயம் செய்யவும் கூடாது, என்றார்.

விஞ்ஞான, தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் உட்படப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (ற - 21,56)

## பணம் தந்தால் வீடு எனக் கூறி கும்பல் மோசடி

### அவதானமாக இருக்குமாறு மக்களுக்கு அறிவித்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

பணம் செலுத்தி வீட்டுத் திட்டம் பெறலாம் என்று பொது மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். அது தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது;

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களிடம் இனந்தெரியாதவர்கள் தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்கின்றனர். வங்கிக் கணக்கிலக்கங்களை வழங்கி ஒரு தொகைப் பணத்தை வைப்புச் செய்தால் வீட்டுத் திட்டம் பெறமுடியும் என்று கூறி மோசடியில் ஈடுபடுகின்றனர். பொதுமக்கள் அவர்களிடம் ஏமாறக் கூடாது. இவ்வாறு ஏதும் சம்பவங்கள் நடந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுங்கள். என்றுள்ளது. (ற - ரி)

## பனை மரங்களை அழித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### முல்லை. மாவட்ட பனை அபிவிருத்தி சபை முகாமையாளர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை வளம் அழிக்கப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் பி.ரஜீபரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் அபிவிருத்தி எனும் போர்வையில் பனை வளம் அழிக்கப்படுகின்றது. அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள பகுதியில் பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. முள்ளியவளைப் பகுதியில் கள் உற்பத்தி செய்யப்படும் பனை மரங்கள் பல எரித்து நாசப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை மரங்கள் திட்ட மிடப்படாத வகைகளில் அழிக்கப்படும்போது பொதுமக்கள் முறைப்பாடுகள் செய்யப்படும் போது நாம் நேரடியாகச் சென்று தடுக்க முடியாது. பொலிஸாரின் உதவியுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என்றார். (ற - 7)

## கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு ரூ.30,000 தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையில் கசிப்பு வைத்திருந்த பெண் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சுபேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை இல்லாது ஒழிப்பதற்காக பிரதேச அமைப்புக்களும் பொலிஸாரும் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். நேற்று முன்தினம் பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவல் மற்றும் ரோந்து நடவடிக்கையின் போது 4. 750 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. அவற்றை வைத்திருந்த பெண் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் பகுதியில் ஒரு லீற்றர் மற்றும் 750 மில்லி லீற்றர் கசிப்பு உடமையில் வைத்திருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டனர். மாயவனூர் பகுதியில் 2 லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்தார் என்று குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அதே இடத்தில் ஒரு லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டு மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று முந்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மொத்தமாக 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற - 21,6)

## தகமையற்றோரால் நடத்தப்படும் மர்த்தன நிலையங்களால் ஆபத்து

வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக மசாஜ் நிலையம் அல்லது, மர்த்தன நிலையம், ஸ்பா என்ற பெயர்களில் நிலையங்கள் நடத்தப்படுகின்றன. சில தனிப்பட்ட நபர்கள் மக்களின் வீடுகளுக்குச் சென்றும் பணம் பெறும் நோக்கில் இவ்வாறான விடயங்களைக் கையாள்கின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சுதேச மருத்து ஆணையாளர் மருத்துவர் திருமதி சி.துஸ்ரரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

மர்த்தன சிகிச்சை என்பது சுதேச வைத்திய முறையின் ஒரு பகுதிச் சிகிச்சை முறையாகும். இந்தச் சிசிச்சையை ஒரு முறையான பல்கலைக்கழகக் கற்கை நெறியை பூர்த்தி செய்து பஞ்சகர்ம துறையில் விசேட பயிற்சி பெற்றுள்ள சித்த, யுனானி, ஆயுள்வேத மருத்துவர்களின் நேரடிக் கண்காணிப்பில் மட்டுமே மேற்கொள்ளவேண்டும்.

தகைமையற்றவர்களால் மேற்கொள்ளப்படுவது ஒரு முறையான சிகிச்சை அல்ல என்பதுடன் இது பல்வேறு ஆபத்தான நிலமைகளைத் தோற்றுவிக்கக் கூடியதொன்றாகும். பொதுமக்கள் அனைவரும் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ற - 21)

### மன்னார் இ.போ.ச. சாலை முகாமையாளராக

# தேர்வானவர் தமிழர் என்பதால் பதவியேற்பதைத் தடுக்கின்றனர்

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், மார்ச்.17

மன்னார் மாவட்ட இ.போ.ச. சாலைக்கு முகாமையாளராக தேர்வான அதிகாரி தமிழர் என்பதால் அவரைப் பதவி ஏற்கவிடாது ஓர் அமைச்சர் தடுக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்ட இ.போ.ச. சாலைக்கு நீண்ட காலமாக ஒரு நிரந்தர முகாமையாளர் இல்லை. இ.போ.சபையில் அண்மையில் இடம்பெற்ற முகாமையாளருக்கான நேர்முகத் தேர்வின் பின்னர் முகாமையாளராக ஓர் அதிகாரிக்கு இ.போ.சபையின் தலைவர் கடந்த வாரம் நியமனக் கடிதம் வழங்கினார். தேர்வான அதிகாரி தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக பதவி ஏற்கவிடாது ஓர் அமைச்சர் தடுக்கின்றார்.

தற்போது கடிதம் நியமனம் வழங்கப்பட்ட அதிகாரியை இ.போ.ச முகாமையே நியமித்துவிட்டு தற்போது அமைச்சரின் அழுத்தம் காரணமாக அதிகாரியை கடமையை பொறுப்பேற்க வேண்டாம் என தொலைபேசியில் அறிவுறுத்துகின்றனர். தமிழ் அதிகாரிக்குப் பதிலாக இதே வயது, இதே தகுதி மற்றும் இதேயளவு கால அனுபவம் உடைய வேறு ஓர் இனத்தவரை நியமிப்பதற்கான சதி முயற்சியாகவே சாலை ஊழியர்கள் அதனை கருதுகின்றனர்.


மன்னார் சாலையில் தற்போது ஏறக்குறைய 200 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அதில் 125 தமிழ் ஊழியர்களும், 75 முஸ்லிம் சகோதர ஊழியர்களும் உள்ளனர். கடந்த 14 ஆண்டுகளாக முஸ்லிம் அன்பர்களே முகாமையாளர்களாக பணியாற்றினர். தற்போது நேர்முகத் தேர்வின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்தை அமைச்சர் குறுக்கீடு செய்வது முறையற்ற செயல்.

இந்த விடயத்தை இ.போ.சபையின் தலைவரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். இது விடயத்தில் உரிய நீதி கிடைக்கப் பெறாது விட்டால் அடுத்த கட்டமாக பிரதமரை சந்தித்து முறையிடுவோம். அதற்கும் நீதி எட்டப்படவில்லை என்றால் இச் சாலையில் ஏற்படும் அனைத்து சம்பவங்கள், மனக் கசப்புக்களுக்கு அந்த அமைச்சரே பொறுப்பாளி ஆவார் - என்றார். (ற - 101)

## சசிகலாவால் சட்டசபையில் அமளிதுமளி

சென்னை, மார்ச் 17
தமிழக சட்டசபையின் வரவுசெலவுத் திட்ட கூட்டத்தொடர் நேற்று நடைபெற்றது. அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலா, துணைப் பொதுச் செயலாளர் தினகரன் ஆகியோரை தமிழக நிதியமைச்சர் ஜெயக்குமார் புகழ்ந்து பேசியதற்கு எதிர்கட்சிகள் கடும் எதிர்பைத் தெரிவித்தன. எதிர்கட்சிகளின் கூச்சல் மிக அதிகமாக இருந்ததால், வரவுசெலவுத் திட்ட உரையை தொடர்ந்து நிகழ்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் எதிர்கட்சிகளின் சார்பில் தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் சட்டசபையின் எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்ட ஒருவரை புகழ்ந்து பேசுவதற்கு இது இடமல்ல என்று ஸ்டாலின் தனது கட்டனத்தைத் தெரிவித்தார். (ம)






# நாள் ஒன்றுக்கு 140 பேர் சாவு

## கடந்த ஆறு வருடமாக சிரியாவின் நிலை இது

டமஸ்கஸ், மார்ச் 17
சிரியாவில் கடந்த ஆறு வருடங்களாக நடைபெற்றுவரும் போரில் இதுவரை 3 லட்சம் மக்கள் சாவடைந்துள்ளனர் என்று பிரிட்டனை தலைமையகமாகக் கொண்டுள்ள நிறுவனமொன்று நடத்திய ஆய்வில் வெளிப்பட்டது. இந்த ஆய்வின்படி நாள் ஒன்றுக்கு 140 பேர் என்ற சராசரியில் சிரிய மக்கள் போரால் கொல்லப்பட்டுள்ளனர்.
சிரியாவில் கடந்த சில வருடங்களாக இரு முனைப் போர் நடந்து வருகிறது. ஒன்று சிரிய அரசுக்கும் அரசுக்கு எதிராக் கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையிலான போர். மற்றொன்று சிரிய அரசுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புக்கும் இடையிலான போர். இந்த இருமுனைப் போர்கள் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் செத்து மடிந்தனர். போர்க்குற்றங்கள் அரங்கேறின. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். தற்போது அங்கு கடந்த வருடங்களைப் போல் அல்லாமல் ஓரளவு அமைதி திரும்புகிறது. குறிப்பாக அலெப்போவில் நடைபெற்று வந்த போர் முடிந்துவிட்டது.
இதனால் அங்கு நடந்த போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், உயிரிழப்புக்கள் தொடர்பான கணக்கெடுப்புக்கள் ஆகியன தற்போது நடைபெற்றுவருகின்றன. பற்பல அமைப்புக்களும் இவை தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன. பிரிட்டன் மனித உரிமை கண்காணிப்பகம் நடத்திய ஆய்வில் கடந்த 6 வருடங்களில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் சிரியாவில் சாவடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்பைத் தவிர 1.5 லட்சம் மக்கள் காணாமல் போயுள்ளனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருத்துக்கள் உள்ளன.
ஐக்கிய நாடுகள் சபை சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சிரியச் சிறுவர்களின் மோசமாக பதிவாக கடந்த ஆண்டே உள்ளது என்று குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மே 9ஆம் திகதி தென்கொரியாவில் அதிபர் தேர்தல்

சியோல், மார்ச் 17
தென்கொரியாவின் முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை பதவி விலக்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி அதிபர் தேர்தலை எதிர்கொள்கிறது தென்கொரியா.
தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை மீதும் அவர் தலைமையிலான அரசின் மீதும் ஏகப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதிபருடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி அதிபரின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரச விவகாரங்களில் தலையீடு செய்தார். முக்கிய ஆவணங்களை ஆராய்ந்தார் என்று எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன.
இதனையடுத்து தலைநகர் சியோலில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவர்கள் பார்க்கை கைது செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.
இதனால் தென்கொரிய நாடாளுமன்றத்தால் பார்க் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்த முடிவை எதிர்த்து, பார்க் கியூன் ஹை அந்த நாட்டின் அரசியலமைப்பு சட்ட உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டார்.
இந்த முறையீட்டின் மீது விசாரணை நடத்திய மன்று, பார்க் கியூன் ஹையை நாடாளுமன்றம் நீக்கியது செல்லும். அவரது பதவி நீக்கம் உறுதியாகிறது என்று கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தது. இதைவிட எதிர்வரும் 21 ஆம் திகதி இந்த வழக்கில் பார்க் நேரில் வருகை தந்து விளக்கமளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தது.
பார்க்கின் விலகல் உறுதியானதை அடுத்து புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை தென்கொரியா விரைவில் எதிர்கொள்ளும் என்று கருதப்பட்ட நிலையில் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி இந்தத் தேர்தல் நடைபெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ம)





சவூதி அரேபிய மன்னர் சல்மா
நாடுகளின் தனது பயணத்தை
குண்டுதுளைக்காத ஆடம்ப
பலப்படுத்தப்பட்டுள்ளது. அ
என்று பன்னாட்டு ஊடகங்கள்



## 5 மில். டொலர் பெறு
## காண்டாமிருக கொம்

5 மில்லியன் டொலர் பெறுமதியு
மிருகக் கொம்புகள் தாய்லாந்தின்
நிலையத்தில் அண்மையில் மீட்கப்
எத்தியோப்பியாவில் இருந்து வந்த
இந்தக் கொம்புகள் மீட்கப்பட்டன
கொண்டுவந்த இரண்டு தாய்லாந்
பித்துச் சென்றுவிட்டனர். கடந்த
திற்கு மேற்பட்ட காண்டாமிருகங்க
டுள்ளதோடு, கடந்த ஒரு தசாப்த கா
காவில் காண்டாமிருக வேட்டை
றது. ஆசியாவில் காண்டாமிருகக்
தேவை அதிகரித்திருப்பதால் இந்த
பெற்று வருகிறது என்று பன்னா
செய்தி வெளியிட்டன.

## கான்பூரில் விபத்து; 6 பேர் உயிரிழப்பு

இந்தியா – உத்தரபிரதேசம் கான்பூரில் குளிர்பதனக் கிடங்கொன்று இடிந்து விழுந்ததில் 6 பேர் உடல் நசுங்கி சாவடைந்தனர். 13 பேர் மீட்கப்பட்டனர். அவர்களில் 8 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருசிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

# சிரியாவில் இரட்டைத் தாக்குத
# 30 பொதுமக்கள் பரிதாபச் சா

டமஸ்கஸ், மார்ச் 17
சிரியாவில் நேற்று நிகழ்த்தப்பட்ட இருவேறு தற்கொலைத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.
சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் உள்ள நீதிமன்றக் கட்டடம் மற்றும் ஓர் உணவகம் ஆகிய வற்றில் நேற்றுக் காலை, (இலங்கை நேரப்படி) நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த உயி



ரிழப்புக்கள்
ரிழந்தவர்க
டைந்தவர்க
ளும், குழந்
கம் என்று சி
நிறுவனமா
தது. இந்தத்
நேற்று மதி
அமைப்பும்
வில்லை. எ
.ஐ.எஸ். அ
நடத்தியிருக்
சந்தேகிக்கப்



சல்மான், ஆசிய நாடுகள் சிலவற்றுக்கு தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். மாலைதீவு, இந்தோனேசியா த்தை முடித்துக் கொண்டு தற்போது அவர் ஜப்பானுக்குச் சென்றுள்ளார். அவரது பாதுகாப்புக்காக அணிவகுத்து நிற்கும் டம்பர சொகுசுக் கார்களின் ஒளிப்படமே இது. மன்னரின் வரவால் ஜப்பானின் பல இடங்களில் பாதுகாப்புப் து. அடுத்ததாக அவர் சீனாவுக்குச் செல்லவுள்ளார். அங்கும் மன்னருக்காக ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன கங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# ஆயுததாரிகள் மூவருக்கு தூக்குத் தண்டனை

இஸ்லாமபாத், மார்ச் 17
மூன்று ஆயுததாரிகளுக்கு நேற்றுமுன்தினம் தூக்குத் தண்டனையை நிறைவேற்றியது பாகிஸ்தான் அரசு. இராணுவத்தினர்-மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை, தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டமை ஆகிய குற்றங்களுடன் தொடர்புடைய மூவரே இவ் வாறு தூக்கிட்டுக் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் சிறைகளில் ஒட்டுமொத்தமாக 8 ஆயிரம் கைதிகள் சாவுத்தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கின் னர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இமோஜி மலைப் பாம்பு!

ஜோர்ஜியாவைச் சேர்ந்த பிராணிகள் வள ளர் ஜஸ்டின் கோபில்கா என்பவர், வெள்ளை மலைப்பாம்பை மஞ்சள் உருவங்களுடன் இமோஜி (மனித முகபாவனைக பிரதிபலிக்கும் விதமாக உள்ள உருவ இமோஜி என்ற பொதுப் பெயர் கொண்டு அ கப்படும்) மலைப்பாம்பாக மாற்றியுள்ளார். 8 ஆண்டுகள் செய்த பரிசோதனைகள் மூல இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆபிரி மலைப் பாம்புகளில் இது சிறியது. சாதாரணமா இத்தகைய பாம்புகள் 2 ஆயிரம் முதல் 10 ஆயி ரம் ரூபாய் வரை விற்கப்படும். ஆனால் இமோஜி மலைப் பாம்பு 3 லட்சம் வரை விலை கேட்கப்பட் டுள்ளது. ஆனாலும் விற்பனை செய்யும் திட்டம் இல்லை என்கிறார் ஜஸ்டின். (ம)





# மீட்புப் பணி துரித கதியில்

வொஷிங்டன், மார்ச் 17
பனிப் புயல் காரணமாக அமெரிக்கா வின் வழகிழக்குப் பகுதிகளில் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட் டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் துரித கதியில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு முதல் நேற்று முன்தி னம் இரவு வரை அமெரிக்காவின் வடகிழக்குப் பகு தியில் பனிப்புயல் தாக்கியது. இந் தப் பனிப்புயலின் காரணமாக வொஷிங்டன், மாசச்சூசெட்ஸ், கனெக்டிகட், நியூ ஜெர்ஸி மாகா ணங்கள் மற்றும் ஆன் லொங் தீவு உள்ளிட்ட பகுதிக ளில் உள்ள மூன்று கோடிக்கும் அதிகமான மக் கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். இந்தப் பகுதிகளில் எங்குபார்த்தா லும் வெண்பனிமூட்டமாகக் காணப் படுகின்றது. போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள், பல்கலைக் கழகங் கள், கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. சில அரச அலுவலகங்களுக்கும் விடுமுறை வழக்கப்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கைக்கு மிக விரைவா கத் திரும்பும் வகையில் மீட்புப் பணி கள் துரித கதியில் நடைபெற்று வரு கின்றன. (ம)



# பெறுமதியுடைய கொம்புகள் மீட்பு

றுமதியுடைய காண்டா ந்தின் பிரதான விமான மீட்கப்பட்டுள்ளன.
வந்த ஒரு சூட்கேஸில் பட்டன. சூட்கேஸைக் லாந்துப் பெண்கள் தப் டந்த ஆண்டு ஆயிரத் ருகங்கள் கொல்லப்பட் ாய்த காலத்தில் ஆபிரிக் டை அதிகரித்து வருகி மிருகக் கொம்புகளின் இந்த வர்த்தகம் நடை ன்னாட்டு ஊடகங்கள் (ம)

# தல் சாவு

க்கள் ஏற்பட்டன. உயி தவர்களிலும், காயம தவர்களிலும் பெண்க குழந்தைகளுமே அதி ன்று சிரிய அரச செய்தி ணமான சனா தெரிவித் இந்தத் தாக்குதலுக்கு மதியம் வரை எந்த ப்பும் பொறுப்பேற்க லை. எனினும், ஐ.எஸ் . அமைப்பே இதனை யிருக்கலாம் என்று கிக்கப்படுகிறது. (ம)

# இரட்டையிலைச் சின்னத்துக்கு மல்லுக்கட்டு

அ.தி.மு. கழகத்தின் சட்ட விதிகளுக்கு முரணா கவே சசிகலா தெரிவாகி யுள்ளார் என்றும், அத னால் இரட்டையிலைச் சின்னத்தை தமக்கே வழங்க வேண்டும் என் றும் தேர்தல் ஆணையத் திடம் ஓ.பன்னீர்செல்வ மும் அவரது ஆதரவு சட் டமன்ற உறுப்பினர்க ளும் வலியுறுத்தினர்.

முன்னாள் முதல்வர் ஜெய லலிதா உயிரிழந்த பின் னர், அவர் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.கழகத்தின் சார்பில் மருதுகணேஸ் என்பவ ரும், அ.தி.மு. கழகத்தின் சார்பில் தினகரனும் போட்டியிடப்போவது உறுதியாகியுள்ளது.

உட்கட்சிப் பூசல்களால் அ.தி.மு. கழகத்தின் முக் கியஸ்தரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன் னீர்செல்வமும் அவ ருக்கு ஆதரவான சில சட்டமன்ற உறுப்பினர்க ளும் தனித்துச் செயற் பட்டு வருகின்றனர். இவர்களில் எவர் ஆ.கே. நகரில் போட்டியிடப் போவது என்பது உறுதி யாகவில்லை. இந்த அறி விப்புக்கு முன்பாக ஓ. பி.எஸ். தரப்பு அ.தி.மு. கழகத்தின் சின்னமான இரட்டையிலையை கைப்பற்ற கடும் முனைப் புக்காட்டி வருகிறது.

இந்திய தலைமைத் தேர் தல் ஆணையாளர் நஜீம், ஓ.பன்னீர்செல்வம் ஆகி யோருக்கு இடையிலான சந்திப்பொன்று டெல்லி யில் அண்மையில் இடம் பெற்றது. இதில், அ.தி.மு. கழகத்தின் சட்டவிதிக ளுக்கு முரணாக சசிகலா பொதுச் செயலாளராகத் தெரிவாகியிருப்பதால், அவரது நியமனம் செல் லுபடியற்றதாகிறது. ஒரு வர் தன்னைத்தானே பொதுச் செயலாளர் என்று பிரகடனப் படுத்திக் கொண்டு செயற்படுவது ஏற்கத்தக்கது அல்ல. இத னால் கட்சியின் சின்ன மான இரட்டையிலை தமக்கு வழங்க வேண் டும் என்று ஓ.பி.எஸ். தரப்பி னர் வலியுறுத்தினர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# மடகஸ்கர் எனாவோ புயலில் சாவு எண்ணிக்கை 78ஆனது

அண்டனானரிவோ,மார்ச்17
மடகஸ்கரில் கடந்த வாரம் வீசிய எனாவொ என்ற புயலினால் உயிரி ழந்தவர்களின் எண் ணிக்கை 78 ஆக உயர் வடைந்தது.

மணிக்கு 210 கிலோ மீற் றர் வேகத்தில் மடகஸ் கரை கடந்த வாரம் புயல் பதம் பார்த்தது. 37 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்ட தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் மீட்புப்பணிகள் தொடர்ந்ததால் உயிரி ழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் விடுக்கப் பட்டது. நேற்றுமுன்தின நிலவரத்தின்படி உயிரி ழப்பு எண்ணிக்கை 78 ஆக உயர்வடைந்தது. மேலும் 250 பேர் காயம டைந்துள்ளனர். அவர்க ளில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள் ளது. 18 பேரைக் காண வில்லை. இவை காரண மாக உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச் சம் வெளியிடப்பட்டது. புயலால் 7 லட்சம் பேர் நேர டியாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





# பொருளாதாரத்தின் உறுதித்தன்மையை பேணுவதில் முக்கிய பங்குதாரர்களாக விவசாயிகள்

*அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்துரைப்பு*

நாட்டினுடைய பொருளாதார உறுதித் தன்மையை பேணுவதில் முக்கிய பங்குதாரர்களாக விவசாயிகள் விளங்குகின்றனர் என்பதான கருத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, ஒரு நாட்டின் காணி உரிமை மக்களுக்கு உரித்தாவதைப்போன்றே விவசாய நிலங்களின் உரிமை விவசாய சமூகத்துக்கு சொந்தமானதெனக் குறிப்பிட்டுள்ளார்.

வெல்லவாயவில் அண்மையில் இடம் பெற்றிருந்த காணி உறுதிகளை வழங்கிவைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும்,

"பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்பட்டதான நெல் அறுவடை நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக நூற்றுக்கு 40 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசுக்கு எதிரானவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனாலும், இயற்கை ஒன்றும் அந்தளவு கருணையற்ற ஒன்றல்ல. மக்களுக்காக மாற்றங்களைத் தரும். அதேவேளை மக்கள் வழங்கிய ஆணையை மதித்து அரசு பொறுப்புகளையும் கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றி வருகின்றது. அரசு இன்று அல்லது நாளை கலைந்துவிடுமென சிலர் எண்ணிக் கொண்டிருந்தாலும் அவ்வாறான சம்பவங்கள் ஒருபோதும் இடம்பெறாது. அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது" - என்றார்.

"பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்பட்டதான நெல் அறுவடை நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக நூற்றுக்கு 40 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

- மைத்திரிபால சிறிசேன




# செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப நாசா திட்டம்

*2033ஆம் ஆண்டுக்குள் சாத்தியமாக்க தீர்மானம்*

2033ஆம் ஆண்டிற்குள் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப வேண்டும் என்பதான வேண்டுதலை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்திடம் அந்நாட்டு நாடாளுமன்றம் முன்வைத்துள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவதற்கான அங்கீகாரத்தினை நாசாவுக்கு வழங்குவதற்கான புதிய சட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் நாசாவுக்கு 19.5 பில்லியன் டொலர் தொகை மதிப்புடையதான நிதியினை ஒதுக்கவும் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பான விளக்கமான திட்ட அறிக்கையைத் தயாரித்து எதிர்வருகின்ற டிசெம்பர் முதலாம் திகதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நாசாவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அப்பலோ விண்கலம் மூலம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தில் நாசா ஆய்வு மையம் கவனம் செலுத்தி வருவதாகவும் அங்கு மனிதர்களை குடியேற்றம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் கூறப்படுகிறது.

செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆய்வுகளுக்காக கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் ஏற்கனவே விண்வெளியில் செலுத்தப்பட்டுள்ள நிலையில் மற்றொரு ரோவர் விண்கலத்தினை 2020ஆம் ஆண்டளவில் விண்வெளிக்கு அனுப்பி வைக்க நாசா திட்டமிட்டுள்ளது.

தவிர, சிவப்புக் கோளில் மனிதர்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையான ஒட்சிசன் உள்ளிட்டதான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வினை இந்த விண்கலம் மேற்கொள்ளும் என்று நாசா தெரிவித்துள்ளது.

# சீனியின் விலை உயரும்

*அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி சங்கம் தெரிவிப்பு*

அத்தியாவசியப் பொருள்களுள் சீனியின் விலை நிர்ணயம் எதிர்காலத்தில் அதிகப்படுத்தப்படும் என்பதான கருத்தினை அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிச் சங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் ஒருகிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை நிர்ணயம் 110 ரூபா தொடக்கம் 115 ரூபா வரை விற்பனை செய்யப்படும் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதானமாக ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியை இறக்குமதி செய்வதற்கு 107 ரூபா செலவிடப்படுவதுடன் போக்குவரத்து கட்டணம் உள்ளிட்டதான அனைத்து செலவினங்களையும் கருத்தில் கொள்ளும் போது ஒருகிலோகிராம் வெள்ளைச் சீனியினை மேற்படி அதிகரித்த விலை நிர்ணயத்தோடு விற்பனை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் வர்த்தகர்கள் அதிக நட்டத்துக்கு மத்தியிலே நிர்ணய விலையின் கீழான சீனி விற்பனைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்யும் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன சுட்டிகாட்டியுள்ளார்.

அதேவேளை வெள்ளைச் சீனி மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ளதான கட்டுப்பாட்டு விலைகளை நீக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுக் குழுவில் உள்ளதான குறித்த இரண்டு பொருள்கள் தொடர்பிலும் நுகர்வோரின் தேவைப்பாடு. இறக்குமதி விலை மற்றும் சந்தை விலை போன்றவற்றை கருத்திற்கொண்டே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.








# இலங்கை வங்கியின் மகளிர் தின நிகழ்வுகள் கடந்தவாரம் கொண்டாடப்பட்டது

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கி ஏற்பாடு செய்திருந்ததான மகளிர் தின நிகழ்வுகள் கடந்த வியாழக் கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் வன்னிப்பிராந்திய முகாமையாளர் இ. பிறேமராஜன் தலைமையில் இடம்பெற்றிருந்த இந்த நிகழ்வில் "பெண்கள் நலனில் போசாக்கும்" என்ற தலைப்பின் கீழான முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி பூங்கோதை தயாளசேனன் கருத்துரை வழங்கினார்.

மேலும் இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் எம். ஜெ.பிரபாகரன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி பூங்கோதை தயாளசேனன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதே சங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் மகளிர் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாடசாலைகளில் போதைப் பொருள் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனையின் அவசியம்

திருமதி கிருஷ்ணவேணி சிங்கராஜன்

“சகல பிள்ளைகளும் உய்யவும் மேம்பாடு அடையவும் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும் இடமளிக்கக் கூடிய ஆரோக்கியமான பாடசாலைச் சூழலில் கற்பதற்குரிய வாய்ப்பை ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கொண்டிருக்க வேண்டும்” என்பது பாடசாலை வழிகாட்டல் ஆலோசனையின் தூர நோக்காக உள்ளது.

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை ஒழுங்கமைப்பானது ஆரம்பப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை ஒழுங்கமைப்பு, இடைநிலைப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை ஒழுங்கமைப்பு என இரண்டாகப் பிரிந்து வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலை சார் மாணவர்கள் மத்தியிலே வழிகாட்டல் ஆலோசனையின் பங்கு பெறுமதி மிக்கதாய்க் கருதப்படுகின்றது. ஒவ்வொரு மாணவனும் மாணவியும் உளரீதியான சமூக ரீதியான உணர்ச்சி ரீதியான நலன் பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு கருதுகோளாக இருக்கின்றது.

**இன்றைய சமூகம்**

இன்று எமது சமூகம் குறிப்பாக அறிவாளிகளாக, புத்திஜீவிகளாக, எதிர்காலத்தூண்களாக நாம் எண்ணிக் கொண்டிருக்கும் மாணவ சமூகத்தின் ஒரு தொகுதியினர், எங்களது கலாசாரம், பண்பாடு, மனித நேயம் என்பவற்றைப் புறந்தள்ளிவிட்டுப் போதைப் பொருள் என்னும் அரக்கனின் ஆளுகைக்கு உட்பட்டுத் தமது இலக்கைத் தவறவிட்டு நடைப் பிணங்களாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் அரக்கனின் கோரப்பிடியிலிருந்து எமது இளம் தலைமுறையை மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்த நோக்கத்தோடு தான் பாடசாலைகள்தோறும் போதைப் பொருள் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைச் சேவை இடம்பெற்று வருகிறது.

போதைப் பொருள் பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகப் பல உள்ளன. அவை குடும்பம், சூழல், சமூகம், பொருளாதாரம், நாகரிக வளர்ச்சி,சம வயதுக் குழுக்கள் என்பனவாகும்.

ஒருவன் தன்னைப் பற்றித்தானே மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும். தன்னிடமுள்ள வளங்கள் தனது பிரச்சினைகள் தனது தேவைகள் என்பவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். அவனது செயற்பாடுகள் திருப்தி தருவதாக அமையவேண்டும். அவன் சில சிக்கலான சூழ்நிலைகளால் வழி தவறுகின்றான். அந்த வகையில், மாணவன் ஒருவன் தன்னை உணர்தல், தன்னைப் புரிந்து கொள்ளல், தன்னை ஏற்றுக்கொள்ளல் போன்றவற்றில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

இன்று எமது சமூகம் போதைப்பொருள் பாவனை அவலத்தைக் கண்கூடாகக் கண்டுவருகிறது. எமது சமூகத்தின் கட்டுக் கோப்பை உடைத்தெறிந்து மாணவர் மத்தியிலே போதைப் பொருள் பாவனையைத் தூண்டுவதிலே சில சமூகவிரோத சக்திகள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றமையானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

**பதின்ம வயது மாணவர்கள்**

குறிப்பாக பதின்ம வயது மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனையை ஊக்குவித்து அவர்கள் அந்தப்பாவனையிலிருந்து விடுபட முடியாத நிலையை ஏற்படுத்தி அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு தொகுதியினர் எம்மிடையே- எமது மண்ணில் உள்ளமை சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

இதன் காரணமாகவே பாடசாலைகளில் போதைப் பொருள் பாவனைக்கு உட்பட்டவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகளும் ஏனைய மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் அதீத செயற்பாடுகளாக கொலை, கொள்ளை, வன்முறைகள், குடும்ப வன்முறைகள், பாலியல் துர்நடத்தைகள் கலாசார சீரழிவுகள் போன்றன காணப்படுகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையாகிய மாணவர்களுக்கு ஏற்றவகையில் உளவளத்துணைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். பெரும்பாலும் நகரப் புறப் பாடசாலைகளிலேயே போதைப் பொருளுக்கு அடிமையாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. மாவா, கஞ்சா என வகை வகையான போதை ஊட்டக் கூடிய பொருள்கள் விற்பனையில் இரகசிய முகவர்கள் செயற்பட்டு மாணவர்களின் கற்றலைச் சீர்குலைத்து வருகின்றனர்.

> ”போதைப் பொருள் என்னும் அரக்கனின் கோரப்பிடியிலிருந்து எமது இளம் தலைமுறையை மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்த நோக்கத்தோடு தான் பாடசாலைகள்தோறும் போதைப் பொருள் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைச் சேவை இடம்பெற்று வருகிறது. போதைப் பொருள் பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகப் பல உள்ளன. அவை குடும்பம், சூழல், சமூகம், பொருளாதாரம், நாகரிக வளர்ச்சி,சம வயதுக் குழுக்கள் என்பனவாகும்.

**நாளாந்தம் வழிகாட்டல் ஆலோசனைகள்**

இவ்வாறான மாணவர்களுக்கு நாளாந்தம் அவர்களுக்கேற்ற வகையில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கப்பட வேண்டும். இதனாலேயே பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவை வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலையிலே அனைத்து ஆசிரியர்களும் வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியது தார்மீகப் பொறுப்பாக உள்ளது. போதைப் பொருள் பாவனையால் நெறிபிறழ்வுக்கு உட்பட்ட மாணவர்களையும் சமூகத்தோடு இணைத்துக் கொள்ளப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள் இன்றியமையாதவையாக உள்ளன.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்குச் சபையின் அசண்டையீனம்

வடக்கு மாகாண சபை மீது அண்மைக் காலமாக மற்றொரு முக்கியகுற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவருகின்றது. வடக்கின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அது அக்கறையுடன் செயற்படவில்லை, முதலிடுவதற்கு மிகக் கடினமான இடமாக வடக்குமாகாணம்காணப்படுகின்றது என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு.

வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ள புலம்பெயர் தமிழர்களை வடக்கில் முதலிட வருமாறு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுக்கிறார். ஆனால், புலம்பெயர் தமிழர்கள் முதலிட வந்தால் அவர்களை அரவணைத்து ஊக்குவிப்பதற்குப் பதில் முடிந்த அளவுக்கு அவர்களுக்குப் பிரச்சினைகளைக் கொடுத்து அவர்களை விரட்டியடிக்கிறார்கள் என்பது முதலீட்டாளர்கள் பலரது குற்றச்சாட்டு. வெளிநாட்டவர்கள் வடக்கில் முதலிட வரும்போது, அவர்கள் தமிழர்களாகவே இருந்தாலும், கொழும்பு அரசின் ஊடாகத்தான் வரவேண்டியிருக்கிறது, அங்கு முதலீட்டாளர்களுக்குக் காட்டப்படும் அன்பும் அரவணைப்பும்கூட வடக்கில் காட்டப்படுவதில்லை என்பது அவர்களின் பெரும் குறை.

கொழும்பு அரசுக்கும் வடக்கு அரசுக்கும் இடையே இருக்கும் அரசியல் பிரச்சினையைக் காரணம் காட்டி முதலீட்டாளர்கள் வதைக்கப்படுகிறார்கள் என்பது பரவலாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டாக இருக்கிறது. ஒரு முதலீட்டுத் திட்டத்துக்கு அனுமதி கேட்டு ஓர் அமைச்சுக்கு வேண்டுகை முன்வைத்தால், அதை நீண்ட காலத்துக்கு இழுத்தடித்துவிட்டுப் பின்னர் இதற்கான அனுமதியை நான் தரமுடியாது மற்றொரு அமைச்சுத்தான் தரவேண்டும் என்று தம்மை அல்லாடவிட்டும் அலைக்கழித்தும் உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவதாகவும் அவர்கள் குறைப்படுகின்றனர்.

வடக்குக்கான பொருளாதார நடுவண் நிலையத்தை எங்கு அமைப்பது என்பதில் ஏற்பட்ட இழுபறி இதற்கான மற்றொரு உதாரணம். கடைசியில் இரு பொருளாதார நடுவண் நிலையங்கள் அமைக்கும்படி கொழும்பு வழங்கிய ஆலோசனைக்கு அமைய பிரச்சினை முடிவுக்கு வந்தாலும் இரண்டாவது நிலையத்தை அமைப்பிப்பதற்கு மாகாணசபை எடுத்த நடவடிக்கைகள் பற்றித் தகவல் இல்லை. வரும் முதலீடுகளைத் தடுக்கும் வகையிலான செயற்பாடுகள், கொழும்பிடமிருந்து கிடைத்த வாக்குறுதியைச் செயற்படுத்த வைப்பதில் காட்டும் மெத்தனம், இருக்கும் தொழில் வாய்ப்புகளை நிரப்புவதில் காட்டும் தாமதம், தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதில் காட்டும் அக்கறையற்ற தன்மை என்பவற்றைப் பார்க்கும்போது வடக்கின் பொருளாதார விருத்தி தொடர்பில் வடக்கு மாகாணசபையிடம் கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பொருளாதார வளம் இன்றி வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமல்ல. வடக்கைக் கட்டியெழுப்புவதற்கான முதலீட்டு மாநாடு ஒன்றைக் கடந்த வருடத்தில் ஜப்பானில் நடத்த இருப்பதாகக் கொழும்பு அரசு முதலில் தெரிவித்தது எனினும் அதன் பின்னர் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. அதற்குப் பின்னர் வடக்கின் பொருளாதார அபிவிருத்தி பற்றியும் தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் குறித்தும் இப்போது வரைக்கும் உருப்படியான திட்டங்கள் எவையும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

போர் ஓய்வுக்கு வந்து ஒரு தசாப்த காலத்தை நாம் எட்டுகின்றபோதிலும் வடக்கின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மிடம் திட்டம் ஏதுமில்லை என்பது எவ்வளவு பெரிய அபத்தம். இதுபற்றி வடக்கு அரசு கிஞ்சித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அரசியல் செய்வது மட்டுமே மாகாண சபையின் நோக்கமல்ல என்பதை அங்குள்ளவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதும் அரசுகளின் தலையாய பணிதான். வாழ்வு மேம்படவேண்டும் என்றால், பொருளாதாரம் வளம்பெற வேண்டும். வடக்கு மாகாண சபைக்கும் அதன் முதலமைச்சருக்கும் அமைச்சர்களுக்கும் அது பற்றிய கவலையோ அக்கறையோ இருப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கனடா வாழ் வர்த்தகர்கள்கூட தமக்கு முதலமைச்சரிடம் இருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் நிலையில் மாகாண சபைக்கு இந்த விடயத்தை உறைக்கச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

## முஸ்லிம் காங்கிரஸை வீழ்த்தும்

# பஷீர் சேகுதாவூத்தின் கனவு பலிக்குமா?

எம்.ஐ.முபாறக்



பஷீர் சேகுதாவூத்

உட்கட்சிப் பிளவு என்பது மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில்தான் உச்சத்தில் இருந்தது என்று சொல்ல வேண்டும். சில தசாப்தங்களுக்கு மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது என நினைத்த எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த, பதவி மோகம் கொண்ட, கொள்கைப் பிடிப்பற்ற சில அரசியல்வாதிகள் தத்தமது கட்சிகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தினர். தலைமைத்துவத்துக்கு எதிராகப் போராடினர். இறுதியில் மகிந்தவுடன் போய் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் கடந்த காலங்களில் ஒரே மாதிரியான பிளவுகளைச் சந்தித்தன. அந்தக் கட்சிகளில் இருந்த சிலர், கட்சித் தலைமைத்துவத்தில் குறைகண்டு மகிந்தவுடன் போய்ச் சேர்ந்துகொண்டனர். இதனால் அந்தக் கட்சிகள் வீழ்ச்சியைச் சந்திக்கத் தொடங்கின; தங்களைப் பாதுகாக்கப் போராடின.

ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் மாத்திரம் வித்தியாசமான ஒரு இராஜதந்திரத்தைக் கையாண்டது. அதனூடாக கட்சியில் மேலதிக பிளவு ஏற்படாது ஓரளவு பாதுகாத்துக்கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸின் நிறுவனத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் மறைவைத் தொடர்ந்து அந்தக் கட்சி பிளவு என்ற தலையிடியைச் சந்திக்கத் தொடங்கியது. அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக இருந்தபோது அந்தக் கட்சிக்கு வெளியில் இருந்த சிலரால் அரசியல் நடத்த முடியவில்லை. இதனால் சந்தர்ப்பம் கிடைக்கும்வரை கட்சியில் அவர்கள் இணைந்திருந்தனர்.

அஷ்ரப் சாவடைந்தபோது, இவர்கள்தான் உள்ளூர மகிழ்ந்தார்கள். கட்சியின் புதிய தலைவர் ரவுப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்ற ஒரு காரணத்தை முன்வைத்து, பிரதேசவாதத்தைத் தூண்டி அதனூடாகக் கட்சி தாவி அவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

> கட்சியின் தவிசாளராக இருந்துகொண்டு, கட்சியின் தலைவருக்கே தெரியாமல் பஷீர் சேகுதாவூத் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதுவே அந்தப் பிளவுக்குக் காரணம். ஆனால், அவர் கட்சியை விட்டு வெளியேறவில்லை.

### பிளவுகளைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ்

அவர்களின் திட்டப்படி கட்சி பிளவுபட்டது. அமைச்சுப் பதவிக் கனவும் நிறைவேறியது. காலப்போக்கில் சிலர் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குத் திரும்பினர்; சிலர் அரசியலில் காணாமல் போயினர்; சிலர் அந்த அஸ்ரப்பின் பெயரை வைத்து இன்னமும் அரசியல் செய்து வருகின்றனர்.

அதன் பின்னர், 2005 இல் முஸ்லிம் காங்கிரஸ் மற்றுமொரு பெரும் பிளவைச் சந்தித்தது. சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த அந்தக் காலப்பகுதியில், முஸ்லிம் காங்கிரஸில் இருந்து ஹுசைன் பைலா, ரிசாத் பதியுதீன், அமீர் அலி மற்றும் நஜீப் ஏ மஜீத் ஆகியோர் அரசின் பக்கம் தாவினர். அவர்களின் விருப்பப்படி, அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்று அவரது ஆட்சி ஆரம்பமானது. அவரது ஆட்சியின்போதும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிளவுகள் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. மகிந்தவின் உறவினர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் ஊடாக அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இரகசியமாக முயற்சி எடுத்த வரலாறும் உண்டு.

இந்தச் சதியை நன்கு உணர்ந்து, தொடர்ந்தும் எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்தால், தான் மட்டும்தான் கட்சியில் மிஞ்சுவேன் என உணர்ந்த ரவூப் ஹக்கீம், கட்சியின் பிளவைத் தடுப்பதற்காக அரைகுறை மனதுடன் மகிந்த அரசில் போய் இணைந்து கொண்டார்.

அவ்வாறு இணைந்தும்கூட, அமைச்சுப் பதவிக்காக அங்கு இன்னுமொரு தடவை பிளவு ஏற்பட்டது. கட்சியின் தவிசாளராக இருந்துகொண்டு, கட்சியின் தலைவருக்கே தெரியாமல் பஷீர் சேகுதாவூத் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதுவே அந்தப் பிளவுக்குக் காரணம். ஆனால், அவர் கட்சியை விட்டு வெளியேறவில்லை.

கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக, ஹக்கீம் ஆட்சி மாற்றத்தையே

நாடினார். இதனால்தான் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மகிந்தவுக்கு எதிரான அணியில் நின்று போராடினார்.

**நல்லாட்சி அரசு அமைந்த பின்னரும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் பூசல்கள்**

2015இல் அவர் எதிர்பார்த்தபடி, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கான சாதகமான நிலைமையும் தென்பட்டது. அவ்வாறு இருந்தும், பதவி ஆசையை அடிப்படையாக வைத்து கட்சிக்குள் இப்போதும்கூட ஒரு வகையான சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்று வந்த முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலியும், முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும் இம்முறையும் தத்தமக்கு அந்தப் பதவியைக் கேட்டு கட்சியின் தலைமைத்துவத்துடன் மோதத் தொடங்கியதாலேயே இந்தச் சலசலப்பு உருவானது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அதற்கு மறுத்துவிட்டதால், அவர்கள் இருவரும் கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராகக் களமிறங்கினர். இதனால் ஹசன் அலியின் பொது செயலாளர் பதவியும், பஷீரின் தவிசாளர் பதவியும் பறிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் இன்று முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தைக் கவிழ்ப்பதற்காக அதி தீவிரமாகக் களமிறங்கியுள்ளனர்.

ஹசன் அலி நிந்தவூரில் பொதுக் கூட்டமொன்றை நடத்தி ஹக்கீம் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடக்கி வைத்தார். மறுபுறம், பஷீர் முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியாளர்களைப் பயன்படுத்தி தமது முதலமைச்சர் கனவை இதன் ஊடாகவேனும் நிறைவேற்றிக்கொள்ள பஷீர் முயற்சிக்கின்றார்.

கிழக்கில் போரை நிறைவு செய்துவிட்டு 2008 இல் மகிந்த ராஜபக்ச கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்திய போது, கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து களத்தில் குதித்தது.

முஸ்லீம் காங்கிரஸ் அப்போது எதிர் கொண்ட நெருக்கடியான அரசியல் சூழ்நிலை காரணமாக, தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தித் தேர்தலை வெற்றிகொள்வதற்கு ஹக்கீம் தீர்மானித்தார். அந்த அடிப்படையில், பஷீர் மற்றும் ஹசன் அலி ஆகியோர் தத்தமது நாடாளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு தேர்தலில் போட்டியிட்டனர். 2012இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஹக்கீம் போட்டியிடவில்லை. அந்தத் தேர்தலின் முடிவில் முஸ்லிம் காங்கிரஸும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் இணைந்து ஆட்சி அமைத்தன.

முதலமைச்சர் பதவி முதல் இரண்டரை வருடங்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும், அடுத்த இரண்டரை வருடங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸிற்கும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் நஜீப் ஏ மஜித்தை முதலமைச்சராக்குவதற்கு பஷீர் ஏற்பாடு செய்து அதை நிறைவேற்றினார்.

நஜீப் ஏ மஜீத்தின் பதவிக் காலம் நிறைவடைந்து முஸ்லிம் காங்கிரஸ் பதவியேற்கும் காலம் நெருங்கிய போது, தமிழர் ஒருவருக்கே இம்முறை முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று பஷீர் கூறினார். அது தமிழர்கள் மீதான அக்கறை காரணமான நிலைப்பாடு அல்ல. பஷீரின் ஊரைச் சேர்ந்த நஸீர் அஹமட், முதலமைச்சராக நியமிக்கப்பட இருந்ததாலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார் என்று விமர்சிக்கப்பட்டது. நஸீர் அஹமட் முதலமைச்சரானால், தமது அரசியல் செல்வாக்கு நலிவடைந்து விடும் என்று அவர் அஞ்சினார் என்று அவரது எதிராளிகள் கூறினர். நஸீர் அஹமட் முதலமைச்சராவதைத் தடுக்கும் வேலையிலும் அவர் ஈடுபட்ட போதும், அது வெற்றியளிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பஷீர் கட்சியில் ஓரம் கட்டப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படாது புறந்தள்ளி வைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் பஷீர் களமிறங்கினார்.

அவர் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதால், இன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கட்சியின் அதிருப்தியாளர்களை இணைத்துக்கொண்டு முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறார். எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தனது முதலமைச்சர் கனவை நிறைவேற்றவே அவர் திட்டமிட்டுச் செயற்படுகிறார்.


எம்.ரி.ஹசன் அலி

> பஷீரின் கூட்டமைப்பு ஓரளவேனும் வலுவான கூட்டமைப்பாக இருக்க வேண்டுமானால் ரிசாத் பதியுதீனின் கட்சியும் பஷீருடன் இணைய வேண்டும். அப்படி இணைந்து வெற்றி பெற்றாலும் முதலமைச்சர் பதவியை ரிசாத் பதியுதீன், பஷீருக்கு ஒருபோதும் வழங்க விரும்பமாட்டார்.

**பஷீர் சேகுதாவுத்தால் ஹக்கீமை நலிவுபடுத்த இயலுமா?**

கூட்டமைப்பு ஓரளவேனும் வலுவான கூட்டமைப்பாக இருக்க வேண்டுமானால், ரிசாத் பதியுதீனின் கட்சியும் பஷீருடன் இணைய வேண்டும். அப்படி இணைந்து வெற்றிபெற்றாலும், முதலமைச்சர் பதவியை ரிசாத் பதியுதீன், பஷீருக்கு ஒருபோதும் வழங்க விரும்பமாட்டார்.

அடுத்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எப்படியாவது வென்று தனது கட்சி முதலமைச்சர் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையில் றிசாத் இருக்கின்றார்.


தமது ஊரில் தமக்குப் போட்டியாக எவரும் இருந்திராத நிலை இப்போது பஷீருக்கு இல்லை. அவரது ஊரில் செய்யத் அலி சாகிர் மௌலானா மற்றும் கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் ஆகிய இருவரும் பலமடைந்துள்ள நிலையில் பஷீரால் எப்படி அரசியலரங்கில் பிரகாசிக்க முடியும்?

முஸ்லிம் காங்கிரஸில் இருந்து கொண்டே அவரால் பிரகாசிக்க முடியவில்லையென்றால், முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான கூட்டமைப்பில் இருந்து வெற்றிபெறுவது என்பது சவாலான ஒன்றுதான். ஆகவே, பஷீரின் முஸ்லிம் கூட்டமைப்பு என்பது, அவரது இறந்து போன அரசியலுக்கு புத்துயிர் வழங்குவதற்கான சாத்தியக் கூறெதனையும் வெளிப்படையாகக் காணமுடியவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பஷீர் சேகுதாவுதை நீக்கிவிட்டு, அலி சாகிர் மௌலானாவை ஹக்கீம் நிறுத்தியபோது, அந்த மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வீழ்ச்சியைச் சந்திக்கப்போகின்றது எனப் பலர் கூறினர். ஆனால், இதுவரை காலமும் பஷீர் சந்தித்த தேர்தல்களில் பெற்ற வாக்குகளை விடவும், அதிகமான வாக்குகளைப் பெற்று மௌலானா வெற்றி பெற்றார்.

ஹஸன் அலியின் நிலையும் ஏறக்குறைய இதுபோன்றதே. முஸ்லிம் காங்கிரஸிற்குள் இருந்தவரையில், அவர்கள் தமக்கெனத் தனியான வாக்கு வங்கியை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் கிடையாது. இத்தகைய நிலையில் மக்கள் செல்வாக்கைத் திரட்டி முஸ்லிம் காங்கிரஸைப் பிளவுபடுத்த இவர்களால் முடியுமா? என்பது சிக்கலான கேள்விதான்.







# வாசகர் திருமுகம்

## நியமனத்தில் புறக்கணிப்பு நியாயமா?

பல்கலைக்கழக கலைப்பட்டதாரிகளான நாம் வடமாகாணத்தின் ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பித்தபோது குடியியற் கல்வி பாடம் கற்பிக்க பல்கலைக்கழகத்தில் அரசியல் பாடநெறியைக் கற்றுச் சித்தி யெய்தியவர்களே விண்ணப்பிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சமூகவியல் சார்ந்த பாடமே குடியியல் என்பதால் சமூகவியல் பாடத்தைக் கற்ற எம்மை குடியியல் பாடம் கற்பிக்கத் தெரிவு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் நாமும் விண்ணப்பித்திருந்தோம்.

அந்த வகையில் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு கடினமான அந்தப் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகள் பெற்று அதன் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கும் அழைக்கப்பட்டு நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், ஆசிரியர் நியமனத்தில் நாம் நிராகரிக்கப்பட்டமை கடும் வேதனையளித்தது. கிழக்கு மாகாணத்தில் குடியியல் பாடத்துக்கு சமூகவியல் சிறப்புக்கலை, பொதுக்கலை பட்டதாரிகள் கோரப்பட்டு நியமனமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பல வருடங்கள் குடியியல் பாடத்தைக் கற்பித்த அனுபவத்தில் (கல்வி நிலையங்களில்) இந்தப் பாடம் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புக்களில் 80 வீத பாடங்கள், சமூகவியல் சார்ந்தும் தரம் 10,11 வரையான வகுப்புக்களுக்கான பாடங்கள் 50 வீதம் சமூகவியல் சார்ந்தும் உள்ளமையை அவதானிக்க இயலும்.

இந்த நிலையில் பல்வேறு தகுதிகள் திறமைகள் கொண்டிருந்தும் சமூகவியல் பட்டதாரிகள் என்ற விதத்தில் எம்மைப் புறக்கணிப்பது மன உளைச்சலையும் வேதனையையும் தருவதோடு பல்கலைக்கழகத்தில் நாம் கற்ற கல்வியும் வீணாகியுள்ளது.

எனவே ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த எம் போன்ற பட்டதாரிகள் அனைவருக்கும் விரைவில் நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு நியமனத்துக்குப் பொறுப்பானோரையும், எமது கல்விமான்கள், புத்திஜீவிகளையும், மாகாண அரசையும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

க.மயூரன், மாதகல்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராளபணவரவுகிடைக்கும். பணியாளர்கள் சலுகைகிடைக்கப்பெறுவர். பெண்கள், குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**இடபம்:** கடந்த கால நற்செயலுக்கான நன்மைதேடிவரும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதி அடைபடும். பெண்கள் அயலவரின் அன்பைப்பெறுவர்.

**மிதுனம்:** மற்றவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை அனைத்தும் நிறைவேறும். தொழிலில் வருகிற இடையூறுகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி மறையும். லாபம் உயரும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிப்பர்.

**சிங்கம்:** விடாமுயற்சிக்கான பலன் ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம்செய்யலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு, வீட்டுச்செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். வருமானம் பன்மடங்கு உயரும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** யாருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**தனுசு:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு வருவீர்கள். குடும்பத்தில், நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**மகரம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு வளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும்விதத்தில்வருமானம்கிடைக்கும். பணியாளர்கள் சம்பள உயர்வைப் பெற்று மகிழ்வர்.

**கும்பம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும், லாபம் குறையாது. பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெற்று மகிழ்வர். பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**மீனம்:** உறவினர்களால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவைப் பெறுவர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.



# வெற்றிமாறன் தயாரிப்பில் அடுத்த படம் 'லென்ஸ்'

'விசாரணை' வெற்றியைத் தொடர்ந்து இயக்குநர் வெற்றிமாறன் தற்போது தனுஷ் நடித்து வரும் 'வட சென்னை' படத்தை இயக்கி வருகிறார். மிகுந்த எதிர்பார்ப்புடன் உருவாகி வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு வெகுநாள்களாக தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த நிலையில் 'காக்கா முட்டை', 'விசாரணை' ஆகிய படங்களைத் தனுஷுடன் இணைந்து தயாரித்த வெற்றிமாறன், தற்போது 'லென்ஸ்' என்னும் த்ரில்லர் படத்தை அவருடைய சொந்தத் தயாரிப்பில் வெளியிடத் தயாராகி வருகிறார்.

ஜெயபிரகாஷ் ராதாகிருஷ்ணன் என்ற அறிமுக இயக்குநர் இயக்கியுள்ள இந்தப் படம், ஆங்கிலம், தமிழ், மலையாளம் ஆகிய 3 மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது. சில பன்னாட்டு திரைப்பட விழாக்களில் கலந்துகொண்டு விருதுகளையும் பெற்றுள்ளது. இந்தப் படத்தின் திரைக்கதையானது, பாலியல் வன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.





தமிழ் நாட்டுக்கு ஏதாவது செய்வேன்...



வேணாம்... உங்க மகள் செஞ்சதே போதும்...

கடவுளைப் பார்க்க கோயில் குளம்
போக வேண்டியதில்லை...
ஒரு வாரம் உன் வீட்டுச் செலவை நீயே
பொறுப்பேற்று சமாளித்துப்பார்...



உன் "அப்பா" உனக்குக் கடவுளாகத் தெரிவார்...!

ஆசிரியை: உங்க அப்பாக்கு வயசு என்ன?
பையன்: ஆறு வயசாச்சு மிஸ்
ஆசிரியை: ஆறுவயசா? என்னடா உளறுற...




பையன்: நான் பிறந்த பிறகுதானே அவர் அப்பா ஆனாரு...?

**நவீணா**
அப்பா எனகூறியே அம்மாவால் மிரட்டப்பட்ட தலைமுறை இன்று தன் குழந்தைகளின் செல்ல மிரட்டல்களுக்கும் பணிந்து கொண்டிருக்கிறது.
1 · 14 · 14

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப்பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 5 | 9 | 4 | 1 | 3 | 6 | 8 |
| 4 | 9 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 |
| 8 | 6 | 1 | 3 | 5 | 7 | 4 | 9 | 2 |
| 7 | 4 | 9 | 2 | 8 | 3 | 6 | 5 | 1 |
| 5 | 8 | 6 | 7 | 1 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 1 | 2 | 4 | 6 | 5 | 9 | 8 | 7 |
| 9 | 5 | 4 | 1 | 7 | 2 | 8 | 3 | 6 |
| 1 | 3 | 7 | 8 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 6 | 2 | 8 | 5 | 3 | 4 | 7 | 1 | 9 |



# கை விரல்களுக்கு அழகு தரும் மசாஜ்

பொதுவாக தலை, கழுத்து போன்ற பகுதிகளில் தான் மசாஜ் செய்வோம். ஆனால் கை மற்றும் விரல்களுக்கு மசாஜ் செய்வதால் உடல் இதமாக இருக்கும் என்பது தெரிய வந்துள்ளது.

கை விரல்களுக்கு அழகு தரும் மசாஜ்

- இதற்காக மசாஜ் நிலையத்துக்குப் போய் தான் மசாஜ் செய்ய வேண்டும் என்பதில்லை. இந்த மசாஜை வீட்டிலேயே செய்யலாம். வீட்டில் ஓய்வாக இருக்கும் போது இந்த மசாஜை செய்யலாம்.
- முதலில் சிறிது எண்ணெய்யையோ அல்லது கைகளுக்கு தடவும் லோஷனையோ கைகளில் தடவவும். பின் மெதுவாக அந்த எண்ணெய் அல்லது லோஷன் தோலில் ஊடுருவும் வரை நன்கு மசாஜ் செய்ய வேண்டும்.
- அதன் பிறகு விற்றமின் `ஈ' உள்ள எண்ணெய்யை எடுத்து கை, விரல்களில் தடவி மசாஜ் செய்யவும். முக்கியமாக மணிக்கட்டு, உள்ளங்கை ஆகிய இடங்களில் நன்கு மசாஜ் செய்யவும். மசாஜ் செய்யும் போது ஒவ்வொரு விரல்களுக்கிடையேயும் பெருவிரலை மெதுவாக விட்டுவிட்டுச் செய்ய வேண்டும்.
- இப்படி அடிக்கடி செய்வதால் விரல்களில் இருக்கும் நரம்புகள், மணிக்கட்டுகளில் இணைவதால் மணிக்கட்டில் மசாஜ் செய்வது புத்துணர்ச்சியைத் தரும்.
- மேலும் கை விரல்கள் அழகாக இருக்க வேண்டும் என்றால் அவற்றுக்கு நகப் பூச்சு அடித்தால் மட்டும் போதாது. இந்த மாதிரியான மசாஜை செய்து முறையாகப் பராமரித்து வந்தால் தான் நகங்கள் அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்




# வரலாற்றில் இன்றைய தினம்

கி.மு. 45-தனது கடைசி வெற்றிப்போரில் யூலியஸ் சீஸர், டைட்டஸின் பொம்பிலன் படைகளைத் தோற்கடித்தார்.

1861-இத்தாலி இராச்சியம் உருவாக்கப்பட்டமை அறிவிக்கப்பட்டது.

1891-எஸ்.எஸ் உத்தோப்பியா கப்பல் ஏச்.எம்.எஸ். அன்சன் கப்பலுடன் கிப்றால்ற்றர் குடாவில் மோதி அமிழ்ந்ததில் அதிலிருந்த 880 பயணிகளில் 562 பேர் உயிரிழந்தனர்.

1942- கிழக்கு போலந்திலுள்ள பெல்ஷெக் சாவு முகாமில் நச்சு வாயு ஊட்டப்பட்டு முதலாவது யூதப் படுகொலை மேற்கொள்ளப்பட்டது.

1948-வட அத்திலாந்திக் ஒப்பந்தமான (NATO) நேட்டோவின் முன்னோடியாக பிரான்ஸும் ஐக்கியராச்சியமும் புரூஸெல்ஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1950-கலிபோர்னியம் எனும் 98 ஆவது மூலகம் உருவாக்கப்பட்டதாக கலிபோர்னியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

1957 -பிலிப்பைன்சில் செபு விமான விபத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றமோன் மக்ஸேசேயும் வேறும் 24 பேரும் உயிரிழந்தனர்.

1959 -திபெத்திலிருந்து இந்தியாவுக்கு 14ஆவது தலாய்லாமா டென்சின் கியற்சோ தப்பியோடினார்.

1963- பாலியில் அகுங் எரிமலை வெடித்ததில் 1100 பேர் உயிரிழந்தனர்.

1966-டி.எஸ்.வி அல்வின் நீர் மூழ்கிக் கப்பலால் ஸ்பெயினுக்கு அப்பால் மெடிரே ஹெனியன் கடலில் அமெரிக்காவால் தவறவிடப்பட்ட ஹைதரசன் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

1968- நரம்புகளைத் தாக்கும் நச்சு வாயுப் பரிசோதனையின் பெறுபேறாக உட்டா ஸ்கல் பள்ளத்தாக்கில் 6000 மந்தைகள் இறந்து காணப்பட்டன.

1969-இஸ்ரேலின் முதல் பெண் பிரதமரானார் கோல்டாமேயர்.

1970-மைலாய் படுகொலை; அமெரிக்க இராணுத்தினரால் பதினான்கு அதிகாரிகள் சம்பவம் பற்றிய விவரங்களை அமுக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

1988 - ராஜீவ் காமினி பேச்சின் விளைவு கிழக்குச் சிங்கள மக்களுக்கு சிறிலங்கா ராணுவம் பாதுகாப்பு வழங்கும்.

1988 -வெனிசுவேலிய எல்லைக்கு அருகில் மலைப்பகுதியில் கொலம்பிய விமான சேவை போயிங் 727 விமானமொன்று விபத்துக்குள்ளாகியதில் 143 பேர் உயிரிழந்தனர்.

1992 -புவனேஸரில் இஸ்ரேல் தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத்தாக்குதலில் 29 பேர் உயிரிழந்ததுடன் 242 பேர் காயமடைந்தனர்.

1992 -இனப்பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வரும் கருத்துக் கணிப்பில் தென் ஆபிரிக்காவில் 68.7 வீதம் ஆதரவாகவும் 31.2 வீதத்தினர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

1995 -சந்திரிகாவுக்குத் தலைவர் பிரபா கடிதம். அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய அரசுக்குக் காலக்கெடு.

1995-புலிகளின் உணர்வலைகள் தெளிவானவையென மேர்ஜ் தலைவர் சாள்ஸ் அபேசேகரா தெரிவிப்பு.

2003 - ஈராக் மீதான 2003 ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரிட்டன் அமைச்சரவையிலிருந்து வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரச் செயலாளர் றொபின் குக் பதவியை இராஜினாமாச் செய்தார்.

## நாளை

**பங்குனி-05**

சனிக்கிழமை -18.03.2017
திதி: ஷஷ்டி பி.இ. 05.06
நட்சத்திரம்: அனுசம் பி.இ.05.28
சுபநேரம்:03.19-04.49 வரை
ராகுகாலம்:09.19-10.49 வரை

# 2017 மார்ச் மாதப் பலன்கள்





## கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்
சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்

கும்ப ராசி நேயர்களே உண்மை பேசுவதையே குறிக்கோளாகக் கொண்டு எல்லா இடங்களிலும் மதிப்புடன் வாழும் உங்களுக்கு ராசியதிபதி சனி லாப ஸ்தானத்தில் வலுவாக சஞ்சரிப்பதும் 2இல் சுக்கிரன், 2ஆம் திகதி முதல் 3இல் செவ்வாய் சஞ்சரிப்பதும் நல்ல அமைப்பு என்பதால் உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத இனிய நிகழ்ச்சிகள் நடக்ககூடிய மாதமாக இம்மாதம் இருக்கும். 1, 7இல் கேது ராகு சஞ்சரிக்க இருப்பதால் கணவன், மனைவியிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படக்கூடும். காதலர்களுக்கு பிரிவு ஏற்படக்கூடிய மாதம் இது. அனுசரித்துப் போகவும். உற்றார், உறவினர்களும் சில நேரங்களில் பகைமை பாராட்டுவார்கள். சுபகாரிய முயற்சிகளில் தடைகளுக்கு பின் அனுகூலப்பலன் ஏற்படும். எதிர்பாராத திடீர் பண வரவுகளால் பொருளாதார நிலை உயர்வடைந்து கடன்களும் குறையும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் சமுதாயத்தில் செல்வாக்கு உயரும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகளால் லாபமும் அனுகூலமும் உண்டாகும். தொழில் வியாபாரம், உத்தியோகம் செய்பவர்களுக்கு எல்லா வகைகளிலும் உயர்வுகள் உண்டாகும்.

பரிகாரம் சிவ வழிபாடு, அம்மன் வழிபாடு செய்வது நல்லது.





## இது புதுசு

ஆண்களுக்கான சிலிம் பிற் சேட்கள் பங்களாதேஷ் நாட்டு கைத்தறியில் தயாரிக்கப்பட்ட அரைக் கை சேட்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்** (ஆனைப்பந்தி)
**வருடாந்த பொதுக்கூட்டம்**

காலம் - 17.03.2017 வெள்ளிக்கிழமை
நேரம் - பி.ப. 1.30 மணி

*தலைமையுரை - சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்
*செயலாளர் அறிக்கை - 2016 ஆம் ஆண்டிற்கான செயலாளர்
*பொருளாளர் அறிக்கை - 2.30 மணி

அனைத்து அந்தண குருமார்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்

செயலாளர்
பிரம்மஸ்ரீ சோ. கேதீஸ்வரசர்மா

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தின் கல்வியல் முதுமாணி கற்கை நெறி அணி (XII "A") இன் மாணவரும் எமது ஆசிரிய நண்பருமான **திரு. இராமன் நீக்சன்லெனின்** அவர்களின் அன்புத்தந்தையார். **பூகன் இராமன்** அவர்கள் 16.03.2017 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
**கல்வியியல் முதுமாணி கற்கை நெறி அணி (XII)**

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகராக கடமையாற்றும் **வேலுப்பிள்ளை ரதீசன்** அவர்களின் அன்புத்தாயார் **இராசம்மா வேலுப்பிள்ளை** அவர்கள் (15.03.2017) புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொதுச்சுகாதார பரிசோதகர்கள்,**
**பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம், யாழ்.மாவட்டம்.**

## கைதடி வீட்டுத்திட்டச் சங்கம்

**பதிவு இலக்கம் :- 2434 13-04-74**
**238, அரசடி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**
**முக்கிய அறிவித்தல்**

சங்கத்தின் பெயரைச் சொல்லி, அப்பாவி மக்களிடம் யாரோ காசு வசூலிப்பதாக அறிகின்றோம். சங்கம் ஆள் அனுப்பி காசு வாங்குவதில்லை. யாராவது காசு கேட்டு வந்தால் காசு கொடுத்து ஏமாற வேண்டாம்.

சு.பிரகலாதன்
(மண்கும்பான் பிரபு)
செயலாளர்.
0713684639

புலவர்
செ.து தெட்சணாமூர்த்தி
தலைவர்.
0713352215




## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்




வெள்ளவத்தையில் பொன்நாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் **18.03.2017 இல் இருந்து 21.03.2017 வரை** ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.

யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ **19.03.2017 ஞாயிறுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.**

**பூசை நேரம்:** முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
**குறிப்பு:** கலாசார உடையுடன் வருகை தரவும்.
**தொடர்பு:** 021 221 9127, 077 801 2226

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகராக கடமையாற்றும் **வேலுப்பிள்ளை ரதீசன்** அவர்களின் அன்புத்தாயார் **இராசம்மா வேலுப்பிள்ளை** அவர்கள் (15.03.2017) புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சுகாதார வைத்திய அதிகாரியும், உத்தியோகத்தரும், ஊழியர்களும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உடுவில்.**

## மரண அறிவித்தல்கள்

### புஸ்பமலர் (பேபி) பரமலிங்கம்




கரந்தனை(நீர்வேலி) பிறப்பிடமாகவும் கனடாவை (ரொரன்றோ) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமலர் (பேபி) பரமலிங்கம் 15.03.2017 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலராசா செல்வரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பரமலிங்கத்தின் (தம்பித்துரை) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம் பாக்கியம் தம்பதியரின் மருமகளும் புவனேஸ்வரராசா, புஸ்பதேவி ,கலாவதி, அருளானந்தம் (கனடா), தீராவதி மற்றும் மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் துளசி (சுவிஸ்) ஸ்ரீராம் (கனடா), ஸ்ரீபதி (கனடா), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசுதன் (சுவிஸ்), இந்துஜா (கனடா), ஜெகதீபா (கனடா) ,பிரதீப் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வானதி (சுவிஸ்), இலக்கியன் (சுவிஸ்), கவிகா (சுவிஸ்), சுஜீன் (கனடா), சுஜிந்தன் (கனடா), சுஜீவன் (கனடா), அனிஸ் (கனடா), அவிலாஸ் (கனடா) ,கவின் (கனடா), நிலான் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு**
**புவனேஸ்வரராசா** +94776162306
**அருளானந்தம் (கனடா)** + 19052099424
**சிவசுதன் (சுவிஸ்)** +41566111229
**ஸ்ரீராம் (கனடா)** +14166169181
**ஸ்ரீ பதி (கனடா)** +14163991285
**பிரதிப் (கனடா)** +14162940924

### கிருஸ்ணர் தேவராசா (தேவர்ஐயா)



மறவன் புலோ, மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஸ்ணர் தேவராசா (தேவர் ஐயா) நேற்று (16.03.2017) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர்-இராசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான குண ரத்தினம் (கதிரமலை ஐயா), கண்மணி ஆகியோரின் சகோதரரும் பவளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அற்புதகலா மற்றும் பாஸ்கரன் (சிறி), தரன், மீனலோஜினி (கீதா), பேபிசயிலா (சயிலா), அருணோதயன் (தம்பி-இத்தாலி), ஜீவதயாபரன் (ஜீவன்), யாழினி (இத்தாலி), ஸ்ரீபவன் (பவளஐயா) ஆகியோரின் தந்தையும் திலகேஸ்வரன், ஆனந்தி, லிங்கேஸ்வரன், சிவலிங்கம், குலேஸ்வரி, விமலா, விஜிதா, குலேஸ்வரன், சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

(CS/00212)

### மைத்திரிக்காக...

பாதுகாப்புக்காக சில மணி நேரங்கள் தற்காலிகமாகப் பொருத்தப்பட்ட இடிதாங்கிக்காக 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி நல்லிணக்க புரத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். மழைக் காலம் என் பதாலும் கடற்கரையை அண்மித்து இருந்தமையினாலும், தற்காலிக இடிதாங்கி பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டது.

நிகழ்வுக்கு முதல் நாள் மாலை தற்காலிக இடிதாங்கியைப் பொருத்தி, நிகழ்வு முடிந்த பின்னர் அதனைக் கழற்றிச் சென்றுள்ளனர். இதற்காக மாத்திரம் 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

(கு-5)

## வாடகைக்கு (பெண்களுக்கு)

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் ஆசிரியை / மாணவிகளுக்கு Rooms வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 335 0910

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் குளிரூட்டப்பட்ட வசதியுடன் (A/C) ஐந்து அறைகள், சமையலறை வசதியுடைய மேல்மாடி வீடு, நாள், மாத அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

(A/C Rooms For Rent)
தொடர்பு: 077 2017 824

## பெயர்மாற்றம்

காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த **தவராஜா வசீஸ்கரன்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **"தவராஜா வசீகரன்"** என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன். இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**தவராஜா வசீகரன்**

## வீடு வளவு விற்பனைக்கு

**பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் மகேஸ்வரியும் இராஜேஸ்வரன் மகள் இன்பகௌரிக்கும் சொந்தமான நில.பரப்பு 3 குளி 12 விற்பனைக்குண்டு. காணிப்பெயர் "லேச்சியன்வளவு"**

**தொடர்பு:**
077 257 7505
0044 7854223099

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி (தேவி) சொர்ணலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சொர்ணலிங்கம் நேற்று (16.03.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சௌந்தரம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சொர்ணலிங்கத்தின் மனைவியும் லக்ஸ்னா, ஆரண்யா, திவ்யா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயும் யசிந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2017) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்**
077 496 1233

**ஆனைக்கோட்டை வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

District Secretariat, Jaffna.

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளரால் **மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்-** 2017 எனும் செயற்பாட்டிற்காக தகமையுடையோரிடமிருந்து விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

**விலைக் கேள்வி அறிவித்தல் - நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்**

1.விலைக் கேள்வியானது தேசியவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

2.கனரகவாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் மணித்தியாலத்திற்கு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையில் கொடுப்பனவு அந்நிறுவனத்தின் பெயரில் வழங்கப்படும் என்பதுடன் காத்திருத்தல் கட்டணம் எதுவும் மேலதிகமாக வழங்கப்படமாட்டாது.

3.வாகனங்களுக்கான எரிபொருள், சாரதிகளுக்கான கொடுப்பனவுகள், பழுதுபார்த்தல் செலவீனங்கள் வேலைத்தளத்திற்கு வாகனங்களினை எடுத்துச்செல்வதற்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

4.வாகனங்களின் சட்டரீதியான உரிமையுடையவர்கள் மட்டும் கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் வாகனத்தின் பதிவுப்புத்தகத்தின் பிரதி மற்றும் வியாபார பதிவுச்சான்றிதழ் பிரதி என்பன கேள்வி ஆவணங்களுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5.அத்தியாவசிய தேவையின் பொருட்டு வாகனங்கள் உடனடியாக சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதால் கேள்வி ஆவணங்கள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து விலைக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் அனைத்தும் இயங்கு நிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் திணைக்கள தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழுவினர் பார்வையிடவதற்கு காண்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

6.சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கனரகவாகனத்தினை குறித்த வேலை பூர்த்தியடைய முன்னர் சேவை நிலையத்திலிருந்து மீளப் பெற்றுக் கொள்ள முடியாது.

7.சேவையில் ஈடுபடும் வாகனங்கள் பழுதடையும் சந்தர்ப்பத்தில் உடனடியாக அதே தரத்திலுள்ள மாற்று வாகனத்தினை பயன்படுத்தி குறித்த வேலைகள் தடையின்றி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

8.குறித்த வேலைகளினை தாமதமின்றி மேற்கொள்வது தங்கள் கடமை என்பதுடன் ஏதாவது காரணங்களினை காட்டி வேலைகளினை தாமதப்படுத்த முடியாது.

9.குறித்த வேலைகளினை எம்மால் குறிப்பிடப்படும் காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்படாதவிடத்து அல்லது குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு கட்டுப்படாதவிடத்து தங்களது சேவை முன்னறிவித்தலின்றி முடிவுறுத்தப்படும்.

10.பூர்த்தி செய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **"தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு **2017.03.31 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.** நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.

11.காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் **"பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் - 2017"** என்ற வாசகத்தினை குறிப்பிடுதல் வேண்டும்.

12.விலைக்கேள்விகள் யாவும் மேல்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2017.03.31 ந் திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விலைக்கேள்வி மனுக்களை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவரினால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

13.ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றையும் மீளளிக்கப்படாத தொகையான 1000 ரூபாவை கட்டணமாக மாவட்ட செயலக வங்கிக்கணக்கு இலக்கம் 7041946 செலுத்திய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து 2017.03.20 ந் திகதி முதல் 2017.03.30 ஆந் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) - தொலைபேசி இலக்கம் 021 222 4029 அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

14.கேள்வி கோரப்பட்ட வாகனங்களின் வகை, இயங்கு நிலை தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 28.03.2017 அன்று மு.ப 9.30 மணிக்கு நடைபெறும்.

15.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித்தீர்மானத்திற்கமைவானதாகும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மீளளிக்ககூடிய வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|
| JF/RES/ Tend. Land/ III/5/ 2017 | மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் 2017 | 25 000 00 | 1 000 00 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளர்,
மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம

சு.முரளிதரன்
மேலதிக அரசாங்க அதிபர் (காணி),
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
• G.C.E. A/L or Equivalent
• Certificate in related field

» Duration: 2 Years

* All HND's are equal to NVQ Level 06
* All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes

BIRMINGHAM CITY University

BSc (Hons) Quantity Surveying

RICS Accredited

» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC

Week End Part Time Classes

» Duration: 1 Year

Progression Route to RICS: BSc + APC → MRICS

DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

## மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கருணலிங்கம்

(ஓய்வு பெற்ற பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கொழும்பு மற்றும் மன்னார்)



தோற்றம் 1944.05.29 — மறைவு 2017.03.15

காரைநகர் இலந்தச்சாலையைப் பிறப்பிடமாகவும், வலந்தலை, சயம்பு வீதியை வசிப்பிடமாகவும், வைத்தியா றோட், தெகிவளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கருணலிங்கம் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கொழும்பு மற்றும் மன்னார்) (15.03.2017) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வேலுப்பிள்ளை (ஆங்கில ஆசிரியர்) - இராசம்மா தம்பதியரின் அருந்தவப்புதல்வனும் காலஞ் சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் ஆருயிர்க்கணவரும் காலஞ்சென்ற வர்களான தருமலிங்கம், பாறுவதி, அமிர்தலிங்கம், தேவமங்கை மற்றும் சிவபாக்கியம், அன்னலட்சுமி, திலகவதி, சிவமணி, சபாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான உமாதேவி, தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற மகேஸ்வரனின் சகலனும் சுகந்தி (அமெரிக்கா), சிதம்பரரேஸ்வரன் (சிரேஸ்ர விரிவுரையாளர் கிழக்குப்பல்கலைக்கழகம், மட்டக்களப்பு), உருத்திரா (ஆஸ்திரேலியா), சுதாகர் (லண்டன்), சிவானுஜன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சயம்பு வீதி,**
**வலந்தலை, காரைநகர்.**

**தகவல்:**
**க.பரமேஸ்வரி (மனைவி)**

## கலப்பு...

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு அரசமைப்பில் இடமில்லை. உள்ளக விசாரணையே நடத்தப்படும். அதை எமக்கே உரிய வழியில் முன்னெடுப்பதற்கு 2 வருடங்கள் கால அவகாசம் கோரப்பட்டது. அது கிடைத்துள்ளது. மக்களைத் தவறாக வழிநடத்துவதற்குக் குழுவொன்று முயற்சிக்கின்றது.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இரத்தத்திலும் இனத்தைத் தேடும் (சிங்க லே) காலம் உருவாக்கப்பட்டது. இந்த நிலமை மாற வேண்டும். 70 ஆவது சுதந்திரத்தை அனைவரும் இலங்கையர்களாகக் கொண்டாட வேண்டும். எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு நல்லதொரு இலங்கையைக் கையளிக்க வேண்டும். அடிப்படைவாத அரசியலைத் தோற்கடித்து புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்புவோம் - என்றார். (த-5)

## பன்னாட்டு...

*யாழ்ப்பாணம்*

யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இராணுவத்திடம் காணிகளைப் பறிகொடுத்த மக்கள், காணி விடுவிப்புக்குப் போராடும் மக்கள் உள்ளிட்ட பலரும் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக நேற்று முற்பகல் ஒன்றுகூடினர். அங்கிருந்து பேரணியாக கோவில் வீதியில் உள்ள ஐ.நா. கிளை அலுவலகத்துக்குச் சென்று மனுவைக் கையளித்தனர்.

*முல்லைத்தீவு*

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இராணுவத்திடம் காணிகளைப் பறிகொடுத்த மக்கள், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கு அருகில் நேற்றுமுற்பகல் 9 மணியளவில் ஒன்று கூடினர். அங்கிருந்து மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் தகரக் கொட்டகைகள் அமைத்து தொடர் அமைதி வழிப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் இடத்துக்குப் பேரணியாகச் சென்றனர். அங்கு ஐ.நா. வுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள மனு வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் பேரணியாகச் சென்றவர்களில் 10 பேர் முல்லைத்தீவில் இருந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்துக்குச் சென்று தங்கள் மனுவைக் கையளித்தனர்.

*கிளிநொச்சி*

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் பொதுமக்கள் ஒன்றுகூடி கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். அத்தோடு கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்துக்குச் சென்று அங்கு தங்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்த மக்கள் அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பதில் சொல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே நீக்கு, இலங்கையில் நிலைமாறு கால நீதிக்கான அமைச்சு ஒன்றை உருவாக்கு போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

*வவுனியா*

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஒன்றிணைந்த பாதிக்கப்பட்ட பெண்கள் குழுவினரால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் நிலைமாறு கால நீதி முன்னெடுப்புக்களில் இணைப்பங்காளியாவதற்கு இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள், பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிப் பொறிமுறையே எமது கோரிக்கை என்று வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர். ஒரு மணி நேரமாக தமது போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மேற்கொள்ளும் போராட்ட இடத்துக்குச் சென்று தமது ஆதரவையும் வழங்கினர்.

*மன்னார்*

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் ஒன்று கூடிய மக்கள் காணாமற்போன தமது உறவினர்களின் ஒளிப்படங்களை ஏந்தியவாறும், சிலர் காணிகளையும், மக்களின் நிலங்களையும், சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரியும் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நில ஆக்கிரமிப்பினால் பாதிப்புக்கு உள்ளானவர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசையிடம் மனு கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மனுவை ஐ.நா மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வு தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில் உரிய தரப்பினரிடம் கையளிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், “ஆயர் சார்பாக நான் உங்களின் கோரிக்கை அடங்கிய மனுவைப் பெற்றுக்கொண்டுள்ளேன். தற்போது இடம்பெற்று வருகின்ற ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் குறித்த மனுவை உடனடியாக அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றோம். உங்களுடைய நீதியான போராட்டம் இது. இங்குள்ளவர்களைக் காண்கின்றபோது மிகவும் வேதனையை ஏற்படுத்துகின்றது. எங்களுடைய உறவுகள், கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டும் உள்ளனர். எனவே பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்என்றார்.

*கிழக்கு மாகாணம்*

கிழக்கு மாகாணத்திலும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

காணாமல்பேனவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் நடைபெற்றது. திருகோணமலை சிவன் கோயிலடி மற்றும் அம்பாறை திருக்கோயில் பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கபட்டன.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிப்பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பணிக்குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும், நிலைமாறு கால நீதிக்கான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-ய-4, 7, 35, 56, 101, 40, 46, 47)

## பலிப்...

வேண்டும். அதேநேரத்தில் மிருகங்களைக் கூட்டாக எந்தவொரு இடத்திலும் பலியிடுவதற்கு அனுமதி வழங்கப்படாது.

ஆலயங்களில் பலியிடலைத் தடுக்கக் கேட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி மா. இளஞ்செழியன் தனது கட்டளையில் இதனை இறுக்கமாகத் தெரிவித்தார்.

இந்த வழக்கில் இடைமனுதாரராக இணைந்து கொண்ட கவுணாவத்தை நரசிம்ம பைரவர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார். அவரது சட்டத்தரணி நீதிமன்றில் இருக்கவில்லை. அதனால், இடைபுகு மனதாரரின் ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்வதற்கு மன்று கால அவகாசம் வழங்கியது.

தனது கட்டளையில் நீதிபதி தெரிவித்ததாவது: 2016 ஒகஸ்ட் 10ஆம் திகதி மிருக பலியிடலுக்கு எதிராகப்பட்ட தடையுத்தரவு இந்த வழக்கு முடிவடையும் வரையும் நடைமுறையில் இருக்கும் என்பதைத் திறந்த நீதிமன்றில் மன்று அறிவுறுத்துகின்றது. கோவில் வளாகம், கோவில் சுற்றாடல்கள் பொது இடங்கள், அரச காணிகள் மற்றும் ஏனையவர்களின் காணிகளில் வேள்வி மிருகபலி நடைபெறக்கூடாது.

பாரம்பரியங்களின்படி வேள்விக்கு நேர்த்தி வைக்கப்பட்ட ஆடு, கோழி மற்றும் வேறு மிருகங்களை ஆலயத்திற்கு எடுத்து வந்து பூசை செய்யலாம். ஆனால், ஆலயத்தில் ஒரு துளி குருதிகூடச் சிந்தக்கூடாது. அப்படி நடந்தால் கோவில் பூட்டப்படும். பூசை செய்த குருக்கள் அல்லது பூசாரி மற்றும் கோவில் தர்மகர்த்தா சபைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தில் கைது செய்யப்படுவர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று இறைச்சிக் கடைச் சட்டத்தின் கீழ் அனுமதி பெறாது மிருகங்களை இறைச்சிக்கு வெட்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிவான் மன்றில் அவர்கள் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

வேள்வி பூசை முடிவடைந்த பின்னர் நேர்த்திக்குரிய ஆடு, கோழி மற்றும் மிருகங்களை உரியவர்கள் தங்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

சமய நம்பிக்கை என்பது ஒவ்வொருவருக்கும் அவசியமானது. 300ஆண்டு கால சமய நம்பிக்கை எனக்கூறி தற்சமயம் உள்ள சட்டத்தை மீற முடியாது. சமய நம்பிக்கை என்ற அடிப்படையில் வேள்வி, பூசையைக் கோவிலில் நடத்துவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு. ஆனால் மிருகபலியிடுவதற்கு அனுமதியில்லை.

எவரும் கூட்டாக எந்தவொரு இடத்திலும் பலியிடுவதற்கு அனுமதியில்லை. ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் எந்தவொரு இடத்திலும் பலியிடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. கோவில் வளாகத்திலோ, கோவிலுக்கு வெளியிலோ கூட்டாக மிருக பலி வேள்வியில் எவராவது ஈடுபட்டால் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். இவ்வாறு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ரி)

## அரச...

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன-ஆகியோர் கடந்த 7 வருடங்களில் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட பயணங்களுக்காக மட்டும் 95 இலட்சத்து 58 ஆயிரத்து 622 ரூபாவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் செலவு செய்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் பங்கேற்ற 4 நிகழ்வுகளுக்காக 67 லட்சத்து 91 ஆயிரத்து 692 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. முன்னைய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பங்கேற்ற 3 நிகழ்வுகளுக்காக 28 லட்சத்து 66 ஆயிரத்து 622 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் வழங்கியுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரையில், யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட அரச தலைவர்களுக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் செலவு செய்யப்பட்ட தொகையை வழங்குமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்தது. இதற்கு வழங்கப்பட்டுள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பங்கேற்றிருந்தார். அதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தித் திட்டங்களின் நிர்வாகச் செலவின ஒதுக்கீட்டிலிருந்து 5 லட்சத்து 87 ஆயிரத்து 161 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

ரில்கோ விடுதியில் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற சிறப்பு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பங்கேற்றிருந்தார். அதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 66 ஆயிரம் ரூபா நேரடியாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 9 லட்சத்து 94 ஆயிரத்து 395 ரூபா பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தித் திட்டங்களின் நிர்வாகச் செலவின ஒதுக்கீட்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட சிறப்பு அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். இதற்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்டங்களின் சேமிப்பு நிதியில் 12 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் தின நிகழ்வில் பங்கேற்றதற்கு 50 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

போதையிலிருந்து விடுதலையான நாடு மாவட்ட நிகழ்வு 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதற்கு 8 லட்சத்து 98 ஆயிரத்து 262 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அரச தலைவர் செயலகத்தினால் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி தெல்லிப்பழை நடேஸ்வராக் கல்லூரி கையளிப்பு நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். இந்த நிகழ்வுக்காக ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 115 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மங்கள வாத்தியத்துக்கு 20 ஆயிரம் ரூபாவும், மாலைகளுக்கு 4 ஆயிரம் ரூபாவும், மொழி பெயர்ப்புக்கு ஆயிரத்து 300 ரூபாவும், சிற்றுண்டி மற்றும் இதர செலவுக்கு 87 ஆயிரத்து 815 ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கபுரத்தில் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வுக்காக 7 லட்சத்து 80 ஆயிரத்து 315 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செலவீனங்கள் மாத்திரமே இவை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## மனித உரிமைச்...

இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் றெக்ஸ் ரில்லர்சன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக றெக்ஸ் ரில்லர்சன் எட்டு பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்போது நடந்து வரும் ஐ.நா மனித உரிமைகள் சபை அமர்வுகளில் அமெரிக்கா தொடர்ந்து பங்கேற்கும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள றெக்ஸ் ரில்லர்சன், மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான காலவரம்பு எதையும் குறிப்பிடவில்லை.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஐ.நா மனித உரிமைகள் சபையின் தற்போதைய அமர்வில், சிரியா தொடர்பான சுதந்திர விசாரணை ஆணையத்தை புதுப்பித்தல், ஈரான், வடகொரியா, மியான்மார், சித்திரவதை மற்றும் கருத்து வெளிப்பாடு குறித்த சிறப்பு விசாரணையாளர்களுக்கான ஆணை ஆகியன குறித்து முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

தென்சூடானில் மனித உரிமை ஆணையத்தைப் புதுப்பித்தல், இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதை ஊக்குவிப்பதற்கான ஐ.நா உதவிகள் தொடர்வதை உறுதிப்படுத்தவேண்டும். இஸ்ரேலுக்கு எதிரான சபையின் பக்கச்சார்பான செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு வெளியிடுகிறேன்-என்றுள்ளது. (த-4)

## சங்கானை...

உறுப்பினர் ஈ.சரவணபவனால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, மீள்குடியேற்ற அமைச்சு மேற்படி நிதியை வழங்கியுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை கடைத் தொகுதிக்கும் சந்தைக்குமான திட்டங்கள் மக்களால் கடந்த பல ஆண்டுகளாக முன்வைக்கப்பட்டு வந்தன. உரிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாமையால் திட்டம் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்பட்டு வந்தது. பிரதேச மக்கள், வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகளின் தொடர் கோரிக்கைக்கு அமைவாக, திட்டத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கான கோரிக்கையை கடந்த ஆண்டு முன்வைத்திருந்தார். நிதி ஒதுக்கீட்டுக்காக தொடர் அழுத்தங்களையும் கொழும்பு அரசிடம் அவர் பிரயோகித்திருந்தார்.

இந்த நிலையில், மீள்குடியேற்ற அமைச்சு, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக நவீன சந்தைக் கட்டடத் தொகுதி நிர்மாணிப்புக்கு 80 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

கட்டடத்தொகுதி அமைப்பதற்குரிய திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டைத் தயாரித்து தொடர்புடைய திணைக்களங்களின் அனுமதியுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு, பிரதேச சபைச் செயலருக்கு, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார். (வ-5,50)



# பாடசாலை

கல்வியெனும் ஒளி தருவேன்
கலைகள் பல நான் வளர்ப்பேன்
கண் திறந்து உயர்வடைய
காலமெல்லாம் நான் உழைப்பேன்

ஒழுக்கமெனும் பயிர் வளர்ப்பேன்
ஒற்றுமையை ஊக்கிடுவேன்
ஒன்றே நமது குலமெனவே
ஓங்குகின்ற நிலை வளர்ப்பேன்

திறமைகள் பல வளர்த்திடுவேன்
திருந்தி வாழ வழி சமைப்பேன்
தீமையிலா உலகமதை
தோற்றுவதற்காய் முயன்றிடுவேன்

தொழில் நுட்பம் புகட்டிடுவேன்
தொழில் வாய்ப்பைப் பெருக்கிடுவேன்
தொல்லையிலா வாழ்க்கையினைத்
தந்திடவே நான் வாழுகின்றேன்

விழுமியங்கள் புகட்டிடுவேன்
விளையாட வைத்திடுவேன்
வெற்றி தோல்வி சமமென்றே
வீரருக்கு உணர்த்திடுவேன்

இருளகற்றி ஒளி தருவேன்
இலவசமாய் நூல் தருவேன்
இல்லாதார் கல்வி பெற
இனிதாக உணவளிப்பேன்


நாவன்மை வளர்த்திடுவேன்
நடிப்பாற்றல் உயர்த்திடுவேன்
நலமான இலங்கையினை
நன்நாடாய் ஆக்கிடுவேன்

என்னை நன்கு பாவிப்பீர்
ஏற்றம் பெறவே வாசிப்பீர்
எங்கள் சொத்து என நினைத்து
எந்தன் தூய்மை பேணிடுவீர்

ஆய்வு கூடம் எனக்குண்டு
ஆளணி வளமும் மிகவுண்டு
ஆய்வு பலதை மேற்கொண்டு
அறிவிலோங்கி சிறந்திடுவீர்

# நூல் நிலையங்களின் பயன்கள்

- நூல் நிலையங்கள் அறிவுப் பொக்கிஷங்கள்
- இங்கு மொழியியல், மெய்யியல், அறிவியல், விஞ்ஞானம், கணிதவியல் தொழில் நுட்பவியல் மருத்துவம், ஆன்மிகம் இலக்கியம் சார்ந்த இன்னோரன்ன நூல்களைக் காணலாம்.
- இந்த நூல்களை வாசிப்பதால் உலகம் பற்றிய பல விடயங்களை அறிந்து எமது அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளலாம்.
- "கற்றது கை மண்ணளவு கல்லாதது. கடல் அளவு" என்ற முதுமொழிக்கிணங்க பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்றதுக்கு மேலாக இந்த பரந்த உலகம் பற்றிய பல தரப்பட்ட விடயங்களை நூல்களை வாசிப்பதன் மூலம் அறியலாம்.
- இன்று பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நூல் நிலையங்கள் உள்ளன.
- உள்ளூராட்சி மன்றங்களின் கீழும் பல நூல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.
- சிறுவர் முதல் முதியோர் வரை ஓய்வு நேரங்களில் வீண்பொழுது போக்காமல் நேரத்தை பயனுள்ள வகையில் அமைக்க நூல் நிலையங்கள் உறுதுணையாகின்றன.
- "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது பழமொழி. "நூல் நிலையம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்" என்பது புதுமொழி. இந்த புதுமொழி மூலம் நூல் நிலையத்தின் சிறப்பு நன்கு புலனாகும்.
- ஊர் தோறும் நூல் நிலையங்கள் தோன்ற வேண்டும்.
- அவற்றின் மூலம் மக்களிடையே வாசிக்கும் ஆர்வம் பெருகும்.
- செல்வம் மிக்கவர்கள் நூல்களைப் பணம் கொடுத்து வாங்க முடியும்.
- ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் நல்ல நூல்களைக் கற்றிட நூல்நிலையங்கள் உதவும்.
- தேன் இருக்கும் இடம் தேடி வண்டுகள் செல்வது போல நல்ல நூல்கள் இருக்கும் நூல் நிலையங்களை நாடி நாம் செல்ல வேண்டும்.
- நல்ல நூல்களை நல்ல நண்பர்களாகக் கொண்டு அவற்றை வாசிப்போம்.
- வாசிப்பை என்றும் நேசிப்போம்.



# துடைப்பது எவர் சப்பாத்தை?




அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிக எளிமையாக வாழும் வழக்கமுள்ளவர். அவர் ஜனாதிபதியாக இருந்த வேளை ஒரு கோடீஸ்வரர் லிங்கனை சந்திப்பதற்காக அவருடைய இல்லத்துக்கு வந்தார். அப்போது அவர் தான் அணியும் சப்பாத்தைத் துடைத்துக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியப்பட்ட கோடீஸ்வரர் கேலியாக "என்ன ஜனாதிபதி அவர்களே! உங்கள் சப்பாத்துக்களை நீங்களே துடைத்துக் கொண்டிருக்கிறீர்களே" என்று கேட்டார். "நீங்கள் இந்த மாதிரி செய்வதில்லையா? அப்படியானால் வேறு எவருடைய சப்பாத்துக்களைத் துடைப்பீர்கள்" என்று கேட்டார் லிங்கன்.
கோடீஸ்வரர் வாயே திறக்கவில்லை.

## எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்கள் ஆக்குவோம்

1. வே/டா/ண்/ம் = ________
2. தி/த்/ரி/கை/ப = ________
3. த்/மூ/ர்/தோ = ________
4. ப/ஞா/ம்/க = ________
5. ல்/பா/ட/க/ள் = ________
6. ழு/ள்/எ/து/ங்/க = ________
7. ம்/ரை/ப்/தி/ப/ட = ________
8. ளி/ற்/கு/ற/வா = ________
9. ழ/ர்/உ/வ/ள்/க = ________
10. பா/வி/ரி/யா = ________



## வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்



# ஏழைக்கெழுத்தறிவிப்போம்

ஓர் அரசன் தன் நாட்டை நீண்ட காலமாக நல்லாட்சி புரிந்து வந்தான். அவன் நீதியும் நேர்மையும் தவறாதவன் இதனால் மக்களால் பெரிதும் போற்றப்பட்டான். அவனுக்கு வயதாகி விட்டதால் தனக்குப் பின் ஆட்சி அமைக்க புதல்வர்களில் ஒருவரைத் தெரிவு செய்ய விரும்பி அதன் பொறுப்பைத் தனது அரச குருவிடம் ஒப்படைத்தான்.
அரச குரு அரச குமாரர்கள் இருவரையும் அழைத்து அரசரின் விருப்பத்தைக் கூறி, அவர்கள் இருவருக்கிடையே போட்டி நடத்தி ஒருவரைத் தெரிவு செய்ய இருப்பதாகக் கூறினார். பின்னர் போட்டி விவரங்களையும் கூறி வைத்தார். இருவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர். போட்டி விதியின்படி மூன்றாம் நாள் அவை கூடியது. குமாரர்கள் அழைத்து வரப்பட்டனர். அரசன் இருவரையும் அன்புடன் தன் அருகில் அமரச் செய்தான். அவர்கள் தமது தந்தையை வணங்கி அமர்ந்தனர்.
முன்னர் கூறியபடி அரச குரு இளைய இளவரசனை நோக்கி "உம்மிடம் ஒப்படைக்கப் போகும் ஆயிரம் பொற்காசுகளை குறிப்பிட்ட காலத்துள் பன்மடங்காக்க என்ன செய்வீர்? நீர் செய்வது நீதியாகவும் நாட்டுக்கு பயனுடையதாகவும் இருக்க வேண்டும்" என்றார். இளையவன் "குருவே எமது நகரில் ஒரு செட்டியார் இருக்கிறார். அவர் வட்டிக்கு பணம் கொடுத்து பெரும் வணிகரானவர். அவரிடம் பணத்தைக் கொடுத்தால் ஒரு வருடத்தில் அதை இரு மடங்காகவும் இரு வருடங்களில் மும்மடங்காகவும், மூன்று வருடங்களில் நான்கு மடங்காகவும் இப்படிப் பல மடங்காகவும் பெருக்கித் தருவார். சிரமமின்றி இருந்த இடத்திலேயே பணத்தைப் பல மடங்காக்கலாம்" என்றான். குருவோ "செட்டியார் நாட்டு மக்களை வருத்தியும் ஏமாற்றியும் தானே வட்டி பெறப் போகிறார். இதனால் மக்கள் தானே துன்பப்படப் போகிறார்கள். இந்தப் பணத்தை நாம் பெறுவது நல்லதா? சரி இப்பணம் நாட்டு நலனுக்கு எப்படிப் பயன்படும்?" என்றார்.
"குருவே பணத்தை அரச களஞ்சியத்தில் சேர்த்து வைக்கலாம். அது பெருந்தொகைப் பணமாக மாறும். நாட்டு நலனுக்கும் செலவிட முடியும்" என்றான் இளையவன்.
குரு புன்னகைத்தபடி மூத்தவனைப் பார்த்து "இளவரசே உமது திட்டத்தைக் கூறும்" என்றார். மூத்தவன் எல்லோரையும் வணங்கி மதிப்புக்குரிய குருவே "நான் எமது நாட்டின் பின் தங்கிய கிராமங்களுக்குச் சென்று அங்கெல்லாம் பாடசாலைகளை அமைப்பேன். அங்கு வாழும் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி பாடசாலைகளுக்கு அழைத்து வருவதோடு, அங்கு பல நல்ல ஆசிரியர்களை நியமித்து கல்வியை வழங்கச் செய்வேன். கல்வி பெற வழியின்றி வாழும் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வியளிக்கவே முழுப் பணத்தையும் செலவு செய்வேன்" என்றான்.
இதைக் கேட்டு இளையவன் பலமாகப் சிரித்து "முட்டாள்தனமான யோசனையால் காசைக் கரியாக்கப் போகிறார் அண்ணன்" என்றான். "தானங்களில் சிறந்தது வித்தியா தானம். இதனைத் தாங்கள் தானே எமக்குப் போதித்தீர்கள். கல்விச் செல்வம் எதனாலும் அழியாது. அள்ள அள்ளக் குறையாது. கள்வரால் திருடப்படவும் மாட்டாது. மேலும் கல்வியில் பணத்தை முதலிட்டால் அது எதிர்காலத்தில் பன்மடங்கு பெருகும். நிலையில்லா பொருட் செல்வத்தை விட நிலையான கல்விச் செல்வமே மேலானது" என்றான் மூத்த இளவரசன்.



"நாட்டை ஆள்பவர்களுக்கு மெய்ப் பொருள் உணர்வும், எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும், எதையும் ஆழ்ந்து ஆராய்ந்து முடிவெடுக்கும் திறனும் தேவை. இவையெல்லாம் ஒருங்கே அமைந்த மூத்த இளவரசருக்கே மணி முடி" என்றார் அரச குரு. சபையில் இருந்தோர் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

**அன்ன யாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோரேழைக்கெழுத்தறிவித்தல்**
**– பாரதியார்**


## மேரிஸ், றோயல் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ், ஊரெழு றோயல் அணிகள் வெற்றிபெற்றன.
அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில், விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:0 என்ற கோல்கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)


யாழ்.மத்தி

## மத்தி. - சென். ஜோன்ஸ் ஒருநாள் ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 15ஆவது 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.
சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஜெனிபிளமிங் தலைமையிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பிரியலக்சன் தலைமையிலும் களமிறங்குகின்றன.
இதுவரை 14 ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 8 ஆட்டங்களிலும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 6 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற வடக்கின் போர் துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இதனால் குறைந்த பட்சம் ஒரு நாள் ஆட்டத்திலாவது வெற்றிபெற்று பதிலடி கொடுக்க வேண்டும் என்ற தேவை மத்திக்கு இருக்கவே செய்கிறது. (ம-23-51)


சென்.ஜோன்ஸ்

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நாளை, நாளை மறுதினங்களில் நடைபெறவுள்ளன. நாளை இடம்பெறும் ஆட்டமொன்றில் வடதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## 2ஆவது ஆட்டம் இன்று

ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. முன்னதாக முடிவடைந்த ரி-20 தொடரை ஆப்கானிஸ்தான் முழுமையாக வென்றது. முதலாவது ஒருநாள் ஆட்டத்திலும் அந்த அணியே வெற்றிபெற்றது. இதனால் இந்த ஆட்டத்தின் மூலமாவது அயர்லாந்து வெற்றிக்குத் திரும்புமா என்ற எதிர்பார்ப்பு உள்ளது. (ம)

## முல்லைக் கழகங்களின் அரையிறுதிகள் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 17
முல்லைத்தீவு கால்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஏ பிரிவு கழகங்களுக்கு இடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளன.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## சோமஸ்கந்தா அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:17, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றது.
மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது. (ம-422)



## கால்பந்தாட்டச் சங்கம் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 17
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழக்கங்களில் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களுக்கான கால்பந்தாட்டச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-23-26)



## கோக்லியின் குற்றச்சாட்டு தவறானதாம்

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்வதற்காக ஆஸ்திரேலிய வீரர்கள் பலமுறை முயற்சித்தனர் என்ற கோக்லியின் குற்றச்சாட்டை ஏற்க இயலாது என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் தெரிவித்தார்.
ஆஸ்திரேலியா-இந்தியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித், யாதவின் பந்துவீச்சில் கோக்லி எல்.பி.டபிள்யு. ஆனார். அவர் நடுவரின் முடிவை எதிர்த்து முறையிடலாமா என்பது தொடரிபில் ஒய்வறைக்கு சைகை காட்டினார். இதனால், இந்திய அணித்தலைவர் கோக்லி உடனடியாக குழப்பமடைந்தார். இதனையடுத்து மைதான நடுவர் நைஜல் லோங் தலையிட்டு சிமித்தை வழியனுப்பி வைத்தார். ஆட்டத்தின் பின்னர் கோக்லி கருத்துத் தெரிவிக்கையில் ஒருமுறை நடுவர் பார்த்துவிட்டார். ஆனால் பலமுறை ஆஸ்திரேலிய வீரர்கள் ஒய்வறையை உபயோகப்படுத்த முயற்சித்தனர் என்று குற்றம் சாட்டினார்.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டத்தின் முன்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கோக்லியின் குற்றச்சாட்டை நிராகரித்தார் சிமித்.
நான் ஒருமுறை அவ்வாறு நடந்து கொண்டதை ஏற்கிறேன். ஆனால் ஆஸ்திரேலிய வீரர்கள் பலர் நடுவரின் முடிவை மறுபரிசிலனை செய்வதற்காக தொடர்ந்து ஒய்வறையை நாடினர் என்று சொல்வதை ஏற்க இயலாது என்று சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## றோயர் பெடரர் இலகு வெற்றி

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் பி.என்.பி. ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார் றோயர் பெடரர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 9 ஆம் இடத்தில் உள்ள வீரரான பெடரரை எதிர்த்து 24 ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் ஸ்ரீவ் ஜோன்சன் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 7:6 என்ற அடிப்படையில் போராடிக் கைப்பற்றினார் பெடரர். அவர் அடுத்த செற்றிலும் வெற்றிபெற்றால் நான்காவது சுற்றுக்கு (காலிறுதிக்கு முந்தைய சுற்று) முன்னேறலாம் என்ற நிலையில் அந்த செற்றையும் பெடரர் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார். (ம)



தெ.ஆபிரிக்கா - நியூசிலாந்து

## முதல் நாளில் 12 இலக்குகள்

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் இரு அணிகளுக்குமாகச் சேர்ந்து ஒட்டுமொத்தமாக 12 இலக்குகள் வீழ்த்தப்பட்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக ராவல் மற்றும் லாதம். 8 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்தவீச்சில் ஆட்டமிழந்தார் லாதம். வில்லியம்சன், புரூம் இருவரும் ரபாடாவின் வேகத்தில் நிலைகுலைந்தனர். 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது நியூசிலாந்து.

நிக்கொல்ஸ் ஒரு முனையில் நிலைத்து நிற்க வற்லிங், நீஸ்கம் இருவரும் சிறுசிறு இணைப்பாட்டங்களை வழங்கினர். அணி 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நீஸ்கம். வற்லிங்கால் முடிந்தது 34 ஓட்டங்கள். ஒரு முனையில் இவ்வாறு தடுமாற்றம் இருந்தாலும் மறுமுனையில் சதம் கடந்தார் நிக்கொல்ஸ். 118 ஓட்டங்களுடன் நிக்கொல்ஸை போல்ட் செய்தார் டுமினி. 268 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து.

பந்துவீச்சில் டுமினி 4 இலக்குகளையும், மோர்கல், ரபாடா, மகாராஜ் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்ப வீரர்கள் இருவரும் ஏமாற்றினர். ஸ்ரீபன் குக்கை 3 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் சவுத்தி. எல்கரை 9 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் கிராண்ட்ஹோம். 12 ஓட்டங்களுக்கு ஆரம்ப வீரர்களை இழந்தது தென்னாபிரிக்கா. நாள் முடிவில் தென்னாபிரிக்கா 24-2 என்றுள்ளது.

ஆட்டத்தின் முதல் நாளே 12 இலக்குகள் வீழ்த்தப்பட்டுள்ளன. மழை குறுக்கிடாமல் இருந்தால் இந்த ஆட்டம் சமநிலையில் முடியாமல் ஏதாவது ஒரு அணியின் வெற்றியுடன் முடிவடையும் என்று பொதுவான எதிர்பார்ப்பு உள்ளது. (ம)

## வென்றது ஆப்கான்

அயர்லாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 30 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முன்வரிசை வீரர்களின் சிறப்பான தொடக்கம் கைகொடுக்க அந்த அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரக்மட் 78 ஓட்டங்களையும், நூர் அலி சடான் 51 ஓட்டங்களையும், மொகமட் செசாட் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கெவின் ஓபிரைன் 3 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து 262 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 30 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான். அயர்லாந்து அணித்தலைவர் போட்டர்பீல்ட் 119 ஓட்டங்களைக் குவித்தார். அணி தோல்வியடைந்தாலும் சதம் விளாசிய காரணத்தால் அவரே ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



## 800

ஆஸ்திரேலிய அணி நேற்றுத் தனது 800 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கியது.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் ராஞ்சியில் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டம் ஆஸ்திரேலிய அணியின் 800 ஆவது ஆட்டமாக அமைந்தது.

இதன்மூலம் 800 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி இரண்டாவது அணி என்ற பெருமையை ஆஸ்திரேலியா பெற்றது.

முடிவடைந்த 799 ஆட்டங்களில் அந்த அணி 377 ஆட்டங்களில் வெற்றி, 214 ஆட்டங்களில் தோல்வி, 206 சமநிலைகளைச் சந்தித்துள்ளது. 2 ஆட்டங்கள் கைவிடப்பட்டன. இங்கிலாந்து அணி 983 ஆட்டங்களில் விளையாடி முதலாவது இடத்தில் உள்ளது. (ம)

## உருக்கமான ரசிகன்

இந்திய மாநிலங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் விஜய் ஹசாரே தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் டோனி களமிறங்கும் போது ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் வந்து டோனியிடம் கையொப்பம் பெற்றுச் சென்ற சம்பவம் உருக்கமான நிகழ்வாகப் பதிவாகியது.

விதர்பா - ஜார்கன்ட் அணிகள் மோதிய இந்த ஆட்டத்தில் ஜார்கன்ட் அணியின் வெற்றிக்கு 44 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் டோனி களமிறங்கினார். அவர் களமிறங்கியபோது மைதானத்தின் பாதுகாப்பு அரணைத் தாண்டிக் குதித்து வந்த ரசிகர் ஒருவர் அவரிடம் கையொப்பம் வேண்டும்-என்ற தனது விருப்பத்தைத் தெரிவித்தார். டோனி கையொப்பமிட்டபோது அந்த ரசிகர் டோனியின் காலில் வீழ்ந்து வணங்கினார். பின் அந்த ரசிகர் வெளியேற்றப்பட்டு ஆட்டம் தொடர்ந்தது. (ம)



## மக்ஸ்வெல் – சிமித் மிரட்டல் ஆட்டம்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் சிமித், மக்ஸ்வெல் ஆகியோரின் மிகச்சிறந்த இணைப்பாட்டத்தால் பலமான தொடக்கம் கண்டது ஆஸ்திரேலியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாக ரென்சொவ் மற்றும் வோர்ணர் இருவரும் களமிறங்கினர். ஆரம்பத்தில் பந்துப்பரிமாற்றத்துக்கு 5 ஓட்டங்கள் என்று அடித்தாடியது ஆஸ்திரேலியா. இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்த நிலையில் 19 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். ஷோன் மார்ஷை வெறும் 2 ஓட்டங்களுடன் அஸ்வின் வீழ்த்தினார். 44 ஓட்டங்களுடன் ரென்சொவ்வுக்கு முடிவு கட்டினார் யாதவ். அவர் ஹான்ட்ஸ்கொம்பையும் வீழ்தினார்.

140-4 என்ற நிலையில் சிமித்துடன் இணைந்தார் மக்ஸ்வெல். இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. அஸ்வின், ஜடேயா என்ற சுழல்பந்து வீச்சுக் கூட்டணி, யாதவ், இசாந் சர்மா வேகப்பந்துவீச்சுக் கூட்டணி உட்பட பகுதிநேரப் பந்துவீச்சாளரான முரளி விஜய் வரை அனைத்தும் முயன்று பார்த்தாயிற்று. இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. சதம் கடந்தார் சிமித். அரைச்சதத்தை நிறைவு செய்தார் மக்ஸ்வெல். பதற்றம் இருக்கவில்லை. தொடர்ந்தும் நிலைத்தார்கள். நாள் முடிவில் ஆஸ்திரேலியா 299-4 என்றுள்ளது. சிமித் 117 ஓட்டங்களுடனும் மக்ஸ்வெல் 82 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டுமாம் கோக்லி

விராட் கோக்லி மைதானத்தில் சில சந்தர்ப்பங்களில் வரம்பு மீறுகிறார். அவர் தனது உணர்ச்சிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரும் கிரிக்கெட் விமர்சகருமான இயன் சப்பல் கருத்துத் தெரிவித்தார்.

இந்திய அணித் தலைவர் கோக்லியும், அவரது தலைமையில் ஏனைய வீரர்களும் மைதானத்தில் அதிக ஆக்ரோசத்துடன் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் கோக்லி அதிகளவில் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டார். அவரது இந்தச் செயற்பாடுகளுக்கு பலரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வரும் நிலையில் இயன் சப்பல் இவ்வாறு தெரிவித்தார்.

களத்தில் வீரர்கள் மோதிக்கொள்வதைத் தடுக்க கிரிக்கெட் சபைகளின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். கடந்த காலங்களில் களத்தில் வீரர்கள் மோதிக்கொண்டபோது ஒழுங்கு நடவடிக்கைகளை முறையாக எடுத்திருந்தால் தற்பொழுது வீரர்கள் மோதிக்கொள்ளும் நிலையே இருந்திருக்காது. இந்திய அணித்தலைவர் கோக்லி அதிகளவில் உணர்ச்சி வசப்படுகிறார். அவர் அதைக் கட்டுப்படுத்தவேண்டும். ஏனெனில் இந்திய அணிக்கு அவர் தலைவர். சாதாரண வீரர் அல்லர். தலைவரின் அளவுகடந்த ஆக்ரோசமும் வார்த்தை மோதல்களும் ஏனைய வீரர்களையும் பாதிக்கும் என இயன் சப்பல் மேலும் தெரிவித்தார். (ம)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1349
சீட்டிழுப்பு திகதி 2017.03.16

வெற்றி இலக்கங்கள்
04 18 39 67 N

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 19,614,615/-

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 18.03.2017
1. காலை 08.00-10.00  3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00  4. மாலை 03.00-05.00

1. திங்கள், புதன் பிரிவுகள் - 20.03.2017 காலை 10-12 மாலை 3-4.30
2. செவ்வாய், வியாழன் பிரிவுகள் - 21.03.2017 காலை 10-12 மாலை 3-4.30

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி குமாரசாமி



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிமீனாட்சிகுமாரசாமிநேற்று(16.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி - கறுப்பிதம்பதிகளின்அன்புமகளும்காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் சத்திய பாமாவின் அன்புத்தாயாரும் லக்குணராஜாவின் மாமியாரும் சங்கீத்தா - ரவீந்திரன். விஜிதரன். கீர்த்திகா - லதீஸ்தரன். அலிஸ்ரன். டேனுகா. ரகுராம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2017) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
தகவல்
குடும்பத்தினர்.

## பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி - யாழ்.நகர்

### I.C.T
பிரபல ஆசிரியர்.
**T. ஆயவன்**
(NDT.HNDIT.BIT)

A/L 2018 - 7.00 A.M
A/L 2019 - 8.00 A.M
A/L 2017 - மீட்டல் வினாவிடை 9.00 A.M
**ஆரம்பம் 18.03.2017**

**Note:- இணுவில் பொருளியற் கல்லூரியிலும் ஆசிரியரின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**

(C28511)

## SUPER BALL
சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 628
சீட்டிழுப்பு திகதி 16.03.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
06 11 29 32 Z

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 54, 173, 483/=

நீல நிற டிக்கட்டுக்கள் 18.03.2017ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் ▶ 25
சீட்டிழுப்பு திகதி ▶ 16.03.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
02 09 34 45 04 மே

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 8, 820, 990/= | 4, 139, 953/= | 1, 587, 004/= |

2017.03.18 திகதி சனிக்கிழமை **இளஞ்சிவப்பு** நிறடிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

### SLAS
பிரிவு-I
சனி, ஞாயிறு
9.00-3.00 மணிவரை
பிரிவு-II
பிரதி ஞாயிறு
9.00-4.00 மணிவரை
பிரிவு-III
திங்கள் தொடக்கம் வியாழன் வரை
பி.ப. 5.00-7.00

### முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு-I
ஞாயிறு
1.00-4.30 மணிவரை
பிரிவு-II
செவ்வாய், வியாழன்
பி.ப. 4.30-6.00 மணிவரை

### தொழில் அலுவலர்
சனி, ஞாயிறு
1.00-5.00 மணிவரை

### வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 1.00-5.00

### வடமாகாண காணி வெளிக்கள போதனாசிரியர்
சனி, ஞாயிறு
2.00-500

தொடர்புகளுக்கு
076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## நடால் முன்னேற்றம்

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் பி.என்.பி. ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் ரபேல் நடால் வெற்றிபெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 5 ஆம் இடத்தில் உள்ள ரபேல் நடாலை எதிர்த்து 26 ஆம் இடத்தில் உள்ள ஸ்பெய்னின் பெர்னாண்டோ மோதினார். மூன்று செற்களைக்கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நடால் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். நான்காவது சுற்றில் நடாலும், பெடரரும் மோதவுள்ளனர். இந்த ஆட்டத்தில் வெற்றிபெறுபவர் காலிறுதிக்கு முன்னேறுவார். (ம)

## தவறிவிட்டது


யாழ்ப்பாணம். பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில் உள்ள இலங்கை வங்கிக்கு முன்பாக HIIUXPICKUP வகை திறப்பு (இரண்டு) 16.03.2017 வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 614 1645, 077 055 3049

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
ஓம் சக்தி துணை

# யாழ்ப்பாணம் நீர்வேலி மத்தி நீர்வேலி
# அருள் மிகு ஸ்ரீ காளி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்



## புதிய மரபில் உருவாக்கம் பெற்ற
## நவ ஸ்ரீ சக்கர சிற்பத்தேர் வெள்ளோட்டமும்
## சிறப்பு மலர் வெளியீடும் தேர்த் திருவிழாவும்

**கனடா வாழ்** "விஸ்வ பிரம்மஸ்ரீ" "ஸ்தபதிதிலகம்" "சிற்ப அரசன்" "சிற்பக்கலைப் பூபதி" **திரு.சரவணாஸ் ஜெயராஜா** (Dip.in Arts) (சிற்பாசாரியார், சரவணாஸ் கலையகம்) அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கம் பெற்ற (மூன்றுமாத கால இடைவெளியில்) **55 ஆவது நவஸ்ரீ சக்கர சிற்பத்தேர்** வெள்ளோட்டமும் வெள்ளோட்ட விழாவும் கடந்த 2017.03.08 ஆம் திகதி மேற்படி ஆலயத்தில் விழாக்குழுத் தலைவர் "மொழியருவி" "வித்தியாரத்தினம்"
**லயன். ஐ.கோ.சந்திரசேகரன் (JP)**
Deputy Chief Marshal (Retired) University of Jaffna.
அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அன்றை தினம் நல்லை ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**சின்மய மிஷன் பிரமச்சாரிய ஜாக்ரத சைதன்யா வதிவிட ஆச்சாரியார்** ஆகியோரின் ஆசியுரையும்
சிறப்பு மலர் வெளியீடும் மேலும் நடைபெற்றன.

2017.03.11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது என்பதையும் அறியத்தருகின்றோம்.

எல்லாம் வல்ல பெருமாட்டியின் திருவருட் கடாச்சத்தினை எண்ணி, எண்ணி அவள் பாதம் பணிகின்றோம்
**"பாதம்தொழுவார் பாவம் தீர்ப்பார்"**

**நீர்வேலி மத்தி, நீர்வேலி.**
**ஆலய அறங்காவலர் சபையினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.